Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
மே 30 - ஜூன் 05, 2013


# வாரமலர் தினமுரசு







THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1016

# பொன்னான ஒப்பந்தம் போட்டுடைத்த தமிழர்கள்



## எதிர்பார்ப்புக்களை எரித்துச் சாம்பலாக்கும் தலைமைகள்




## உலகப் பொருளாதார நெருக்கடி



முரசு வாசகர்களுக்கு உள்ளே
குருப்பெயர்ச்சி பலன்கள்

## இறப்புமில்லை; பிறப்புமில்லை

ஓர் ஆன்மாவானது ஏதோ ஒரு வடிவில் உயிர்ப்புக் கொண்டு செயற்படும்போது, அச்செயற்பாடுகள் நீதியானதும் இறைவனுக்கு உகந்ததாகவும் அமையுமானால், இறைவனின் பார்வை அந்த ஆத்மாவில் என்றும் லயித்திருக்கும்.

அந்த ஆன்மாவுக்கு எந்தவிதமான ஆபத்துக்கள், துன்பங்கள், துயரங்கள் அனைத்தும் நிகழ்ந்து விடாதபடிக்கு இறைவனின் கரங்கள் காத்துக்கொள்ளும். அணைத்து வழி நடத்தும் பொல்லோர் பார்வையிலிருந்தும் அவர்களின் தீய காரியங்களில் இருந்தும் விடுவித்துக்கொள்ளும்.

ஜனனிப்பின் தொடக்கத்தில் துன்மார்க்க வழியில் செல்லும் ஆத்மாக்கள் மீண்டும்... மீண்டும் தங்கள் துன்மார்க்கத்தின் பலனை அறுவடை செய்ய வேண்டியதன் பலனாக இப்புவியில் ஜனனிப்பதாக கூறப்படுகிறது.

இறவாமலும் பிறவாமலும் இறையருளுடன் ஒன்றித்திருப்பதற்கு பிறப்பின் பயன் உணர்ந்து செயற்கரிய நற்செயல்களை இறைவனின் பார்வைக்கு விரோதமில்லாமல் செய்யும் ஆத்மாக்களுக்கு மீண்டும் பிறப்புமில்லை; மீண்டும் இறப்புமில்லை.

அனந்த நாராயணன், கைவேலி.

## சினம் வெளிப்படும் நாளில்...

ஆன்மீகம்

தாம் வாழும் காலத்தில் பெரும்பாலானவர்கள் ஓடி... ஓடி உழைத்து பொருளீட்டுவதிலும், செல்வங்களைச் சேமித்து வைப்பதிலும் கண்ணாக இருக்கிறார்கள். நேர்வழியில் உழைத்துப் பொருள், பண்டம் தேடுவோர் ஒருபுறமிருக்க, குறுக்குவழிகளிலும், தீய வழிகளிலும் நாடிச் சென்று செல்வம் தேடுவோரே இன்று அதிகமெனவாக உள்ளனர்.

மனித வாழ்க்கைக்கு செல்வம் என்பது தேவையானதொன்றாக இருந்தாலும், அதை அளவுக்கு மீறித் தேடிக்கொள்வது கர்த்தரின் பார்வையில் அருவருப்பானதாகும்.

சில மனிதர்கள் பணம் இருந்தால் வாழ்க்கையில் எதையும் சாதித்துக் கொள்ளலாம்... என்று நினைத்து அதைத் தேடுவதற்கான செயற்பாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இப்படியாக அவர்கள் தங்கள் செயற்பாட்டினை முன்னெடுக்கும்போது அது தவறான வழியாக இருக்குமானால் "கர்த்தரின் சினம் வெளிப்படும் நாளில் செல்வம் பயன்படாது (நீதி மொழிகள்– 11:4)" என்பதை அவர்கள் மனதில் கொள்ளத் தவறிவிடுகிறார்கள்.

சாமுவேல், புதுக்குடியிருப்பு.

## அல்குர் ஆனின் அறப் போதனைகள்

மனுக்குலத்துக்கு ஒளிதரும் ஓர் தீபமே அல்குர் ஆன். இத் தீபத்திற்கு ஒளியூட்டியவன் அல்லாஹ். இந்த மாசகற்றும் மாமறையை இவ்வையகம் எங்கும் இறை தூதர் அவர்கள் இலங்க வைத்தார்கள். இது பிரபஞ்சம் எங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

நீங்கள் அல்லாஹ்வின் மீதும், அவன் தூதரின் மீதும், அவன் இறக்கி வைத்த திருமறையான ஒளியின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். இன்னும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

அல்குர் ஆன் 64 : 8

மேலும் அல்குர் ஆன் அகில மக்களுக்கு அழைப்புவிடுக்கிறது. அல்லாஹ்வுக்குப் பொருத்தமானதையும், இணக்கமானதையும் எவர்கள் பின்பற்றுகிறார்களோ, அவர்களை அல்லாஹ் அதன் மூலமாக ஈடேற்றம்காணும் வழியில் செலுத்துகின்றான். இன்னும் அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்ற தன் நாட்டத்தால் ஒளியின் பக்கம் கொண்டுவிடுகிறான். இன்னும் அவர்களை நேரான வழியில் செல்லும்படி செய்கிறான்.

அல்குர் ஆன் 5:16

அல்லாஹ் குறிப்பிடும் ஒளி மனித குலத்திற்கு மகத்தானது. அதுவே அல்குர் ஆனின் அறப்போதனைகள்.

எம்.சீ.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1013



### தேவைதானா?

பாராட்டுக்குரியது

இச்சிறு பரம்பரை
ஏழை இனத்தவரை
ஆளவும் - ஓர்
அரசன் - அவன்
கோடிப் பணத்தோடு(ம்)
மாடிமனைக்
காவலோடும்...
அவனிருந்தும்
அகதிகளாய்
குந்துமிடமின்றிக்
குழாய்களுக்குள்
நிந்தைக்குரிய
இவர்களுக்கும்
ஓர் அரசன்
தேவைதானா?

பாண்டியூர்
பொன்.நவநீதன்

## கவிதைப் போட்டி இல 1016



### விதி வழி

பொல்லாதார் செய்
வினையானாலும்
இல்லாதாருக் கெங்கும்
ஊண் உறையுளுண்டு
வல்லான் வகுத்த வாழ்நெறி
விதி வழிதனை
எல்லாம் தொகுத்து
நோக்கின்
இல்லை துயர்
ஆருக்குமே!

-கிண்ணியா முத்தாலிப்-

### இன்று - நாளை?

ஏழை ஒருவர்
சுதந்திரமாய் வாழ்வதற்கு
சொந்த.வீடு கட்டுவது என்பது
சொர்க்கத்தை காண்பது
போல் இருக்கும்...
எண்ணங்கள் எல்லாம்
காலத்தின் கனவாகவே இருக்கும்.
காரணம்!
விலைவாசியேற்றம்
இன்று
இப்படி வாழ்கிறோம்
நாளை எப்படி வாழ்வது?

A.பாரிஸ், மிகிந்தலை

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11. 06. 2013

கவிதைப் போட்டி இல. 1016 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### சமையலில் மீதி

வறுமைக் கோட்டின் கீழ்
வாழுகின்ற இவர்கள்
தஞ்சம் அடைந்திருப்பது
தண்ணீர் குழாய்க்குள்
ஏதோ உணவு
இவர்களுக்கு சமைக்க
சம்பளம் பாட்டிக்கு...

எச்.சி.கலீல்,
கல்முனை-05

### பேதமைக் குழாம்

பழித்தோர்க்கு
உத்தியோகமில்லை
பாமரர்க்கு கூலி வேலை இல்லை
வயிற்றைக் கழுவிக் கொண்டு
வாழ்நாளைக் கழிக்க
வழி ஏதுமில்லை
போராளிக் குழுக்களின்
மாயவலையில் வீழ்ந்து
வெற்றிகொள்ள முடியா
இயக்கத்தில் இணைந்து
தன்னுயிரை தாரை
வார்த்ததுமன்றி
ஏதிலியர் தொகையையும்
பெருக்கிச் சென்றனர்
பேதமையில் மூழ்கிய
இளைஞர் குழாம்.

க.கமால்தீன், ஏறாவூர் -03

### இது போதும்...

இந்திய வீட்டுத்திட்டமுமில்லை
இத்தாலிய கழிப்பறை
திட்டமுமில்லை
இருப்பதோ இந்த 'போக்கு' மட்டுமே
இருந்திட்டுத்தான் போய் விடுவோமே
இனியும் யார் வந்து தரப்போயினம்
இனிய வீட்டுத் திட்டத்தினை
இலவுகாத்த கிளி போல் நாமிங்கு...

அலாவுதீன் A.L.A VAH
திருகோணமலை.

### உல்லாசபுரி

கூட்டு வாழ்க்கை கூட்டுச் சமையல்
சாக்கடை நீர் செல்லும்
'கொங்கிறீட்' உருளைகளில்
தனித்தனி அறைகள்
இருக்க இருப்பிடமில்லா
இவ் வகதிகளுக்கு
இதுவே உல்லாபுரி.

அ.சந்தியாகோ.
கண்டி.

## உங்கள் பக்கம்

### போக்குவரத்துப் பொலிசாரின் கவனத்திற்கு...!

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் பொதுவாகதுவிச்சக்கர வண்டி பாவனையாளர்களே அதிகமாகக் கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. வீட்டுக்கு வீடு மோட்டார் சைக்கிள்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருக்கின்ற சூழலிலும் துவிச்சக்கர வண்டிகள் கணிசமான அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அபிவிருத்தியின் பலனாக பல வீதிகளும் காப்பெற் செய்யப்பட்டுள்ளதாலும், பயணிக்கின்ற வாகனங்கள் பல சந்தர்ப்பங்களில் கட்டுப்பாடற்ற வேகத்தில் செல்வதும் அவதானிக்கப்படுகிறது.

எனினும் துவிச்சக்கர வண்டிப் பாவனையாளர்கள், குறிப்பாக பாடசாலை மாணவ, மாணவியர் சீறிவரும் மோட்டார் வாகனத்தைச் கவனத்தில் கொள்ளாது ஒன்றுக்கொன்று சமாந்தரமாக பயணிப்பதால் பல்வேறு வீதி விபத்துக்களுக்கு ஏதுவான நிலையை ஏற்படுத்துகின்றன.

இதுதொடர்பில் போக்குவரத்துப் பொலிசாரும் போதிய கவனம் செலுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டு காணப்படுகின்றது.

இதுசம்பந்தமாக உரியவர்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டு உரிய முறையில் கவனம் செலுத்தப்படாததன் விளைவாக குறித்த விடயத்தை தினமுரசின் உங்கள் பக்கத்திற்கு கொண்டுவருகின்றேன்.

எம்.சிதம்பரம், யாழ்ப்பாணம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com




## வாசகர் சாலை

### நிறைவேறியது வேண்டுகோள்?

முரசில் மாற்றங்களை விரும்பியவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். அந்தவகையில் இரண்டு கிழமையாக பலவிதமான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளது.

வாசகர்களின் வேண்டுகோளை மட்டுமல்லாது எம்மை கவரும் விதத்தில் அமைந்துள்ளது. மருத்துவ ரீதியான ஆலோசனைகள். க்ரைம் போன்றவை புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.

இன்னும் இதைவிட விடயங்களை முரசு, வாசகர்களாகிய எமக்கு அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எம்.ஷர்மி, காலி.

### சமபங்கு தேவை!

தினமுரசுக்கு வணக்கம்!

அற்புதன் காலத்திலிருந்து வாசகனாய் இருந்து வருகின்றேன் என்பதில் பெருமிதம் கொள்கின்றேன். இளமையிலிருந்து முதுமைப் பருவம் அடைந்து என்னால் இயங்க முடியாத இன்றைய நிலையிலும் தினமுரசை வியாழன்தோறும் புரட்டத் தவறுவதில்லை.

எப்போதும் பக்கங்களின் எண்ணிக்கை என்பது பெரிய காரியமல்ல. அதில் அடக்கப்படும் பல்சுவையான அம்சங்களே எப்போதும் எமக்கு உதவும். பாப்பா தகவல்கள், குறுக்கெழுத்து மற்றும் இன்னோரன்ன விடயங்களையும் விரும்பி வாசிப்பதுண்டு.

'தேன்கிண்ணம்' பக்கத்தில் கூடுதலாக முஸ்லிம் கவிஞர்களுக்கு அதிக இடம் ஒதுக்குவது போன்று தெரிகிறது. எமது கவிஞர்களுக்கும் சேர்த்து அவர்களுடன் சரிசமமான இடத்தை ஒதுக்க வேண்டுமென தினமுரசின் தேன்கிண்ண ஆசிரியருக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன். வாழ்க தினமுரசு! வளர்க தினமுரசு!

சி.மணிவண்ணன். அளுத்மாவத்தை.

### எதிர்பார்ப்பு!

கடந்த இரண்டு வாரங்களாக ஊரோடி எழுதிவருகின்ற குற்றச்சாட்டுக்கள் பற்றிய புலனாய்வுக் கட்டுரைகள் சிறப்பாக இருக்கின்றது.

தொடர்ந்தும் குறித்த பகுதி வெளிவரும் என்ற நம்பிக்கை இருப்பதால் தினமுரசை வாங்க வேண்டும் என்ற ஆவல் அதிகரிக்கிறது. அதேபோன்று அண்மைக்காலங்களாக ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள். சேர்க்கப்படுகின்ற உள்ளீடுகள் என்பவையும் மகிழ்ச்சி அளிக்கின்றது. அவை மேலும் தரமுடனும், தாக்கம் அளிக்கும் வகையிலும் அமையவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

ஏன். சங்கவி, வட்டுக்கோட்டை.

# கூட்டமைப்பின் திறனற்ற நிர்வாகத்தால் அபிவிருத்தி நிதி திரும்பும் நிலை

## தடுத்து நிறுத்த சந்திரகுமார் எம்.பி முயற்சி

கூட்டமைப்பின் ஆட்சியின் கீழிருக்கும் தென்மேற்குப் பிரதேச சபையினால் ஒரு வருடத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வடலியடைப்பு வள்ளவாய்க்கால் நிர்மாணப்பணிகள் இன்னும் நிறைவடையாமையினால் குறித்த அபிவிருத்திப் பணிக்காக ஒதுக்கப்பட்ட 4.5 மில்லியன் ரூபா மீண்டும் திறைசேரிக்குத் திரும்பும்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனை அறிந்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் குறித்த விடயத்தில் தலையிட்டு அதனைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.



தேங்கிக் கிடக்கும் அபிவிருத்திப் பணி பற்றி வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் ஜோன்சனினால் சந்திரகுமார் எம்.பிக்கு எடுத்துரைக்கப்பட்டபோது...

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, வலி. தென்மேற்குப் பிரதேச சபையினால் திட்டமிடப்பட்ட குறித்த அபிவிருத்திப் பணிகளில் குறைபாடுகள் இருந்தமையால் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினால் வேலைகள் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தன.

குறித்த அபிவிருத்திப் பணியில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த பிரதேச சபையின் அசமந்தப் போக்கினால் குறித்த வேலையைத் துரிதப்படுத்துவதற்கான செயற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்படாத நிலையில் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மீண்டும் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விடயத்தில் கவனம் செலுத்திய ஈபி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், குறித்த நிதி திரும்பும்பட்சத்தில் எதிர்காலத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான நிதி வளங்களைப் பெற்றுக்கொள்வது கேள்விக்குறியாகிவிடும் என்பதனால் சரியான தொழில்நுட்ப நடைமுறைகளைக் கையாண்டு இன்னும் ஒரு மாத காலத்திற்குள் குறித்த வேலையை நிறைவு செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி அதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள புத்திஜீவிகள், வெறுமனே உணர்ச்சிகரமான பேச்சுக்கள்மூலம் வாக்குவேட்டை நடாத்தி அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கிடைக்கின்ற அதிகாரங்களை மக்களுக்குப் பயன்படும்வகையில் வேலைத் திட்டங்கள் எவற்றையும் மேற்கொள்வதில்லை என்பது இதன்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

## உட்கட்டமைப்பு வசதிகளை பெருக்க வெளிநாட்டு முதலீடுகள் அவசியம்

முப்பது ஆண்டு கால யுத்தத்தின் பின்னர் முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடும் இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளை பெருக்குவதற்கு இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகள் அவசியம் என்றும், இலங்கை சிங்கப்பூரைப் போன்று கப்பல் சேவையிலும், துறைமுக சேவையிலும் வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறதென்றும் சீன ஆய்வாளரான ஹு சென் செங் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இலங்கை, சிங்கப்பூரின் பாணியில் கப்பல் போக்குவரத்து சேவையிலும், துறைமுக சேவையிலும் சிறந்த முறையில் முன்னேற்றமடைந்து வருகிறது. இலங்கை இயற்கை வளங்களினாலும், அமைவிடத்தாலும் தெற்காசியாவில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்துள்ளதாக அமைந்திருப்பதாலும் அந்நாடு தெற்காசியாவில் அதிமுக்கியத்துவத்தை பெற்றிருக்கிறது என்றும் சீனாவின் சம்பிரதாயபூர்வமான சர்வதேச உறவுகள் ஆய்வு நிலையத்தின் ஆய்வாளரான ஹு சென் செங் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

## தாராளமாக புழங்குகின்றது போலி நாணயத்தாள்

நாட்டின் பல பகுதிகளில் போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். யடியாந்தோட்டை, கொஸ்கொட மற்றும் செவனகல ஆகிய பிரதேசங்களில் இவ்வாறு போலி நாணயத்தாள் புழக்கத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது. 500 ரூபா, 100 ரூபா மற்றும் 2000 ரூபா நாணயத் தாள்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. இந்த சம்பவத்துடன் போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன. எனவே, பணத்தைப் பயன்படுத்தும்போது, பொதுமக்கள் போலி நாணயத்தாள்கள் குறித்து கவனம் செலுத்தவேண்டுமென காவல்துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

## நூல் வெளியீடு

யோ.புரட்சியின் 'இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய்' என்னும் கவிதைத் தொகுதி வெளியீடு நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி பிற்பகல் 1.00 மணியளவில் முல்லைத்தீவு பாரதி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழகக் கவிஞர் அறிவுமதி அவர்களின் நல்லாசியுடன், சூரியன் F.M. வானொலி அறிவிப்பாளர் ரி.எஸ் முகுந்தன் தலைமையில் இவ்விழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமூகத்தின் ஏக்கங்களும் எதிர்பார்ப்புக்களும் சுட்டெரிக்கப்படுகின்றன!



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

**"ஒரே கட்சிக்குள், ஒரே சமூகத்திற்குள் உருவான பிரச்சினைதான். இதனைச் சமூகமாகத் தீர்த்துவைக்க முடியாத இந்த சமூகத்தலைவர்கள், எவ்வாறு ஒட்டு மொத்த ஒரு சமூகத்தினதும் இன்னொரு சிறுபான்மை சகோதரத் தமிழ் சமூகத்தினதும் பிரச்சினைகளைத் தீர்க்க உதவப் போகின்றார்கள் என்பது பெரிய கேள்விக்குறி."**

முஸ்லிம் சமூகம் சிதறுண்டு சின்னாபின்னப்பட்டுக் கிடக்கின்றது என்பதற்கு கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்திலுள்ள சாய்ந்தமருது எனும் ஊரில் இடம்பெற்ற ஒரு வாசிகசாலைத் திறப்பு விழா ஒரு சிறந்த உதாரணமாகும்.

வாசிகசாலைத் திறப்பு விழா நடத்தப்படக் கூடாது என இலங்கை வரலாற்றின் முதலாவது முஸ்லிம் முதலமைச்சர் எனப் பெயர் பெற்ற கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் உத்தரவிட்டிருந்தார்.

அந்த உத்தரவை மீறி இலங்கையின் நீதியமைச்சரும் முஸ்லிம் சமூகத்தின் அதிகபட்ச ஆதரவைப் பெற்ற கட்சி எனக் கூறிக்கொள்ளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான றவூப் ஹக்கீம் வாசிகசாலையைத் திறந்து வைத்துள்ளார்.

சாய்ந்தமருதில் மீனவர்களுக்காக ஒரு வாசிகசாலை அமைக்கப்பட்டது. இந்த வாசிகசாலையைத் திறந்துவைப்பதில் இந்த இரு சாராருக்கும் எந்தவிதமான இருவேறு கருத்துக்களும் கிடையாது.

கரையோர மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்காக ஒரு வாசிகசாலையைத் திறந்துகொடுப்பது எல்லா வகையிலும் மேலானது.

ஆனால், சர்ச்சை எங்கே ஆரம்பித்தது என்று பார்த்தால் வாசிகசாலைக்குப் பெயர் வைப்பதில்தான் இழுபறி தொடங்கியது.

இது ஒரு எதிர்க்கட்சிகளாலோ அல்லது மறைமுகமாக சூழ்ச்சி செய்யும் ஒரு தரப்பினராலோ தூக்கிப்பிடிக்கப்பட்ட ஒரு பிரச்சினையல்ல.

ஒரே கட்சிக்குள், ஒரே சமூகத்திற்குள் உருவான பிரச்சினைதான். இதனைச் சமூகமாகத் தீர்த்து வைக்க முடியாத இந்த சமூகத் தலைவர்கள், எவ்வாறு ஒட்டுமொத்த ஒரு சமூகத்தினதும் இன்னொரு சிறுபான்மை சகோதரத் தமிழ் சமூகத்தினதும் பிரச்சினைகளைத் தீர்க்க உதவப்போகின்றார்கள் என்பது பெரிய கேள்விக்குறி.

கல்முனை மாநகர சபையில் ஆளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த உறுப்பினரான மேயர் உட்பட 11 பேர் இருக்கின்றார்கள். எதிர்க்கட்சியில் 8 பேர் இருக்கின்றார்கள்.

கல்முனை மேயர் மீராஸாஹிபு சிராஸ் இந்த சாய்ந்தமருது மீனவர் வாசிகசாலையைத் திறந்து வைப்பதில் அதீத அக்கறை காட்டினார்.

இவர் தனது தனிப்பட்ட சுயநல அரசியலுக்காகவே இவ்வாறு அதிக அக்கறை எடுக்கிறார் என்றும் மாநகர மேயர் பதவியை தான்தோன்றித்தனமாக துஷ்பிரயோகம் செய்கின்றார் என்றும் அவரது அணியிலே உள்ள ஏழு உறுப்பினர்கள் நீண்டகாலமாகக் குற்றஞ் சாட்டி வருகின்றனர். அத்தோடு மாநகர சபையின் கூட்ட அமர்வுகளையும் பகிஷ்கரித்துமுள்ளனர்.

சாய்ந்தமருது மீனவர் வாசிகசாலைக்குப் பெயர் வைப்பதில் கல்முனை மேயர் ஆளுங் கட்சியின் ஏனைய உறுப்பினர்களைக் கலந்தாலோசிக்காது தனது தந்தையின் பெயரைச் சூட்டியுள்ளார் என்பதே குற்றச்சாட்டு.

தற்போது குறிப்பிட்ட மேயரின் தந்தையின் பெயரைத் தாங்கிய வாசிகசாலை கடைசியில் நீதியமைச்சர் ஹக்கீமின் தலையீட்டினால் திறந்துவைக்கப்பட்டது. எனினும் இந்த திறப்பு விழாவிற்கு கல்முனை மாநகர சபையின் பிரதி மேயர் உட்பட ஆளுந்தரப்பிலுள்ள ஏழுபேரும் அவர்களது ஆதரவாளர்களும் பகிஷ்கரித்தனர்.

இங்கு மாநகர சபையின் செயற்பாட்டில் கிழக்கு மாகாண முதல்வர் தலையிட்டமை, அவரை மீறி நீதியமைச்சர் திறந்து வைத்தது போன்றவை தொடர்பாகவும் காணப்படுகின்ற அதிகார வரம்பு பற்றி விவாதங்களும் விமர்சனங்களும் ஒருபுறமிருக்க, ஒரு ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட கட்டமைப்பினுடைய மேஜர் தமது சகாக்களின் ஆலோசனைகளைக்கூட மதிப்பளிக்காமல் தான்தோன்றித்தனமாக செயற்பட்டிருப்பது யாராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும். பெரும்பான்மையானவர்களின் கருத்துக்களை அறிந்து அதற்கு மதிப்பளித்து செயற்படுவது ஜனநாயக விழுமியங்களில் முதன்மையானது. அது இங்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் தனது கட்சியைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்களையும் கவனத்தில் கொள்ளாது மேஜரின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் நடந்து கொண்ட விதம் பலரையும் முகஞ்சுழிக்க வைத்துள்ளது. இது தவறான முன்னுதாரணமாக அமையுமென சமூக ஆர்வலர்கள் கருதுகின்றனர்.

நூல்கத்தைத் திறந்து வைத்த அமைச்சர் ஹக்கீம் தனது கட்சியின் உறுப்பினர்களும் அவர்களது ஆதரவாளர்களும் இந்த விழாவைப் பகிஷ்கரித்ததைப் பற்றி வேதனை வெளியிட்டு உரையாற்றினார்.

அவ்வுரையில், இனிவரும் காலங்களில் இவ்வாறு நடந்துகொண்டால் ஒரு பொறுப்பு வாய்ந்த கட்சி என்ற ரீதியில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதைத் தவிர எனக்கு வேறு வழியிருக்காது என்று தனது மன ஆதங்கத்தை வெளியிட்டார்.

அதேவேளை அதிருப்திப்படும் உறுப்பினர்களையும் அரவணைத்துக் கொண்டு கல்முனை மேயர் செயலாற்றவேண்டும் என்று நான் மிக மிகக் கடுமையாக அவரிடம் வலியுறுத்துகின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

என்னதான் நளினமாகப் பேசி சமாளிக்க முயற்சித்தாலும் ஆளுமையற்ற, விருப்பு வெறுப்புக்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுகின்ற சமூகத் தலைமைத்துவங்களால் சமூகத்தின் ஏக்கங்களும் எதிர்பார்ப்புக்களும் சுட்டெரிக்கப்படுகின்றன என்பதுதான் யதார்த்தம்.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## நல்லதோர் ஆரம்பமாகட்டும்!!

யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவ முகாம்களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்வதற்கு இராணுவம் முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்தச் செய்தி தமிழ் மக்களிடையே அரசின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பதினேழு படை முகாம்களை மூன்றாக குறைப்பதற்கு இராணுவம் முடிவு செய்துள்ளது. ஏற்கெனவே யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் அதிகரித்திருந்த இராணுவ பிரசன்னம் கணிசமான அளவில் குறைந்திருந்தது. தற்போது மேலும் இராணுவ பிரசன்னம் குறைகின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

யுத்தத்திற்குப் பின்னர் பொது மக்களின் விவகாரங்களிலும், சாதாரண நிகழ்வுகளிலும் தேவையற்ற இராணுவ பிரசன்னம், தலையீடு என்பன வடக்கில் உள்ளது என்ற குற்றச்சாட்டுக்களும், அதிகரித்த இராணுவ பிரசன்னமானது சுமூக சூழல் ஒன்றுக்கான தடையாக இருப்பதாகவும், மக்கம் வாழும் பகுதிகளிலிருந்து இராணுவம் அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்றும், வடக்கிலிருந்து இராணுவம் அகற்றப்பட்டு சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டுகின்ற பணியில் முழுமையாக பொலிஸார் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் பல்வேறுபட்டவர்களின் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுவந்தது.

வடக்கில் மாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறும் என அரசு கூறிவருகின்ற நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள படை முகாம்களை குறைத்து படையினரை குறிப்பிட்ட வலயத்துக்குள் வைக்கவும், முடியுமான வரை தற்போது படையினரின் பாவனையிலுள்ள பொதுமக்களின் நிலங்களையும், வீடுகளையும் உரியவர்களிடமே ஒப்படைக்கவும், தவிர்க்க முடியாமல் படையினருக்கு அவசியமாகவுள்ள நிலங்களுக்கான பெறுமதியை உரியவர்களுக்கு வழங்கவும் இராணுவம் முடிவுசெய்துள்ளதாக அறிவித்துள்ளதானது அரசின் நல்லெண்ண சமிக்ஞையாகவே தெரிகின்றது.

அதேவேளை வடக்கில் முக்கியமான பொருளாதார கேந்திர முக்கியத்துவமுடைய இடங்களாக மாறவுள்ள பலாலி விமானப்படைத்தளம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றை விஸ்தரிப்புச் செய்து அபிவிருத்தி செய்வதற்காக சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணி தேவையாக இருப்பதாகவும், இத்திட்டத்தில் உள்வாங்கப்படும் தனியார் காணிகளுக்கான பெறுமதியை அரசு வழங்குமெனவும் கூறியிருப்பதும் ஆறுதலாகும்.

தூர நோக்கற்ற அரசியல் தலைமைகளும், உள்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முற்படும் வெளிநாடுகளும், சதிகளை செய்யும் அமைப்புக்களும் எதைக் கூறினாலும் அதற்கு தமிழ் மக்கள் பொறுப்பாளிகள் அல்லர் என்பதை இலங்கை அரசும், பெரும்பான்மை மக்களும் புரிந்து கொள்வது அவசியமாகும். தமிழ் மக்களின் மனங்களை வெல்லவும், சம உரிமையுடனான ஐக்கிய வாழ்வு இலங்கையில் அமையும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமான நல்லெண்ண செயற்பாடுகளுமே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அதற்கான முயற்சிகளின் ஆரம்பமாக யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவ முகாம்களின் குறைப்பு அமையட்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# பொன்னான ஒப்பந்தம் போட்டுடைத்த தமிழர்கள்

**புலிகள் தேர்தலில் போட்டியிடுவதையும், யார் ஆளுகின்ற தலைமையாக இருக்கவேண்டுமென்பதை மக்களே தெரிவு செய்யவேண்டும் என்பதையும் விரும்பவில்லை. தாம் ஏந்தியிருக்கும் ஆயுதங்களை விடவும் மக்களின் வாக்குகள் வலிமைமிக்கதல்ல என்று நம்பியதால் தேர்தல்கள் நடத்தப்படாமல் நேரடியாகவே தம்மிடம் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டனர். புலிகளின் ஜனநாயக மறுப்புக் கோரிக்கையை ராஜிவ்காந்தி ஏற்க மறுத்ததோடு புலிகளை வேறு வடிவத்தில் யோசிக்குமாறும் கூறினார்.**



இந்திய - இலங்கை ஒப்பந்தம், 1987 அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் இடையே யூலை 29, 1987ஆம் ஆண்டு ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் ஆகும். இந்த ஒப்பந்தம் இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல்மொழி நாடாக ஏற்று வடகிழக்கை தமிழ் - முஸ்லீம் மக்களின் இணைந்த தாயகப் பிரதேசமாக ஏற்று தமிழ் மொழியை அரச மொழியாகவும் ஏற்று மாகாண சபைகளூடான அதிகாரப் பரவலாக்கத்தை முன்வைக்கின்றது. இவ் ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்தப்பட்ட வடகிழக்கு மாகாண சபை பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் செயற்படாமல் போனது.

குறித்த ஒப்பந்தமானது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாரம்பரிய நட்புறவை ஆதரித்துத் தீவிரப்படுத்தி மேலும் வலுப்படுத்துவதின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டும், இலங்கையின் இனப் பிரச்சினைக்கும் அதன்விளைவான வன்செயல்களுக்கும் தீர்வு காண வேண்டியதன் தவிர்க்க முடியாத அவசியத்தையும் இலங்கையிலுள்ள சகல சமூகங்களையும் சேர்ந்த மக்களின் பாதுகாப்பு, நலன்புரி நடவடிக்கைகள், சுபீட்சம் ஆகியவற்றை உணர்ந்தும்,

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பின்வரும் உடன்படிக்கையை இந்தத் தினத்தில் ஏற்படுத்திக்கொண்டார்கள்.

1. இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணிக்காக்க விரும்பி,

2. இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் ஆகியோரைக் கொண்ட பல்லின, பன்மொழி சமூகங்கள் வாழும் நாடு என்பதை உணர்ந்து,

3. மிகக் கவனமாகப் பேணிக் காப்பாற்ற வேண்டிய தனித்தனிக் கலாசாரம், மொழி அடையாளங்களை ஒவ்வொரு இனமும் கொண்டுள்ளதென்பதையும்,

4. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அங்கு ஏனைய இனக்குழுக்களுடன் எல்லாக் காலத்திலும் ஒன்றாக வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வரலாறுபூர்வமான வசிப்பிடங்கள் என்பதையும் அங்கீகரித்து,

5. இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகிய அம்சங்களைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த சகல பிரஜைகளும் சமத்துவமாகவும், பாதுகாப்பாகவும், ஒற்றுமையாகவும் சுபீட்சத்துடன் தங்கள் அபிலாசைகளை நிறைவேற்றி வாழும் பல இன, பல மொழி பேசும் பல மதங்களைக் கடைப்பிடிக்கும் தன்மையைப் பேணி,

பின்வரும் உடன்பாட்டிற்கு வருகிறோம்:

1. இலங்கை அரசாங்கம் அருகருகேயுள்ள மாகாணங்களை ஒரு நிர்வாக அலகாகச் சேர்த்துக் கொள்ளக்கருதும் கீழ் விவரிக்கப்பட்டவாறு வடக்கு, கிழக்கு என்று அவற்றைப் பிரிக்கும் பட்சத்தில் சர்வஜன வாக்கெடுப் பொன்றை நடத்துவது என்றும்,

2. மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் திகதியில் இருந்து 3இல் தெரிவிக்கப்பட்ட வாறு சர்வஜன வாக் குரிமை நடத்துவது திகதி வரையான காலப் பகுதி இடைக்காலப் பகுதியென்று கருதப் படும். 8ம் வாசகத்திற்கு அமைய சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் வரை தற்போதுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரு மாகாண சபையை உள்ளடக்கிய ஒரு நிர்வாக அலகாக இருக்கும். இத்தகைய அலகில் ஓர் ஆளுநர், ஒரு முதலமைச்சர், ஓர் அமைச் சரவை ஆகியன செயற்படுவர்.

இவ்வாறு முன்மொழியப்பெற்ற விடயங்களே 13ஆவது திருத்தச் சட்டத்தில் முதன்மை இடம் வகிக்கின்றன.

ஏற்கெனவே பல தடவைகளில் முரசில் குறிப்பிட்டதுபோல் மாகாண சபையை ஏற்றுக் கொண்டு தமிழ் தரப்புகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நடைமுறையிலேயே தீர்த்து வைத்திருக்கலாம்.

புலிகள் தேர்தலில் போட்டியிடுவதையும், யார் ஆளுகின்ற தலைமையாக இருக்கவேண்டுமென்பதை மக்களே தெரிவு செய்யவேண்டுமென்பதையும் விரும்பவில்லை. தாம் ஏந்தியிருக்கும் ஆயுதங்களை விடவும் மக்களின் வாக்குகள் வலிமைமிக்கதல்ல என்று நம்பியதால் தேர்தல்கள் நடத்தப்படாமல் நேரடியாகவே தம்மிடம் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டனர். புலிகளின் ஜனநாயக மறுப்புக் கோரிக்கையை ராஜிவ் காந்தி ஏற்க மறுத்ததோடு புலிகளை வேறு வடிவத்தில் யோசிக்குமாறும் கூறினார்.

புலிகள் ராஜிவ்காந்தியை நேரடியாக எதிர்க்கமுடியாத காரணத்தினால் தேர்தல் மற்றும் சாதாரண போக்குகளில் பொருத்தமற்றவர்களை நியமிக்க முற்பட்டனர். அதற்கு இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இணங்கமாட்டார் என்று பிரபாகரன் எதிர்பார்த்தது நடந்தது.

பிரபாகரன் ஆயுத வன்முறையை நம்புகின்ற அளவுக்கு அரசியல் ஜனநாயக செயற்பாடுகளை நம்பவில்லை என்பதை புரிந்து கொண்ட ராஜிவ்காந்தி புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் நாட்டமுள்ள தரப்புகளை போட்டியிடுமாறு ஊக்குவித்தார்.

தேர்தலில் போட்டியிடத் தயாரான தமிழ் அமைப்புக்களுக்கு எதிராக புலிகள் தாக்குதலை தொடுத்தார்கள். வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப். வெற்றி பெற்றது.

இந்திய மத்திய அரசு பின்பலமாக உதவியது, சம காலத்தில் இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு மற்றும் அமைதி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அதே பின்னணியில் வடக்கு கிழக்கிலிருந்த இலங்கை இராணுவத்தினர் முகாம்களுக்குள்ளேயே முடங்கியிருந்தனர்.

மாகாண சபை ஏற்படுத்தப்பட்டதும், அதன் பின்னணிப் பலமாக இந்திய படையினர் இருப்பதும் புலிகளின் தனி ஈழப் போராட்டத்தை கேலிக்கூத்தாக்கி விடும் என்று பிரபாகரன் நம்பினார். அரசியல் நாட்டம்கொண்ட தமிழ் தரப்புகளையும், இந்திய படையையும் தாக்கத் தொடங்கினார்கள். அது கோரமான சகோதரப் படுகொலைகளுக்கும், இந்திய படைகளுடனான மோசமான மோதலுக்கும் காரணமாக அமைந்தது.

இதேநேரம் ஆட்சி பீடமேறிய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இந்தியாவின் திணிப்பாகவும், இந்தியாவின் அத்துமீறிய செயற்பாடாகவும் சிங்கள மக்களிடம் பரப்புரைசெய்து இந்திய படைகளை இலங்கையை விட்டு வெளியேற்ற எண்ணினார்.

புலிகளுக்கும் அதே நோக்கம் இருந்ததால் பிரேமதாஸவும், புலிகளும் தமக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு தேனிலவு கொண்டாடியதோடு, இந்திய இராணுவமே வெளியேறு, எங்கள் பிரச்சினையை நாங்கள் தீர்த்துக் கொள்வோம் என்ற கோஷத்தை உறக்கக் கூறினார்கள்.

இப்படி வரலாற்றை சுருக்கமாக முழுமையாக கூறமுடியாது. ஆனால் மாகாண சபை விடயத்தில் நடந்த முதல் தவறு அது என்பதால் அதைக் கூற வேண்டியேற்பட்டது.

இப்போது 13ஆவது திருத்தச் சட்டம் இலங்கை பேரினவாதிகளுக்கு திருட்டுத் தம்பதிக்குப் பிறந்த அசிங்கக் குழந்தையாகத் தெரிகின்றது. புலிகள் தனிநாடு கேட்டபோது, தனிநாடு கொடுக்கமுடியாது. மாகாண சபை முறையே தீர்வாக இருக்கமுடியும் என்றும் மாகாண சபை முறைமையை பெரும்பான்மை சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோல் வடக்கு கிழக்கு தமிழ் மக்களும் மாகாண சபையை ஏற்றுக்கொண்டு பிரிக்கப்பட முடியாத ஒரே தேசமான இலங்கையை அனைத்து இன மக்களின் தாயகமாகக் கருதி மாகாண சபையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று போதித்தார்கள்.

சர்வதேச சமூகத்திடம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக மாகாண சபையை வழங்குவதற்கு இலங்கை அரசு தயாராகவே இருக்கின்றது. இந்தப் பிரபாகரன் தான் அதை எதிர்க்கின்றார். பெரும்பான்மையாக தமிழர்கள் மாகாண சபையை ஏற்றுக்கொள்ள விருப்பம் கொண்டுள்ளனர் என்றும் கூறி தாம் தீர்வுக்கு ஆர்வமாகவே இருப்பதுபோலவும் காட்டிக் கொண்டார்கள்.

13ஆவது திருத்தச் சட்டத்துடன் பிளஸ், பிளஸ் சேர்த்து வழங்கி தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைக்கு தீர்வு காணவும் தயாராக இருப்பதாகவும் இலங்கை அரசு பகிரங்கமாக கூறியிருந்ததையும் யாரும் மறந்திருக்கமாட்டார்கள்.

புலிகளை அழிக்க பல கோணங்களில் இந்தியாவின் உதவி தேவையானபோது இந்தியாதான் இலங்கையின் உற்ற தோழன் என்றும் இலங்கையின் இறைமை, இன ஐக்கியம் என்பவற்றை பாதுகாக்க இந்தியா செய்யும் உதவிகளை இலங்கை என்றும் மறக்காது என்று இந்தியாவுக்கு பாராட்டுப்பத்திரம் வாசித்தவர்கள் இப்போது இந்தியாவை கள்ளத் தொடர்பு என்றும் இலங்கையை பலவீனமாக்கவே இந்தியா முற்படுகின்றது என்றும் கூச்சமில்லாமல் கூறுகின்றனர்.

காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது தொடர்பில் பல வாதப்பிரதிவாதங்கள் உள்ளன. ஆனால் வடக்கு மாகாணத்துக்கு மாகாண சபை அதிகாரத்தையே வழங்கக் கூடாது என்பது எந்தவகையிலும் நியாயமானதல்ல.

வட மாகாண சபை தமிழ் மக்களின் கைகளுக்குச் சென்றுவிட்டால் அது தனிநாட்டுக்கு ஒப்பான நிர்வாகமாக அமைந்துவிடும் என்றும் தற்போது கூறப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்க விரும்பாதவர்களும், தமிழ் மக்களை தொடர்ந்தும் ஆயுதங்களின் நிழலில் அச்சுறுத்தி வைத்திருக்க விரும்புகின்றவர்களும், இலங்கையை ஏனைய இனங்களுக்கு உரிமையற்ற பௌத்த பூமியாக நிலைநிறுத்த விரும்புகின்றவர்களுமே இன்று வட மாகாண சபை தேர்தல் குறித்து நடுக்கம் கொண்டு உளறுகின்றனர்.

தாம் பேசுகின்ற தீய கருத்துக்கள் இலங்கை தாய்நாட்டின் இனங்களின் ஐக்கியத்துக்கும், தேசிய இறைமைக்கும் பாதகமானது என்பதை உணரவேண்டும். மாகாண சபை முறை தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு தீர்வாக அமையாது என்றவர்களுக்கும், மாகாண சபை முறைமை தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை பாதுகாக்காது என்றவர்களுக்கும், தற்போதைய பேரினவாதிகளுக்குமிடையே பெரிய வித்தியாசத்தைக்காண முடியவில்லை. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வாக இருக்கக்கூடியதும், இலங்கையின் சட்டமாகவும், பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளதுமான மாகாண சபை முறைமையே தமிழ் மக்களின் அரசியல் உரிமை பிரச்சினையை நடைமுறையில் தீர்த்துக்கொள்ள உதவும் என்று இருபது வருடங்களுக்கும் மேலாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறிவந்த போது, புலிகள் ஆயுத வன்முறை மீதான காதலினாலும், ஈ.பி.டி.பியின் அரசியல் மீதான காழ்ப்புணர்ச்சியினாலும் மாகாண சபை தமிழ் மக்களுக்கு தீர்வாக அமையாது என்றும், அதையும் தாண்டி தமிழர்களே தமிழர்களை ஆளுகின்ற தனிநாட்டை புலிகள் பெற்றுத்தருவார்கள் என்று கூறியவர்கள் தற்போது குறைபாடுகளற்ற மாகாண சபையே தேவை என்று உணர்ச்சி பொங்குகின்றனர்.

யதார்த்தத்தை புரிந்து கொண்டு கிடைக்கப்பெற்ற வாய்ப்புக்களை நிராகரித்தவர்கள், ஆராய்ந்து பார்க்காமலே எதிர்த்தவர்கள், வாய்த்தவற்றையும், கிடைத்தவற்றையும் தொடர்ச்சியாக இழந்துள்ளனர். இப்போது எஞ்சியிருந்த மாகாண சபை முறையும் தமிழ் மக்களுக்கு கிடைக்காமல் சிதைக்கப்பட்டுவிடுமோ என்ற ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

சிவன்

எக்ஸ்ரே ரிப்போர்ட்




# புலிகளின் வீழ்ச்சி! இறுதி நாட்கள்...

**ரிஷி**

1970களில் இருந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலிருந்த கடல் மார்க்கமாக எத்தனையோ தடவைகள் பயணம் செய்திருந்த பிரபாகரன், முதல் முறையாக இரு நாடுகளுக்குமிடையே விமானம் மூலம் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார் – அதுவும் மத்திய அரசின் தனிப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம்!

இதற்கும் ஒரு சிறிய பின்னணி கதை உண்டு.

1987 வரை தமிழகத்தில் தங்கியிருந்த பிரபாகரன் மீது மத்திய அரசு சில அழுத்தங்களைப் பிரயோகித்த காரணத்தால், இனிமேலும் இந்தியாவில் தங்கியிருப்பது சிக்கலை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொண்டு, இந்தியாவில் இருந்து வெளியேறத் தீர்மானித்திருந்தார். 1987ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதி, புலிகளால் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த கடற்பயணம் ஒன்றைச் செய்து இலங்கைக்கு சென்றிருந்தார்.

அந்தப் பயணம்தான் அவர் இறுதியாக இந்தியாவில் இருந்து வெளியேறும் பயணம் என்று, தமிழகத்தில் உள்ள புலிகள் ஆதரவு அரசியல் தலைவர்கள் சிலருக்கு சொல்லப்பட்டது.

யாழ்ப்பாணம் சென்றிருந்த அவருக்கு ஜனவரி மாத இறுதியில் ஈரோஸ் இயக்கத்தின் தலைவர் பாலகுமாரிடமிருந்து தகவல் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. பாலகுமார் அரசியல் வேலைகளுக்காக தமிழகம் செல்கிறார் என்றும், பிரபாகரன் தமிழகத்திலிருந்து திரும்பி வந்துவிட்டதற்கு ஏதாவது விசேட காரணம் இருக்கிறதா என்பதை பாலகுமார் தெரிந்துகொள்ள விரும்புகிறார் என்பதும்தான் அந்தத் தகவல்.

தகவல் கிடைத்ததையடுத்து, பாலகுமார் தமிழகம் செல்லுமுன்னர் இரு இயக்கத் தலைவர்களும் யாழ்ப்பாணத்திலுள்ள ஈரோஸ் அலுவலகத்தில் சந்தித்துக் கொண்டார்.

“தமிழகத்தில் தொடர்ந்தும் தங்கியிருந்தால், மத்திய உளவுத்துறையினர் சொல்வதற்கெல்லாம் வளைந்து கொடுக்க வேண்டியிருக்கும். எங்கள் கொள்கைகளையே மாற்றிக் கொள்ள வேண்டி வந்திருக்கும். அதுதான், இனிமேலும் தமிழகத்தில் தங்கியிருப்பது வேண்டாம் என்ற முடிவுக்கு வந்து, அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டேன்” என்றார் பிரபாகரன்.

“அப்படியானால் நீங்கள் இனிமேல் தமிழகத்துக்குச் செல்வதாக உத்தேசமில்லையா” என்று பாலகுமார் கேட்டிருக்கிறார்.

> **“தமிழகத்தில் தொடர்ந்தும் தங்கியிருந்தால், மத்திய உளவுத்துறையினர் சொல்வதற்கெல்லாம் வளைந்து கொடுக்க வேண்டியிருக்கும். எங்கள் கொள்கைகளையே மாற்றிக் கொள்ள வேண்டி வந்திருக்கும். அதுதான், இனிமேலும் தமிழகத்தில் தங்கியிருப்பது வேண்டாம் என்ற முடிவுக்கு வந்து, அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டேன்” என்றார் பிரபாகரன்.**

## வளைந்து கொடுக்காத குறிக்கோள்!

“நானாகச் செல்லமாட்டேன். அவர்களுக்கு (இந்தியாவுக்கு) என்னைத் தேவையென்றால் அவர்கள் வந்து அழைக்கட்டும். அழைத்துச் செல்லட்டும்”

“இது நடக்கக்கூடிய காரியமா” என்று கேட்ட பாலகுமார், “அவர்களுக்கு எங்களைத் தேவையில்லை. எங்களுக்குத்தான் அவர்கள் தேவை” என்றிருக்கிறார்.

“நான் இதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். அவர்களுக்கும் ஒரு தேவை வரும். அப்போது அவர்கள் வந்து எங்களை அழைக்க வேண்டிய காலமும் வரும்” என்று பதில் கூறியிருக்கிறார் பிரபாகரன்.

ஜனவரி 1987இல் கூறப்பட்ட இந்தக் கூற்று, அதே ஆண்டு ஜூலை மாதத்தில் பலித்திருக்கிறது!

திருச்சியில் ஹெலிகொப்டரில் இருந்து இறக்கப்பட்டவர்கள் அங்கே தயாராக நின்ற இந்திய விமானப்படைக்குச் சொந்தமான அன்டனோவ் விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டு சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அவர்கள் சென்னை வருகிறார்கள் என்ற விஷயம், குறிப்பிட்ட சிலருக்கு, அப்போது தமிழக தலைவர்களுடன் தொடர்பில் இருந்த பேபி சுப்ரமணியத்தால் கூறப்பட்டிருந்தது. இதனால் சென்னை விமான நிலையத்துக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பரிச்சயமான சில தமிழக அரசியல் தலைவர்கள் வந்திருந்தார்கள்.

பிரபாகரன் சென்னையில் இறங்கியபோது, சென்னையில் தங்கியிருந்த, புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

இருவரும் சந்தித்து உரையாடிய பின், இந்திய அரசு யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே ஒப்புக் கொண்டிருந்தபடி, தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர் தமிழகத்தில் இருந்து திடீரென இலங்கை சென்றபோது, அவர் தமிழகத்தை விட்டு நிரந்தரமாக வெளியேறப் போகிறார் என்ற விஷயம் தமிழகக் காவல்துறையின் கியூ பிரான்சுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவர் சென்ற பின்னர் தான் தமிழக உளவுத்துறை விஷயத்தைத் தெரிந்து கொண்டிருந்தது. தங்களுக்குத் தெரியாமலேயே இப்படியொரு காரியம் நடந்துவிட்டதில் தமிழக உளவுத்துறையின் (கியூ பிரிவு) அன்றைய தலைவர் மோகன்தாஸ் கடும் கோபமடைந்திருந்தார்.

அப்போதும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் சென்னையில் தங்கியிருந்தார். மோகன்தாஸ், இரண்டு கியூ பிரிவு அதிகாரிகளை அன்டன் பாலசிங்கத்தின் இல்லத்துக்கு அனுப்பி வைத்தார். “தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். உடனடியாகச் சந்திக்க விரும்புகிறார்” என்று அந்த கியூ பிரிவு அதிகாரிகள் சொன்னார்கள்.

**மற்றொரு** விஷயம் என்னவென்றால், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும் ஹெலிகொப்டர்கள் வருகின்றன என்பதை மாத்திரம் திருச்சி குடிவரவு இலாகாவிடம் தெரிவித்திருந்தார்களே தவிர, அதில் வருபவர்கள் யார், எதற்காக வருகிறார்கள் என்பதுபோன்ற விபரங்களைச் சொல்லியிருக்கவில்லை.

ஹெலிகொப்டர்கள் தரையிறங்கியபோது தான் விஷயத்தைத் தெரிந்துகொண்ட உள்ளூர் குடிவரவு இலாகாவினர், அதில் தங்களது அதிகாரத்தை நிலைநாட்ட விரும்பி இருந்தார்கள்.

திருச்சியில் நின்று என்ன செய்வது என்று புரியாமல், டில்லியை தொடர்பு கொண்டார்கள் பாதுகாப்புதுறை அதிகாரிகள்.

இறுதியில் பாதுகாப்பு அதிகாரிகள் ஒரு தந்திரம் செய்தார்கள். “வெளியுறவு அமைச்சில் இருந்து யாராவது சொன்னால் ஏற்றுக் கொள்வீர்களா?” என்று கேட்டார்கள். இமிகிரேஷனும், வெளியுறவு அமைச்சும் ஒன்றோடு ஒன்று நெருக்கமானவை. சீனிவாசன் அதற்கு சம்மதிக்கவே, கொழும்பு இந்தியத்தூதரக அதிகாரி பூரியை முன்னே கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

“இவர்களுக்கான குடிவரவு நடைமுறைகளை நாங்கள் டில்லியில் செய்து கொள்கிறோம். நீங்கள் விட்டுவிடுங்கள்” என்று பூரி கூறியபின், திருச்சி குடிவரவு இலாகாவினர் விட்டுக் கொடுத்தனர்.

(தொடரும்...)

---



# புலிகளின் வதை முகாமில்

**மணியம்**

**வதை-63**

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாக எனக்குத் தெரியும். இடைக்காட்டிலும் சாவகச்சேரியிலும் முற்போக்கு அரசியலை கொண்டு சென்று விதைத்தவர்கள், யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற சில மாணவர்கள் என்பதை பெருமையுடன் சொல்ல முடியும்.

யாழ்.பல்கலைக்கழகம் பிற்காலத்தில் ‘கறையான் புற்றெடுக்க பாம்பு குடி கொண்ட’ கதையாக, புலிகளால் மாற்றப்பட்டாலும், மார்க்சிய சிந்தனையாளராக இருந்த பேராசிரியர் க.கைலாசபதி (பேராசிரியர் இடைக்காட்டுத் தொடர்பைக் கொண்டவர் என்பதுடன், அவரது மனைவி சர்வமங்களம் இடைக்காட்டைச் சேர்ந்தவரும், வவுனியா அரசாங்க அதிபராக இருந்தவரும், பிற்காலத்தில் ஐநா. உணவு விவசாய ஸ்தாபனத்தில் பல நாடுகளில் பணி புரிந்தவருமான மாணிக்க இடைக்காடரின் மகள் என்பதும் குறிப்பிடத் தக்கது)) அதன் முதலாவது தலைவராக இருந்தமையும், அவருடன் ஒரு முற்போக்கு விரிவுரையாளர் குழாம் பணியாற்றியதும் தான், அங்கு அந்தக் காலத்தில் கல்வி கற்ற மாணவர்கள் முற்போக்கு சிந்தனைப் பண்ணையின் பயிர்களாக வளரக் காரணமாகும்.

நான் சிறையில் சந்தித்த அந்த இடைக்காட்டைச் சேர்ந்த உறவினர் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதை அறிந்தபோது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டானது. நான் 20 வருடங்களுக்கு மேலாக என்ன காரணத்துக்காப் போகாமல் தவிர்த்தேனோ, அந்த இடைக்காட்டிலிருந்து ஒருவர் புலிகளின் சிறைக்கு வந்திருக்கிறார் என்றால், அது அவரது வாழ்க்கை ஏதோ ஒருவகையில் மக்களின் பிரதான எதிரிக்கு எதிராக இருந்திருக்கின்றது என்ற பெருமைக்குரிய அங்கீகாரமாகும். அதுமட்டுமின்றி, அதே ஊரைச்சேர்ந்தவர்களும் அவரது உறவினர்களுமான இரண்டு புலி ஆதரவாளர்களைக் கொலை செய்த குற்றச்சாட்டிலேயே அவரும் அவருடன் இன்னொரு உறவினரும் (அவரது உறவினர் பக்கத்து அறையில் அடைக்கப்பட்டிருந்தார்) கைதுசெய்யப்பட்டு இங்கு அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கேட்ட பொழுது, புலிகளின் செயற்பட்டால் உறவினர்களே தங்களுக்குள் மோதிக்கொள்ளும் அவலத்தை எண்ணிக் கவலைப்பட்டாலும், அந்த மண்ணில் நான் எதிர்பாராமல் உருவான வீரத்தை எண்ணி வியந்துபோனேன்.

இடைக்காடு சம்பவத்தில் ஈடுபட்ட அனைவருமே ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவினர்கள். அவர்களில் சாமி என்ற ஈ.பி.ஆர்.எல்.எப் தோழரைப் புலிகள் ஈவிரக்கமின்றி கொலை செய்தனர். இவ்வளவிற்கும் சாமி ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் வெளிப்படையான ஒரு முன்னணி உறுப்பினர் அல்ல. மிகவும் அமைதியாக இருந்து கொண்டு, பின்னணியில் இருந்து கொண்டு விசுவாசமாகச் செயற்பட்ட ஒருவர். அவரது கொலைக்குப் பதிலடியாக, அந்தக் கொலைக்குப் பின்னணியில் இருந்தவர்கள் என சந்தேகிக்கப்பட்ட வேல்முருகன், சுப்பிரமணியம் (சுப்பு – இவர் என்னுடன் ஒன்றாகக் கல்வி கற்றவர்) என்ற இருவரை ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கொலை செய்தார்கள். அந்த இருவரையும் கொலை செய்தவர்கள் என்ற சந்தேகத்திலேயே இருவர் கைதுசெய்யப்பட்டு எம்முடன் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவங்களுக்குப் பின்னணியில் இருந்து செயற்பட்டவர், இன்னொரு உறவினரும் வைத்தியக் கலாநிதியுமான இடைக்காட்டைச் சேர்ந்த ஒரு பெண். இவர் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதான தளபதிகளில் ஒருவரைத் திருமணம் செய்திருந்தார். அத்துடன் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் பெரும் செல்வாக்கையும் கொண்டிருந்தார். பிரபாகரனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சிகிச்சை அளிப்பவராகவும் இருந்தார். பல முக்கியமான நிகழ்வுகளில் பிரபாகரன் உட்பட புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் பங்கேற்கும் போது, இவரும் புலிகளின் இராணுவச் சீருடையுடன் அவர்களில் ஒருவராக நிற்பதைக் காண முடியும்.

நான் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட பின்னர், எனது நெருங்கிய உறவினரான இந்தப் பெண் டாக்டரை, இவரது சகோதரர் எமது வேண்டுகோள்கள் எதுவுமின்றியே, எனது விடுதலைக்காக பிரபாகரனிடம் தனது செல்வாக்கைப் பிரயோகிக்கும்படி அணுகியதாக நான் விடுதலையாகி வந்தபின்னர் அறிந்தேன். அவர் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டாரா என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை.

புலிகளின் உறுப்பினர்களைக் கொலை செய்தவர்கள் என்றால் அவர்களுக்குப் புலிகளின் சிறையில் எத்தகைய ‘சீர்வரிசைகள்’ வழங்கப்படும் என்பதை நான் விவரிக்கத் தேவையில்லை. அத்துடன் அப்படியானவர்களுக்கு என்னவிதமான உச்சபட்ச தண்டனையை அவர்கள் வழங்குவார்கள் என்பதும் எல்லோரும் நன்கறிந்த விடயம். இருப்பினும் அவர்கள் இருவரும் மிகவும் உறுதியாக இருந்ததை அவதானித்தேன். நான் சிறை வைக்கப்பட்டிருந்த பகுதியில் அடைக்கப்பட்டிருந்த அவர்களில் ஒருவர், தற்செயலாக நான் விடுதலையாகி வெளியே போனால், தனது பெயர் – நட்சத்திரம் என்பனவற்றுக்கு நல்லூர் கந்தசாமி கோவிலில் ஒரு அர்ச்சனை செய்யும்படி என்னிடம் வேண்டிக்கொண்டார். அதை நினைக்கும் போதெல்லாம் புலிகளால் வாழ்க்கை மறுக்கப்பட்ட அவரை எண்ணி மனம் வருந்தாமல் இருக்க முடிவதில்லை.

இந்த இரு ‘கொலையாளி’கள் (இந்த வார்த்தையை கிண்டலாகத் தன்னும் பயன்படுத்துவதற்காக அவர்கள் என்னை மன்னிப்பார்களாக. ஏனெனில் புலிகளால் குற்றம்சாட்டப்படுபவர்கள் எத்தகையவர்கள் என்பது, எல்லோரும் நன்கறிந்த விடயம்) குறித்தும் நான் விசேடமாகக் குறிப்பிடுவதற்குக் காரணம், பொதுவாக ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தினர் குறித்து தெரிவித்துவரும் ஒரு விமர்சனத்தை மறு மதிப்பீட்டுக்கு உள்ளாக்குவதற்காகவே. பிரதான தமிழ் ஆயுதப்போராட்ட இயக்கங்களைப் பொறுத்தவரை, புலிகள், புளொட், ரெலோ போன்ற இயக்கங்களிடம் உள்ள ‘போராட்டத்’ (இராணுவ வாதத்) தன்மை ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்திடம் இல்லையென்ற ஒரு கருத்து பொதுவாக இருந்துவந்துள்ளது.

ஆயுதப்போராட்டம் ஆரம்பமான காலத்திலிருந்து அநேகமாக எல்லா இயக்கங்களினதும் முக்கியஸ்தர்கள் என்னுடன் நெருக்கமாகப் பழகி வந்துள்ளனர். அந்த வகையில் ஒவ்வொரு இயக்கமும் மற்றைய இயக்கங்களைப் பற்றி என்ன கருத்துகளைக் கொண்டிருக்கின்றது என்பதை நான் ஓரளவு அறிவேன். இந்த இயக்கங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட் என்பன தமது கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு பலவிதமான முயற்சிகளை எடுத்துவந்துள்ளனர். அவர்கள் பத்திரிகைகள், வெளியீடுகள் என பலவற்றை அச்சிட்டு மக்கள் மத்தியில் விநியோகித்து வந்துள்ளனர்.

ஆனால் புலிகளைப் பொறுத்தவரையில், ஆரம்பத்தில் உமா மகேஸ்வரனும் பிரபாகரனும் ஒன்றாக இருந்த நேரத்தில் எமது அச்சகத்தில் அச்சிட்ட ‘உணர்வு’ பத்திரிகையைத் தவிர, வேறு வெளியீடுகள் எதனையும் வெளியிட்டது கிடையாது. (பிற்காலத்தில் மற்றைய இயக்கங்களைத் தடை செய்து ‘ஏகப்பிரதிநிதிகளாக’ மாறிய பின்னர் நிறைய வெளியிட்டார்கள்)

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம் 53

பா.ராகவன்

**போர்க்கள** வீரம் மட்டுமல்ல காரணம். தனி வாழ்விலும் அப்பழுக்கற்ற சுல்தானாக அவர் இருந்திருக்கிறார். சுல்தான் இறந்தபிறகு அவரது சொத்து விவரங்களை ஆராய்வதற்காக ஓர் அரசுக்குழுவை நியமித்திருந் தார்கள். மன்னரின் தனிப்பட்ட வரவுசெலவுக் கணக்குகள், அவர்தம் பெயரிலும் தமது உறவினர்கள் பெயரிலும் என்னென்ன அசையாச் சொத்துக் கள் வைத்திருக்கிறார் போன்ற தகவல்களைச் சேகரிக்கச்சென்ற அந்தக் குழு வியப்பில் மூர்ச்சை யாகிப் போனது.

காரணம், எத்தனை தேடியும் மன்னரின் சொத்தாக அவர்களால் கண்டுபிடிக்க முடிந்தது ஒரே ஒரு தினாரும் ஆறு திஹ்ரம் களும் மட்டுமே. நமது மொழியில் புரியும்படிச் சொல்வதென்றால் ஒரு ரூபாய் அறுபது காசு. இதில் மிகையே இல்லை. தமக்கென்று ஒரு பைசாகூட கடைசிவரை சேர்த்து வைக்காமலேயே வாழ்ந்திருக்கிறார் சலாவுதீன். அவரது மனைவி உள்ளிட்ட பிற உறவினர்களுக்கு இது விஷய மாக வருத்தம் இருந்திருக்குமோ என்னவோ? ஆட்சி அதிகாரத்தை மேலாடையாகக்கூட இல்லை. ஒரு கைக்குட்டை மாதிரித்தான் வைத்திருந்தார் அவர்.

சலாவுதீனின் மிகப்பெரிய சாதனையாகச் சொல்லப்படுவது எகிப்துக்கு அவர் ஓர் அரசியல் முக்கியத்துவம் பெற்றுத் தந்ததைத் தான். மத்திய ஆசியாவின் எத்தனையோ பகுதிகள் அந்நியப் படையெடுப்புக்களாலும் உள்நாட்டுக் குழப்பங்களாலும் சிதறுண்டுபோன காலகட்டத்தில், சிதறிக்கிடந்த எகிப்தை சில்லறை சேர்ப்பதுபோல ஒன்று சேர்த்து ஒரு குடையின்கீழ் கொண்டுவந்து, மத்திய கிழக்கின் மிக முக்கிய மான முஸ்லிம் சாம்ராஜ்ஜியங் களுக்குள் ஒன்றென அதற் கொரு தனி அடையாளம் பெற்றுத் தந்தவர் சலாவுதீன். பாலஸ்தீன், சிரியாவரை அந்த இராஜ்ஜியத்தின் எல்லைகளை விரித்து, வலுவான பாதுகாப்பு அரணாகத் தாமே முன்னின்று காத்தவர் அவர். தவிர, பக்தாத் கலீ:.பாவின் அரசுடன் எகிப்துக்கு நிரந்தமான, நீடித்த நல்லுறவு ஏற்படவும் காரணமாக இருந்தவர்.

அவரது மரணம் எப்படி முஸ்லிம்களுக்கு மாபெரும் துயரத்தைத் தந்ததோ, அதே அளவு மகிழ்ச்சியையும் நிம்மதியையும் ஐரோப்பியர்களுக்குத் தந்ததையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

சலாவுதீன் இறந்து சரியாக இரண்டே ஆண்டுகளில் நான் காவது சிலுவைப்போருக்கான ஆயத்தங்களில் இறங்கிவிட்டது ஐரோப்பா. அப்போது போப்பாண்ட வராக இருந்தவரின் பெயர் செலஸ்டின் 3. ஒரு சரியான தலைவன் இல்லாத பிரதேசமாக இப்போது பாலஸ்தீன் இருக்கிறது. சலாவுதீனுக்குப் பிறகு அவர் அளவு திறமைசாலிகள் யாரும் அங்கே இன்னும் உதிக்கவில்லை. ஆகவே, தாக்குவதற்கு இதுவே சரியான தருணம் என்று ஐரோப்பிய மன்னர்களுக்கு அவர் கடிதம் எழுதினார்.

போப்பாண்டவர் சொல்லிவிட்டால் மறுபேச்சு பேசமுடியாது. இத்தனைக் கும் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனிய மன்னர்கள் முந்தைய சிலுவைப் போரின் இறுதிச் சமயத்தில் அவர வருக்கு ஏதோ ஓரளவில் அமைதி ஒப்பந்தம் செய்துகொண்டுதான் ஊர் திரும்பியிருந்தார்கள், ஆனால் அரசு ரீதியில் செய்து கொள்ளப் பட்ட அமைதி ஒப்பந்தங்கள் பற்றி மதகுருவான போப்பாண்டவரிடம் விளங்கிக் கொண்டிருக்க முடியாது. பதினொன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலெல்லாம் அரசர்கள் அளிக்கும் தீர்ப்புக்களைப் போப்பாண்டவர்கள் மாற்றி எழுதும் வல்லமை பெற்றவர்களாக இருந்திருக்கறார்கள்!

ஆகவே, மீண்டும் யுத்தம் ஆரம்பமானது. வேறென்ன? நேரே புறப்பட்டு பாலஸ்தீனை அடையும் நோக்குடன் ஒரு நெடும் பயணம். வழியில் அதே சிரியாவில் ஒரு கோட்டை முற்றுகை. இம்முறை பெய்ரூட் கோட்டை, பெய்ரூட்டை சிலுவைப்போர் வீரர்கள் கைப்பற்றிக் கொண்டதும், முஸ்லிம் களின் படை (சலாவுதீனின் வாரிசாக இந்தப் போரை முன்னின்று நடத்திய வரின் பெயர் மலிகல் ஆதில்) ஜா:.பா என்றஇடத்திலிருந்த கிருத்தவர்களின் கோட்டையை முற்றுகையிட்டு, கைப் பற்றிக் கொண்டது. இந்த ஜா:.பா என்ற இடத்திலிருந்து கிறிஸ்தவர் களின் கோட்டையை முற்றுகையிட்டு கைப்பற்றிக் கொண்டது. இந்த ஜா:.பா முற்றுகையின்போது ஏராளமான கிருத்தவ வீரர்கள் உயிரிழந்திருப்பதாகத் தெரிகிறது. தாக்குப் பிடிக்கமுடியாத அளவுக்கு இழப்பு நேரிட்டதால் கிருத்தவர்கள் உடனடியாகப் போர் நிறுத்தம் கோரினார்கள்.

சலாவுதீன் இறப்பதற்கு முன்னால் சொல்லிவிட்டுப்போனது அது. எதிரி போர் நிறுத்தத்துக்கு விருப்பம் தெரிவித் தால், எந்த நிலையிலிருந்தாலும் சம்மதித்துவிடவேண்டும்.

ஆகவே யுத்தம் நிறுத்தப்பட்டது. உண்மையில் சலாவுதீன் முன்னின்று நடத்திய அந்த மூன்றாவது சிலுவைப் போர்தான் கடைசிப் பேரழிவுப் போர். அப்புறம் நடந்த சிலுவைப் போர் களெல்லாம் விளையாட்டுபோல நடத்தப்பட்ட யுத்தங்கள்தாம். இதை விளையாட்டுக்குச் சொல்லவில்லை. உண்மையிலேயே அப்படித்தான் நடந்திருக்கிறது.

உதாரணமாக, ஐந்தாவது சிலுவைப் போரை எடுத்துக்கொள்ளலாம். 'இன்னஸண்ட் 3' என்னும் போப்பின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போருக்கு அடிப்படைக் காரணம் ஜெருசலேத்தைக் கைப்பற்றுவதல்ல. பணம் திரட்டுவதுதான். முந்தைய யுத்தங்களினால் ஏற்பட்டிருந்த இழப்புக்களைச் சரிக்கட்டுவதன் பொருட்டு, ஒரு சிறிய யுத்தத்தை ஆரம்பித்துவிட்டு, அதைச் சொல்லி ஐரோப்பா முழுவதும் வசூல் நடத்திக் குவித்துவிட்டார்கள்.

இந்தப் போரில் கலந்துகொள்ள மாட்டேன் என்று இங்கிலாந்து மன்னர் ரிச்சர்ட் தெரிவித்துவிட்டார். இன்னும் சில சிறு மன்னர்களும் இந்த ஐந்தாம் சிலுவைப் போரைப் புறக்கணிக்க (பின்னே? ஓயாமல் யுத்தம் என்றால் யாரால் முடியும்?) சாத்தியமுள்ள மன்னர்களின் உதவி யுடன் யுத்தத்தை ஆரம்பிக்க ஏற்பாடு செய்தார் போப்.




ஆனால் நடந்தது மிகப்பெரிய நகைச்சுவை. ஐரோப்பாவிலிருந்து புறப்பட்ட சிலுவைப்போர் வீரர்கள் பாலஸ்தீனை நோக்கி முன்னேறாமல், நேரே கான்ஸ்டாண்டி நோபிளுக்குப் போய் எதிராகச் சண்டை போட ஆரம்பித்துவிட்டார்கள்.

அந்த கிரேக்க மன்னர், அவரது குடிபடைகள் எல்லோருமே கிருத்தவர் கள்! கிறுக்குப் பிடித்து ஒரு கிருத்தவ நகரின் மீதே தொடுக்கப்பட்ட இந்த யுத்தத்தை பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டார் போப் இன்னஸண்ட் 3. ஆனால் நிலைமை கைவிட்டுப் போய்விட்டது. கான்ஸ்டாண்டி நோபிளைத் தாக்கிய சிலுவைப் போர் வீரர்கள், போரில் வென்றதோடு விடவில்லை. முழு நகரையும் தீவைத்துக் கொளுத் தினார்கள். தப்பி ஓடியவர்களை வெட்டி வீழ்த்தியும், அகப்பட்ட பெண்கள் அத்தனைபேர் மீதும் பாலியல் வன் கொடுமை நிகழ்த்தியும் வெறியாட்டம் போட்டார்கள்.

இந்தத் தாக்குதலுக்கு அவர்கள் சொன்ன காரணம் – கான்ஸ்டாண்டி நோபிள்வாசிகள், சிலுவைப்போர் வீரர்களை முழுமனத்துடன் ஆதரிக்க வில்லை என்று நாங்கள் சந்தேகப் பட்டோம். அதனால்தான் தாக்கினோம். (தொடரும்...)

# ஆந்தை மனிதன்



**ஜேர்மனி** நாட்டில் பிறந்த "Martin Laurello" அல்லது "Martin Emmerling" என்ற பெயரால் அழைக்கப்பட்ட ஒருவர் காலப்போக்கில் 'ஆந்தை மனிதன்' என பிரபல்யம் பெற்றார். இதற்கு காரணம் என்ன தெரியுமா? அவர் ஆந்தையின் தோற்றத்தில் இருந்தார் என நினைத்துவிடாதீர் கள். மாறாக வினோதமான ஒரு செயலை செய்யும் ஆற்றலை அவர் கொண்டிருந்தார்.

இவர் தனது கழுத்தை 180 பாகையில் திருப்ப வல்லவர். இதன் காரணமாகவே இவர் 'ஆந்தை மனிதன' என அழைக்கப்பட்டார். இவருடைய இந்த அரிய செயலுக்கு காரணம் மரபணு குறைபாடுகள் எனப்படுகிறது. இவ்வாறான செயல் மிகவும் ஆபத்தானது மட்டுமின்றி உயிரை பறிக்க கூடிய செயலும்கூட.

ஆனால் இவரோ இத்திறனை பயன்படுத்தி அதனை தொழிலாக செய்துவந்தார். அதாவது கேளிக்கை நிகழ்வுகளின்போது தனது கழுத்தை முற்றிலுமாக பின்புறம் திருப்பி பார்வையாளர்களை பரவசப்படுத்தினார். 1921ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் இவ்வாறான வித்தைகள் காட்டிவந்த இவர் தன்னைப் பற்றிய குறிப்புகளை இணைய ஊடக நிறுவனம் ஒன்றுக்கு 1945 இல் அனுப்பி வைத்திருந்தார்.

பின்னர் இம்மனிதர் ஒரு நாஜி ஆதரவாளர் என வதந்திகள் பரவியது. இதனால் இவருடன் இருந்த சக நண்பர்கள் இவரை கொஞ்சம் கொஞ்சமாக விட்டு விலக தொடங்கியுள்ளார்கள். இறுதியில் இவருக்கு என்ன நடந்தது. இவர் எப்படி எங்கு இறந்தார் என்பது மர்மாகவே உள்ளது. இது பற்றிய தகவல் யாருக்கும் இதுவரை சரியாக தெரிவில்லை. எனினும் இவர் 1950 இல் இறந்துவிட்டார் என்று ஒரு வதந்தி நிலவுகிறது.

# இனி ஓடிக்கொண்டே மலம் கழிக்கலாம்!

**உலகம்** மிகவேகமாக ஓடிக்கொண்டிருக்கையில் அதற்கு ஈடுகொடுப்பதற்கு மனிதனும் நிமிடத்திற்கு நிமிடம் ஏதோவொன்றை செய்துகொண்டுதான் இருக்கின்றான். போகவேண்டிய இடத்திற்கு போய்கொண்டே இயற்கை கடன்களை முடிக்கும் வகையிலான நடமாடும் கழிப்பறையை குழாய் பொருத்துனர் ஒருவர் தயாரித் துள்ளார். இந்த கழிப்பறை உலகில் மிகவும் வேகமாக செயற்படும் கழிப்பறையாக இருக்கின்றது என்று சர்வதேச ஊடகங்கள் தெரி வித்துள்ளன.




சுமார் 140 வலுக்கொண்ட மோட்டார்சைக் கிள் இயந்திரத் தினைகொண்டே இது தயாரிக்கப்பட்டுள்ளது.

கொலின் பர்ஸ் என்ற 33 வயதுடைய நபரே இதனை உருவாக்கியுள்ளார். இதற்காக அவர் மூன்று மாதங்களை செலவிட்டுள்ளார். மிகவும் வேகமாக செயற்படக்கூடிய இந்த நடமாடும் கழிப்பறையில் நீரும் நிரப்பப்பட்டு காணப்படுகின்றது. நடமாடும் கழிப்பறையின் கைப்பிடியில் உள்ள பொத்தானை அழுத்தும்போது நிரப்பப்பட்டுள்ள நீர் இயல்பாகவே கழிப்பறையை சுத்தமாக்கும். இக் கழிப்பறை வாகனத்தில் செய்தித்தாள்களை கொழுவிக் கொள்வதற்கான வசதிகளும் காணப்படுகின்றன.

ஸ்கூட்டர் ஒன்றினை அடிப்படையாகவும் அதற்கு மேலாக பலகையிலான அடிப்பாகமும் இதற்கு பொருத்தப்பட்டுள்ளது. இதே வேளை, நான்கு மின் கியர்களை கைபிடிக்கு பொருத்தியுள்ளார். 'இதனை செலுத்துவதற்கு பயமாக இருக்கிறது. கழிப்பறையை சுத்தம் செய்வதற்காக நிரப்பப்பட்டுள்ள நீரானது பாரம் நிறைந்ததாக காணப்படுகின்றது' குழாய் பொருத்துனர் தெரிவித்துள்ளார். 'கழிப்பறை இருக்கையும் வழுக்கும் தன்மை கூடியது. ஆனால் அதில் இருப்பது கடினமானது. நான் வேகமாக இதனை செலுத்தும்போதும் வழுக்கும் தன்மையை உணர்வேன்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## (28.5.2013 முதல் 12.6.2014 வரை)






சுற்றுச் சூழ்நிலை அறிந்து அதற்கேற்ப காய்நகர்த்துவதில் வல்லவர்களான மேட ராசி அன்பர்களே!

**குருபகவானின் சஞ்சாரம்:**

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்கள் ராசிநாதனான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் செல்வதால் திறமைகள் வெளிப்படும். எதிரிகளும் நண்பர்களாவார்கள். சொத்துகள் மூலம் திடீர் பணவரவு உண்டு. தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வீடு, மனை வாங்குவது, விற்பது இலாபகரமாக அமையும். உடன்பிறந்தவர்கள் உங்களை புரிந்துகொள்வார்கள். தாயாரின் உடல்நிலை சீராகும். வாகனம் வாங்குவீர்கள்.

26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகுபகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் வீடு, வாகன பராமரிப்புச் செலவுகள், வீண் சந்தேகம், தற்பெருமை பிரச்சினையால் கணவன்–மனைவிக்குள் பிரிவு ஏற்படக் கூடும். கொஞ்சம் விட்டுக்கொடுத்து போங்கள். மனைவிக்கு சிறுசிறு அறுவைச் சிகிச்சைகள் வந்து நீங்கும். 29.8.2013 முதல் 26.1.2014 மற்றும் 13.4.2014 முதல் 12.6.2014 வரை உங்களின் பாக்கிய விரயாதிபதியான குருவின் சாரத்திலேயே குருபகவான் செல்வதால் எதிர்பார்த்த பணம் ஓரளவு கைக்கு வரும்.

குழந்தை பாக்கியம் கிடைக்கும். நீண்டநாட்களாக தரிசிக்க நினைத்த புண்ணியத் தலங்களுக்கு சென்று வருவீர்கள். நட்பு வட்டம் விரியும். வேலைக்கு விண்ணப் பித்திருந்தவர்களுக்கு புதுவேலை கிடைக்கும். திருமணம், கோயில் நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். 13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.3.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் புதிய முயற்சிகள் பலிதமாகும். உங்களின் அடிப்படை வசதிகள் பெருகும். மகனின் திருமணத்தை விமர்சையாக நடத்துவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களும் வீண் பழியும் வந்துசெல்லும். விரும்பத்தகாத இடமாற்றமும் வரும். எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு சற்று தாமதமாகக் கிடைக்கும்.

கன்னிப் பெண்களே! புதிய நண்பர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்கவேண்டாம். காதல் கசந்து இனிக்கும். சிலரின் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாறவேண்டாம். உங்களின் ரசனைக்கேற்ப நல்ல வரன் அமையும். போட்டித் தேர்வுகளில் வெற்றி உண்டு.

கலைத்துறையினரே! மூத்த கலைஞர்களின் ஆதரவு கிட்டும். போட்டிகள் இருக்கும். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். சம்பள விஷயத்தில் கறாராக இருங்கள். உங்கள் உழைப்பிற்கு சிலர் உரிமை கொண்டாடுவார்கள். அரசியல்வாதிகளே! எதிர்க்கட்சியினரை தகுந்த ஆதாரமில்லாமல் தாக்கிப் பேசவேண்டாம். சகாக்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்ளாதீர்கள்.

விவசாயிகளே! பூச்சித் தொல்லை, எலித் தொல்லை அதிகரிக்கும். அக்கம்–பக்க நிலத்தாரை அனுசரித்துப் போங்கள். மரப்பயிர் இலாபம் தரும்.

இந்த குரு மாற்றம் ஏமாற்றங்களையும் எதிலும் தாமதத்தையும் ஏற்படுத்தினாலும் விட்டுக்கொடுத்துப் போகும் குணத்தால் மகிழ்ச்சியை தரும்.




இயற்கையை அதிகம் நேசிக்கும் நீங்கள், எதிர் நீச்சல் போடுவதில் வல்ல வர்களான ரிஷப ராசி அன்பர்களே!

**குருபகவானின் சஞ்சாரம்:**

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்களின் சப்தம, விரயாதிபதியான செவ்வாயின் மிருகசீரிடம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் சகோதரர் உதவுவார். உங்களின் பலவீனத்தை சரி செய்துகொள்வீர்கள். கணவன்–மனைவிக்குள் அந்நியோந்நியம் அதிகரிக்கும். மாமனார், மாமியார் உதவுவார்கள். பூர்வீகச் சொத்திலிருந்த வில்லங்கம் பேச்சுவார்த்தை மூலம் சுமூகமாக முடியும். மனைவி வழி உறவினர்களால் நன்மை உண்டு. திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு கூடிவரும். 26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் திடீர் பணவரவு உண்டு. மறைமுக எதிரிகளை வீழ்த்தும் வல்லமை உண்டாகும்.

வாகனம் வாங்குவீர்கள். 29.8.2013 முதல் 12.11.2013 வரை உங்களின் அஷ்டம, லாபாதிபதியான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை அதிகரிக்கும். அநாவசியச் செலவுகளை தவிர்க்கப் பாருங்கள். புது பொறுப்புகள், பதவிகளை ஏற்கவேண்டாம்.

உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள். 13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.3.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் இக்காலகட்டத்தில் திடீர் பயணங்கள், வீண் செலவுகள், ஒரே நேரத்தில் பல வேலைகளை பார்க்க வேண்டிய சூழ்நிலைகள் வந்துசெல்லும்.

வேலையில் ஆர்வம் பிறக்கும். சக ஊழியர்கள் மத்தியில் இருந்த அதிருப்தி விலகும். பதவி உயர்வுக்காக உங்களது பெயர் பரிசீலிக்கப்படும். சம்பளம் உயரும். மூத்த அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

வகுப்பறையில் சக மாணவர்கள் மத்தியில் பாராட்டப்படுவீர்கள். உயர்கல்வியில் அதிக மதிப்பெண்ணுடன் வெற்றி பெற்று எதிர்பார்த்த கல்விப் பிரிவில் சேருவீர்கள்.

கலைத்துறையினரே! மாறுபட்ட சிந்தனை பிறக்கும். வீண் வதந்திகளிலிருந்து விடுபடுவீர்கள். மூத்த கலைஞர்களின் ஆதரவால் உங்களின் புதுமுயற்சிகள் வெற்றியடையும். வசதி, வாய்ப்புகள் பெருகும். கிசுகிசுத் தொல்லை நீங்கும்.

அரசியல்வாதிகளே! தேர்தலில் வெற்றி கிட்டும். விவசாயிகளே! மகளின் திருமணத்தை விமர்சையாக முடிப்பீர்கள்.

இந்த குரு மாற்றம் சமூகத்தில் பெரிய அந்தஸ்தையும் வீடு, மனை, வாகன யோகத்தையும் அள்ளித்தரும்.




ஆயிரம் காசு உள்ளவன் அமைதியாய் இருப்பான், அரைக்காசு உள்ளவன் ஆடித் துள்ளுவான் என்பதை அறிந்த நீங்கள், பணம் வந்த பின்பும் பகட்டாக வாழத் தெரியாதவர்களான மிதுன ராசி அன்பர்களே!

**குருபகவானின் சஞ்சாரம்:**

28.5.2013 முதல் 25.6.2013 வரை இக்காலகட்டங்களில் உங்கள் சஷ்டம லாபாதிபதியான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் செலவுகூடும். ஆடம்பரச் செலவுகளை தவிர்க்கப் பாருங்கள். மறைமுக எதிர்ப்பு, சிறுசிறு அவமானம் வந்துசெல்லும்.

கை, காலில் அடிபடக் கூடும். சொத்து வாங்கும்போது தாய்ப் பத்திரத்தை சரி பார்த்துக்கொள்ளுங்கள். சகோதர, சகோதரிகளால் சங்கடங்கள் வரும். குடும்பத்தினரைப் பற்றி யாரிடமும் தரக் குறைவாக பேசவேண்டாம். பழைய கடனை நினைத்து கலங்குவீர்கள். 26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகுபகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் சின்னச் சின்ன மனச் சஞ்சலங்கள், நம்பிக்கையின்மை வந்துசெல்லும்.

உங்கள் இளமை காலத்துடன் அவர்களை ஒப்பிட்டுப் பார்த்து கொஞ்சம் பெருமூச்சுவிடுவீர்கள். உறவினர்களுடன் இடைவெளிவிட்டு பழகுவது நல்லது. 29.8.2013 முதல் 12.11.2013 வரை உங்களின் சப்தம, ஜீவனாதிபதியுமான குருபகவான் தன் நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் பண விஷயத்தில் கறாராக இருங்கள். யாருக்கும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். மனைவியுடன் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். விரும்பத்தகாத இடமாற்றம் வரும். மனைவி வழி உறவினர்களுடன் கருத்து மோதல்கள் வரும். இக்கால கட்டத்தில் புனர்பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது.

13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.3.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் வீண் பழி, ஏமாற்றம், பணப்பற்றாக்குறை வந்துபோகும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் ஏற்ற – இறக்கங்கள் இருக்கத்தான் செய்யும். கடையை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும்.

காதல் விவகாரங்களில் சிக்காதீர்கள். உயர்கல்வியில் கவனம் செலுத்துங்கள். பெற்றோரை தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். வேலை தாமதமாக கிடைக்கும். மாணவ–மாணவிகளே! விடைகளை எழுதிப் பாருங்கள்.

அரசியல்வாதிகளே! தொகுதி நிலவரங்களை உடனுக்குடன் மேலிடத்திற்கு தகவல் தருவது நல்லது. உட்கட்சி பூசலில் ஆர்வம் காட்டாதீர்கள். தலைமையை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

கலைத்துறையினரே! புதிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து ஏமாற வேண்டாம். உங்களின் படைப்புகளை போராடி வெளியிட வேண்டிவரும். விவசாயிகளே! எலித் தொல்லை அதிகமாகும். கரும்பு, தேக்கு இலாபம் தரும். குறுகிய காலப் பயிர்களால் நஷ்டம்வரும்.

இந்த குரு பெயர்ச்சி எதிர்காலம் பற்றிய ஒரு பயத்தையும் கேள்விக்குறியையும் தந்தாலும் அவ்வப்போது அனுசரித்துப் போவதன் மூலமாக ஓரளவு சாதிக்க வைக்கும்.




காலம் கடத்தாமல் காரியத்தை முடிப்பதில் வல்லவர்கள். கலா ரசனை அதிகமுள்ள நீங்கள், தூய்மைக்கும் நேர்மைக்கும் பெயர் போனவர்களான கடக ராசி அன்பர்களே!

**குருபகவானின் சஞ்சாரம்:**

28.5.2013 முதல் 25.6.2013 வரை உங்களின் பிரபல யோகாதி பதியான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் செல்வதால் அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும். உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு கூடும். திடீர் யோகம் உண்டாகும். பணவரவு அதிகரிக்கும். புது பொறுப்பு கள், பதவிகள் வரும். மகளுக்கு நல்லவரன் அமையும்.

மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வி, வேலை கிடைக்கும். அங்கு, இங்கு புரட்டி ஏதாவது ஒரு வீடோ, மனையோ வாங்கிவிட வேண்டுமென்று முயற்சிப் பீர்கள். 26.6.2013 முதல் 28.8.2013 வரை மற்றும் 27.1.2014 முதல் 12.4.2014 வரை ராகு பகவானின் திருவாதிரை நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் வீடு கட்டும் வேலையைத் தொடங்குவீர்கள். அரசாங்க விஷயம் சாதகமாக முடியும். என்றாலும் தாயாருக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வந்துபோகும். போக்குவரத்து விதிகளை மீறி வாகனத்தை இயக்க வேண்டாம்.

சின்னச் சின்ன அபராதத் தொகை செலுத்த வேண்டி வரும். தங்க நகைகளை கவனமாகக் கையாளுங்கள். 29.8.2013 முதல் 12.11.2013 வரை உங்களின் சஷ்டம, பாக்யாதிபதியான குருபகவான் தன் சுய நட்சத்திரமான புனர்பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் வி.ஐ.பி.கள் அறிமுக மாவார்கள். புகழ், கௌரவம் உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். தந்தையாரின் உடல்நலம் சீராகும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். தந்தைவழி உறவினர்களுடன் இருந்த பிணக்குகள் நீங்கும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினை தீரும். அதிக வட்டிக் கடனில் ஒரு பகுதியை தீர்க்க வழி கிடைக்கும். 13.11.2013 முதல் 26.1.2014 வரை குருபகவான் புனர்பூசம் நட்சத்திரத்திலும் 27.1.2014 முதல் 11.3.2014 வரை திருவாதிரை நட்சத்திரத்திலும் வக்ர கதியில் செல்வதால் எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். ஆனால், செலவுகளும் காத்துக் கொண்டிருக்கும். சொத்து வாங்குவீர்கள்.

உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களை தெரிந்துகொள்வீர்கள். சக ஊழியர்களின் விடுப்பால் மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டியது வரும். உங்களை சிலர் விமர்சித்துக் கொண்டுதான் இருப்பார்கள். அதையெல்லாம் பொருட் படுத்த வேண்டாம். நீங்கள் விருப்பப்பட்ட இடத்திற்கே இடமாற்றம் உண்டு.

கன்னிப் பெண்களே! உங்களின் நீண்டநாள் கனவுகள் நனவாகும். காதல் கைகூடும். சிலர் தடைப்பட்ட உயர்கல்வியை தொடரும் வாய்ப்பு வரும். வேலை நிமித்தம் காரணமாக பெற்றோரைவிட்டு பிரிந்து வெளிநாடு செல்வீர்கள். கூடுதல் மொழி கற்பீர்கள். திருமணம் தடைப்பட்டு முடியும்.

மாணவமாணவிகளே! கெட்ட நண்பர்களை தவிர்க்கப் பாருங்கள். எல்லாம் தெரிந்ததுபோல் இருக்காதீர்கள். விடைகளை எழுதிப் பாருங்கள். உங்களின் தனித் திறமையை வெளிப்படுத்தி பரிசு, பாராட்டு பெறுவீர்கள். எதிர்பார்த்த கல்விப் பிரிவில் சேர்வீர்கள். கலைத்துறை யினரே! மூத்த கலைஞர்களிடம் தொழில் நுணுக்கங்களை கேட்டறிவீர்கள். சம்பளப் பாக்கி கைக்கு வரும். சின்னச் சின்ன வாய்ப்புகள் வந்தாலும் தவறவிடாதீர்கள்.

இந்த குரு மாற்றம் புதிய திட்டங்களை நிறைவேற்ற உதவுவதுடன் ஓரளவு வசதி, வாய்ப்புகளையும் தருவதாக அமையும்.

(தொடரும்...)




தொகுப்பு : வேணுகிருஷ்ணன்

# உலகப் பொருளாதார நெருக்கடி

**“இன்றைய** பொருளாதார நெருக்கடி சாதாரணம். இதைவிட மோசமான நிலை இனிமேல்தான் வரப்போகிறது.”

ஒலிவர் பிலன்சாட்- பொருளாதார நிபுணர், சர்வதேச நாணய நிதியம்.

இன்று ஒட்டுமொத்த உலக மக்களும் தங்களது இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் ‘பொருளாதார நெருக்கடி’ எனும் அரக்கனின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். தீவிரவாதம் என்பது உலக மக்களுக்கெதிரான அச்சுறுத்தல்களுள் முதன்மையானது எனப் பிரச்சாரம் செய்யப்பட்ட காலம் மலையேறி, “வேலைவாய்ப்பின்மை, வேலைக்கேற்ற ஊதியமின்மை, விலைவாசி உயர்வு, வறுமை மற்றும் குற்றச் செயல்கள் அதிகரிப்பு” எனப் பொருளாதார நெருக்கடியின் பல்வேறு கோணங்கள் உலக மாந்தரை அச்சுறுத்துகின்றன என்ற செய்தி தற்போது எல்லா ஊடகங்களிலும் மக்கள் மன்றங்களிலும் பரவலாக பேசப்படுகின்றது.

மேற்படி பிரச்சினைகளின் விபரீத விளைவுகளை தென்னாசிய நாடுகளிலும் நாளுக்கு நாள் அனுபவித்துவரும் நாம் உலகப் பொருளாதார கேந்திர நிலையங்களாக கருதப்படும் நாடுகள் சிலவற்றின் நிலைமைகளை அறிந்திருப்பது அவசியமாகும்.

## ஐக்கிய அமெரிக்கா:

உலக பொருளாதாரத்தின் மத்தியஸ்தலம் என வர்ணிக்கப்படும் ஐக்கிய அமெரிக்கா படு மோசமான பொருளாதார கெடுபிடிக்கு முகங்கொடுக்க ஆரம்பித்துள்ளது. ஒரு மாதம் மாத்திரம் சுமார் ஏழு இலட்சம் மக்கள் தங்களது தொழிலை இழந்துள்ளனர். குறிப்பாக வாகன உற்பத்தித் துறை மிக மோசமாக பாதிக்கப்பட்டதன் காரணமாக அமெரிக்க பொருளாதார பிரதான சந்தையான ‘வோல் ஸ்ட்ரீட்’ வீழ்ச்சி அடைந்தது. மேற்படி சந்தையை தூக்கி நிமிர்த்த அமெரிக்க அரசினால் முன்னெடுக்கப்பட்ட “700 பில்லியன் வீட்டுத்திட்டமும்” எதிர்பார்த்த பலன்களைத் தரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்கர்கள் ஒரே சொத்துக்கு பல வங்கிகளிலிருந்து பெறப்பட்ட வட்டி அடிப்படையிலான கடன்களை பெற்றவர்கள் அதைத் திரும்பச் செலுத்தத்தவறியதால் பல சிறு வங்கிகள் நஷ்டமடைய, அவ்வங்கிகளின் நஷ்டத்தால் பெரும் வங்கிகள் நஷ்டமடைய, அதனால் மத்திய வங்கி நஷ்டமடைய, அதன்காரணமாக இன்று உலகமே பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேர்ந்தது.

## ஐரோப்பா:

இதேவேளை ஐக்கிய இராச்சியம் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரமும் வரலாற்றின் முன்னெப்போதும் இருந்திராத அளவுக்கு நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றது. இதனால் வங்கிகள் வங்குரோத்து நிலைமைக்கு சென்றுவரும் அதே வேளை மக்கள் வங்கிகளில் பணவைப்பு செய்வதற்கு அச்சங்கொண்டுள்ளதுடன் ஏற்கனவே வைப்பபுச் செய்திருந்த பணத்தையும் அவசர அவசரமாக மீளப்பெற்று வருகின்றனர். தங்களது பங்குகளையும் ‘அடிமட்ட விலைக்கு’ விற்றுவிடுகின்றனர்.

## அவுஸ்திரேலியா, நியூசிலாந்து:

உலகப் பொருளாதார நெருக்கடி அவுஸ்திரேலியாவிலும் தலையெடுக்க ஆரம்பித்துள்ளதாலும், 1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற்தடவையாக தனது வங்கிகளில் வட்டிவிகிதங்களை கணிசமாகக் குறைத்துள்ளது. நியூஸிலாந்து நாட்டிலும் இந்நெருக்கடியின் தாக்கங்கள் உணரப்படத் தொடங்கி விட்டதாகவும் நிலைமையை சமாளிப்பதற்கு பல பிரயத்தனங்களை மேற்கொண்டுவருவதாகவும் அந்நாட்டு அரசாங்க அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

## இந்தியா, சீனா மற்றும் ஆசிய நாடுகள்:

உலக பொருளாதார நெருக்கடியின் தாக்கம் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது ஆசிய நாடுகளில் சமாளிக்க முடியாத அளவுக்கு பாரியதாக இல்லை என்றும் அதற்கான காரணம் இந்தியா - சீனா பெற்று இருக்கும் மனித, உற்பத்தி வளங்கள் தான் என்றும் பொருளியல் வல்லுனர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். எனினும் சீனர்களுடன் ஒப்பிடும்போது அதிகளவிலான இந்தியர்கள் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் தொழில் புரிவதன் காரணமாக ஒப்பீட்டளவில் இந்தியா சற்று அதிக பாதிப்புக்குள்ளாகும் என்பதையும் நிபுணர்கள் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

## அரபு மற்றும் மத்திய கிழக்கு நாடுகள்:

எகிப்து, சூடான், லெபனான் போன்ற அரபு நாடுகளுடன் ஒப்பிடும்போது சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராஜ்ஜியம், கட்டார் போன்ற வளைகுடா நாடுகளில் மேற்குலகின் பொருளாதார வீழ்ச்சியின் பிரதிபலிப்பை தெளிவாக காணக்கூடியதாக இருக்கின்றது. ஏழு கூட்டு இராஜ்ஜியங்களில் ஒன்றான அபுதாபியின் பொருளாதார வீழ்ச்சிக்கு கைகொடுத்து உதவ முடியவில்லை என டுபாய் நாட்டு அமீரின் கவலை வெளியிடப்படுகின்றது.

முப்பது மெற்றிக் தொன்னாக இருந்த ‘திரவ வாயு’ ஏற்றுமதியை எழுபது மெற்றிக் டொன்னாக கட்டார் நாடு அதிகரித்து பொருளாதார வீழ்ச்சிக்கு முட்டுக்கொடுக்க செய்த முயற்சியிலும், சவூதி அரேபியாவில் பல முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேறு இடங்களில் வேலை தேடுவதற்கோ அல்லது சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்வதற்கோ அனுமதி வழங்கப்படுவதும் வளைகுடா நாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு தக்க சான்றுகளாகும்.

மேற்படி வளைகுடா நாடுகளின் பொருளாதார சரிவுக்குக் காரணம் தங்களின் பொருளாதார முன்மாதிரியாக மேற்கு நாடுகளையே கொண்டிருந்ததால் இந்நாடுகளின் தொழில் அதிபர்கள் தங்கள் முதலீடுகளை முழுக்க முழுக்க அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் செய்திருந்தமையே என பொருளியல் நிபுணர்கள் காரணம் காட்டுகின்றனர்.

→

தொழில்நுட்பம்




## புதிய அறிமுகம்!

**இது**வரையில் தங்கத்தாலான வெளி உடலமைப்பினைக் கொண்ட அப்பிளின் ஐ போன்கள் மற்றும் அன்ரோயிட் ஸ்மார்ட் போன்கள் ஆகியவற்றினை பார்த்திருப்பீர்கள்.

ஆனால் முதன்முறையாக 24 கரட் தங்க முலாம் பூசப்பட்ட வெளி உடலமைப்பினைக் கொண்ட உலகின் முதலாவது BlackBerry கைபேசி உருவாக்கப்பட்டுள்ளது.

BlackBerry Q10 எனப்படும் இக்கைப் பேசியானது QWERTY கீபோர்ட் வசதியினையும் கொண்டுள்ளதுடன் 3.1 அங்குல அளவு மற்றும் 720 x 720 Pixel Resolution கொண்ட திரையினைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவற்றில் 1.5GHz வேகம்கொண்ட Processor, 2GB RAM ஆகியன இணைக்கப்பட்டுள்ளதுடன் சேமிப்பு நினைவமானது 16GB ஆக அமைந்துள்ளது.

இச்சேமிப்பு கொள்ளளவினை microSD கார்ட்களின் உதவியுடன் 64GB வரை அதிகரிக்கும் வசதியும் இக்கைப்பேசியில் தரப்பட்டுள்ளது.

இவற்றுடன் 8 மெகாபிக்சல்கள் உடைய பிரதான கமெரா மற்றும் 3 மெகாபிக்சல்கள் உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா போன்றனவும் காணப்படுகின்றன. இவற்றின் பெறுமதியானது 1,597 யூரோக்கள் ஆகும்.

# Windows 8
## இயங்குதளத்தினை பயன்படுத்த இலகு வழிகள்!




அண்மையில் புதிதாக கணினி வாங்கியுள்ளீர்கள் எனில் அதில் விண்டோஸ் 8 நிறுவப்பட்டிருக்கலாம். இப்பதிவில் விண்டோஸ் 8 இல் கொண்டுவரப்பட்டிருக்கும் சில மாற்றங்களை அறிந்து அதற்கேற்ப விண்டோஸ் 8 ஐ சுலபமாக பயன்படுத்துவதற்கு எப்படி என்பதற்கான 8 டிப்ஸ்கள் இவை.

**1. வித்தியாசமான ஸ்டார்ட் ஸ்கிரீன்**

விண்டோஸ் 8 இல் ஸ்டார்ட் ஸ்கிரீன் மாற்றப்பட்டிருப்பதை அவதானித்திருப்பீர்கள். வழமையான விண்டோஸ் போல்லல்லாமல் கிடைமட்டமாக (horizontally) புரோகிராம்ங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கும். விரும்பிய புரோகிராமை ஸ்டார்ட் மெனுவில் கொண்டுவந்து சேர்த்து விடலாம்.

Search, Settings, Devices. Sharing quick access , Start Screen போன்றவை Charms என்ற ஐகான்கள் மூலம் அக்செஸ் செய்யலாம். இதற்கு திரையின் lower-right-hand கோர்னருக்கு மவுஸை கொண்டு செல்லவேண்டும்.

2. use Search

தேவையான கோப்புக்கள் அல்லது மென் பொருளை வேகமாக திறக்க வேண்டுமா? Charm ஐகொனிலுள்ள Search வசதியைத் திறவுங்கள். அதில் எதையும் தட்டச்சு செய்யாமலே திரையின் ஒருபக்கமாக ஸ்கோரல் செய்யுங்கள். அங்கே விண்டோஸ் 7 அல்லது எக்ஸ்பியில் இருப்பதுபோன்றே 'Windows Accessories' 'Windows System' 'Windows Ease of Access' போன்றவை வரிசையாக பட்டியலிடப்படும். இவற்றை ஸ்டார்ட் ஸ்கிரீனுக்கு கொண்டுவருவதற்கு வலது கிளிக் செய்து பின்செய்யுங்கள்.

## ஸ்கைப்பில் பதுங்கியிருக்கும் ஆபத்துக்கள்!

வெளிநாட்டில் இருக்கும் ஒருவருடன் நாம் எளிதில் பேச இன்று பலரும் பயன்படுத்துவது ஸ்கைப் நெட்வோர்க்கை தான். இதில் இருக்கும் ஆபத்துகள் உண்மையில் பலருக்கு தெரிவதில்லை. ஸ்கைப்பில் நீங்கள் உரையாடுவது பதிவு செய்யப்படுகின்றது அது தெரியுமா உங்களுக்கு. மேலும் ஸ்கைப்பில் இருக்கும் வைரஸ்தான் இணையத்திலேயே மிக கொடுமையான வைரஸ். ஸ்பாம் எனும் இந்த வைரஸ் உங்கள் கணினியைத் தாக்கும். இந்த வைரஸ் உங்கள் கணிப்பொறியை என்னென்ன செய்யும் என்பதை கீழே பாருங்கள் சற்று அதிர்ந்தே போய்விடுவீர்கள்.

இதில் ஏதேனும் ஒரு லிங்க் தரப்பட்டிருக்கும். இதில் கிளிக் செய்தால், கெடுதல் விளைவிக்கும் வைரஸ் புரோகிராம், கம்பியூட்டரில் வந்துவிடும்.

பின்னர் இந்த புரோகிராம், கம்பியூட்டரில் தரப்படும் தனிப்பட்ட தகவல்களை, இணையம் மற்றும் வங்கி எக்கவுண்ட்களுக்கான யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்ட்களை, தொலைவில் உள்ள இன்னொரு சர்வருக்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறது. அதனை இயக்குபவர், அங்கிருந்தே, உங்கள் கம்பியூட்டரைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் வகையில் இந்த வைரஸ் புரோகிராம் செயற்படும். இதனைத் தவிர்க்க, ஸ்கைப் கெண்டாக்ட் முகவரியில் உள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து வரும் இன்ஸ்டண்ட் மெசேஜில் உள்ள லிங்கில் கிளிக் செய்திடக்கூடாது.





தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## உதவி!

இங்கிலாந்தில் பிளெமிங் என்ற விவசாயி ஒருநாள் காட்டு வழியே நடந்து போய்க்கொண்டிருந்தார். வழியில் ஒரு பணக்காரச் சிறுவன் புதைகுழியில் சிக்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தான். உடனே பிளெமிங் தனது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் மிகவும் சிரமப் பட்டு அந்தச் சிறுவனைக் காப்பாற்றினார்.

இதனை அறிந்த சிறுவனின் தந்தை பிளெமிங்கிடம், "எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கூறினார். பணத்தை வாங்க மறுத்த அந்த விவசாயி. தனது மகனைப் படிக்க வைக்க உதவி செய்யுமாறு வேண்டினார்.

அந்தப் பணக் காரரின் உதவி யால் படித்துப் பின்னாளில் பென்சிலின் என்ற அரிய மருந்தைக் கண்டுபிடித்தார் அந்த விவசாயியின் மகன் அலெக்ஸாண்டர் பிளெமிங்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது தந்தையால் காப்பாற்றப்பட்ட அந்தச் சிறுவன் நிமோனியா நோயி னால் பாதிக்கப்பட்டார். அப்போது பென்சிலின் மருந்துதான் அவரது உயிரைக் காப்பாற்றி யது. பிளெமிங் குடும் பத்தால் இரண்டு முறை காப்பாற்றப் பட்ட அந்தச் சிறுவன்தான் பின்னாளில் இங்கி லாந்தின் பிரதம ரான வின்ஸ்டன் சேர்ச்சில்.

## வாரம் ஒரு திருக்குறள்



குறிப்பறிதல்

**ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்**
**தெய்வத்தோ டொப்பக் கொளல்.**

ஐயப்படாமல் மனத்தில் உள்ளதை உணரவல்லவனை (அவன் மனி தனே ஆனாலும்) தெய்வத்தோடு ஒப்பாகக் கொள்ளவேண்டும்.

குறள்:702

## இரண்டு கால் எலி



வெளியே போய்விட்டு வீடு திரும்பிய அம்மா, சாப்பாட்டு மேசையின் அருகே கண்ணாடித் துண்டுகள் கிடப்பதைக் கண்டாள். மேசையின் அருகே எட்டு வயதான சுந்தரி புத்தகத்திலேயே பார்வை வைத்தபடி இருப்பதையும் பார்த்தாள்.

"சுந்தரி, மேசையில் இருந்த கண்ணாடித் தட்டு உடைந்துபோய்க் கிடக்கிறதே! அந்த எலிதான் தட்டைத் தட்டி உடைத்திருக்க வேண்டும்" என்றாள் அம்மா. சுந்தரி உடனேயே பதில் சொன்னாள்:

"ஆமாம், அம்மா, அந்த எலிதான் தட்டைத் தட்டி உடைத்திருக்கிறது..."

அம்மா புன்னகையோடு சுந்தரியைப் பார்த்தாள்.

"இவ்வளவு பெரிய தட்டை எப்படி அந்த எலியால் மேசையில் இருந்து தட்டியிருக்க முடியும்" என்றாள் அம்மா.

சுந்தரியின் முகம் சுருங்கிற்று.

"வாலினால் தட்டியிருக்குமோ?" என்று கேட்டாள் அம்மா.

சுந்தரியிடமிருந்து பதில் ஒன்றும் வரவில்லை.

அம்மா, அன்போடு சுந்தரியின் தோளைத் தொட்டாள்.

"கண்ணு, அந்த எலியின் பெயர் என்ன தெரியுமா? சுந்தரிதான் அந்த எலியின் பெயர். இரண்டு கால் எலி!" என்றாள்.

சுந்தரி நாணித் தலைகுனிந்தாள்.

"அம்மா நான்தான் தட்டை உடைத்துவிட்டேன். தெரியாமல் செய்துவிட்டேன். பொய் சொன்னதற் காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

## பல வினாக்கள் - ஒரே விடை!

உலகில் அதிக மின்சாரம் தயாரிக்கும் நாடு
உலகில் அதிகம் கார்கள் தயாரிக்கும் நாடு
உலகில் அதிக தொலைக்காட்சிகள் உள்ள நாடு
உலகில் அதிகம் கோதுமை, சோளம் உற்பத்தி செய்யும் நாடு
உப்பு உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு.

**அத்தனைக்கும் ஒரே விடை : அமெரிக்கா.**

## பதிலடி...

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க அதிபராக இருந்தபோது, அவர் செருப்பு தைக்கும் தொழிலாளியின் மகன் என்பதைக் கூறி அவரை அவமானப்படுத்த வேண்டும் என்று நினைத்த ஒருவர், தனது செருப்பை எடுத்துக்காட்டி, "உங்கள் அப்பா தைத்த செருப்பைத்தான் நான் உபயோகிக்கிறேன்...' என்றார் கேலியாக.

உடனே லிங்கன், "இவ்வளவு நாட்கள் அது உழைப்பதிலிருந்தே என் தந்தை ஒரு சிறந்த தொழிலாளி என்பது நன்றாகத் தெரிகிறது! ஒருவேளை அது பழு தடைந்தால் என்னிடம் கொண்டுவாருங்கள். எனக்குச் செருப்பு தைக்கவும் தெரியும். நாட்டை ஆளவும் தெரியும்" என்று சரியான பதிலடி கொடுத்தார்.



## வானவில்



**கறுப்பு மேகம் மீதிலே**
**வெள்ளை ஒளி பட்டது**
**கண்ணைக் கவரும் அழகிலே**
**வான வில்லும் வந்தது**

**சிவப்பு மற்றும் ஒரேஞ்சு**
**மஞ்சள் பச்சை நீலமும்**
**ஆழ்ந்த நீல ஊதாவாய்**
**வண்ணம் ஏழு காட்டுது**

**அலங்கார வளைவு போல்**
**காற்றின் மீது நிற்குது**
**வானம் பூமி நடுவிலே**
**பாதை ஒன்று போடுது**

**வளைந்த தன் உருவிலே**
**பணிந்து நடக்கச் சொல்லுது**
**நிறங்கள் பல ஒன்றுகூடி**
**அன்பின் பாடம் நடத்துது**

**வியந்து நாங்கள் யாவரும்**
**மெய் மறந்து நிற்கையில்**
**எங்கள் மனதைத் திருடியே**
**எங்கோ சென்று மறைந்தது!**

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 11.06.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.994**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 992

**ப.தருண்ஷா, பிளாக் றோட், சங்கானை.**

பரிசுக்குரியவர்: 992

பாராட்டுக்குரியவர்கள்

01. வ.சைந்தன், காரைநகர், யாழ்ப்பாணம்.
02. தா.லோஷினி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
03. ஆர்.ஜெஸ்மின் புளோரா, 3ஆம் குறுக்குத்தெரு, காலி.
04. இ.காருண்யா, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
05. தா.சிந்துஜன், கண்டி றோட், சாவகச்சேரி.
07. க.லக்மியா, காளி கோவில் வீதி, மாத்தறை.
08. செள.ஆரபி, ஹட்டன்.

## பழக்கம்!

ஒருசமயம் தமிழறிஞர் மீ.ப.சோமு ஜெர்மனி நாட்டுக்குச் சென்றிருந்தார். அந்நாட்டின் வானளா விய மாடமாளிகைகளை ரசித்துப் பார்த்தவண்ணம் - ஒரு சொக்லேட்டை வாயில் போட்டுக் கொண்டு, அதன் தாளை வீதியில் வீசியெறிந்தாராம்.

அவரது பின்னால் வந்துகொண்டிருந்த ஓர் இளம் பள்ளி மாணவி, அந்தத் தாளைப் பொறுக்கி அருகிலிருந்த குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுச் சென்றாளாம்.

இதுகண்டு மீ.ப.சோமு, வெட்கத்தாலும் அவமானத் தாலும் தலைகுனிந்தாராம். நம் மாணவமணிகளும் இந்த நல்ல பழக்கத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

## சுடோகு

**இப்போது** எல்லோரையும் கவர்ந்து இருக்கும் விளையாட்டு சுடோகு என்பது உங்களுக்குத் தெரியும். 1979இல் தான் இந்த கணிதப் புதிர் கண்டுபிடிக்கப்பட்டது. புதிரைக் கண்டுபிடித்தவர் ஹோவர்ட் ஜேம்ஸ் என்பவர். அவர் இதற்கு வைத்த பெயர் நம்பர் ப்ளேஸ்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 6 | 2 | 7 | 5 | 8 | 9 |
| 7 | 8 | 5 | 9 | 4 | 1 | 3 | 2 | 6 |
| 2 | 9 | 6 | 5 | 3 | 8 | 4 | 1 | 7 |
| 5 | 7 | 2 | 8 | 9 | 6 | 1 | 4 | 3 |
| 9 | 4 | 1 | 7 | 5 | 3 | 2 | 6 | 8 |
| 6 | 3 | 8 | 4 | 1 | 2 | 7 | 9 | 5 |
| 3 | 2 | 9 | 1 | 6 | 5 | 8 | 7 | 4 |
| 8 | 5 | 4 | 2 | 7 | 9 | 6 | 3 | 1 |
| 1 | 6 | 7 | 3 | 8 | 4 | 9 | 5 | 2 |

அதாவது எண் விளையாட்டு. இவ்விளையாட்டை வெளியிட்ட பத்திரிகை நியூயோர்க் டெல் மேகஸின்.


இன்று உலகின் அனைத்து நாடுகளின் பத்திரிகைகளில் இந்த விளையாட்டு மிகவும் பிரபலமாக உள்ளது.

## அணில்கள்



அணில்கள் பழங் களைச் சாப்பிட்ட பிறகு விதைகளைப் பிறகு சாப்பிடுவதற்காக மணலில் புதைத்து வைக்கும் பழக்கம் கொண்டவை. ஆனால் எங்கே மறைத்து வைத்தோம் என் பதை மறந்துவிடுமாம். அவ்வளவு ஞாபகமறதி அவை களுக்கு! உலகெங்கிலும் இலட்சக் கணக்கான மரங்கள் தானாகவே முளைத்து வளர்வதற்கு இதுவே காரணம் என்று சொல்லப்படுகிறது.

## கண்டுபிடியுங்கள்?




**கடையேழு வள்ளல்களின் செயல்கள் இங்கே நிழற்படங்களாகத் தரப்பட்டுள்ளன. மக்கள் மனதில் செயற்பாடுகளால் உயர்ந்த. அந்த வள்ளல்களின் பெயர்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.**

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

159

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

**தாஸ்தாம்பு'ர்** கிராமத்துக்கு பாபாவின் கூட்டணிகளால் ஆபத்து ஏற்படலாம் என்பதால் கடும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

பாபாவைக் கொல்ல உதவிய வர்களுக்கு பொலிசார் வெகுமதி களையும் வழங்கியிருந்தனர்.

. பொலிசாரையும் தாக்கி கிராமத்தையும் தாக்க ஆட்கள் போதாது. அதனால் பொலிஸ் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்படும் வரை காத்திருப்பது என்று முடிவு செய்தனர்.

அதற்கிடையே கிராமம் ஒன்றில் பணக்காரப் பண்ணையார் ஒருவனது வீட்டைக் கொள்ளையிட்டனர்.

தானியங்கள் விற்பனை செய்து நாலு இலட்சம் ரூபா ரொக்கமாக வைத்திருந்தான். அப்படியே அள்ளிக் கொண்டு வந்து பூலானிடம் கொடுத்தான் மான்சிங்.

துப்பாக்கிகளுக்கான ரவைகள் வாங்கவும், ஆங்காங்கே அனுப்பப்பட்ட தங்கள் ஆட்களை ஒன்று திரட்டவும் அப்பணத்தைப் பயன் படுத்தினாள் பூலான்.

மூன்று மாதம்வரை பொறுமை யாகக் காத்திருந்தனர். அவர்கள் எதிர்பார்த்தபடியே பொலிஸ் பந்தோபஸ்து மெல்ல மெல்ல விலக்கிக்கொள்ளப்பட்டது.

1982 ஜுன் 27 ஆம் திகதி 22 பேர் கொண்ட பூலானின் கோஷ்டி தாஸ்தாம்பூர் கிராமத்துக்குள் புகுந்தது.

அத்தாக்குதலுக்கு தலைமை தாங்கும் பொறுப்பை முஸ்லிமிடம் ஒப்படைத்திருந்தாள் பூலான்.

பொலிசாரிடம் யார் யார் வெகுமதி பெற்றனர் என்று ஒரு பட்டியலே வைத்திருந்தான் முஸ்லிம்.

சிவராம் சிங் யாதவ், கஞ்சாச் சரண் யாதவ் ஆகிய இருவரும் தான் பாபாவைப் பிடிக்க கிராம மக்களைத் திரட்டி பொலிசாருக்கு உதவியவர்கள்.

சிவராம் சிங்கின் மாடி வீட்டுக்குள் புகுந்து சுட்டுத் தள்ளினார்கள்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதும் கங்காச் சரணும் அவன் குடும்பமும் தங்கள் வீட்டை வெளியேறி ஓடி ஒழிந்துகொண்டனர்.

அவர்களின் வீடு தீயிடப்பட்டது. எங்கும் மரண ஓலங்கள். கிராமத்தினர் உயிர் தப்ப தலைதெறிக்க ஓடினார்கள்.

பாபாவைப் பிடிக்க உதவியதாக உறுதியாகத் தெரிந்த நான்கு பேரை பூலான் சுட்டுக்கொன்றாள்.

தஸ்தாம்பூர் கிராமத்தினர் பலர் தலைதெறிக்க ஓடியதால் தப்பித்துக் கொண்டனர்.

பாபாவை காட்டிக்கொடுத்தோர் என்று இனம் காணப்பட்டோரின் வீடுகள் பற்றி எரிந்து கொண்டிருந்தன.

17 பேர் துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாக்கப்பட்டுச் செத்துக் கிடந்தனர்.

'பழிக்குப் பழி'

'பாபா முஸ்தக்குவீம் வாழ்க' என்று கோஷமிட்டபடி பூலான் கோஷ்டியினரும், முஸ்லிமும் அந்தக் கிராமத்தைவிட்டு வெளியேறினர்.

ஹெமாய் கிராம படுகொலையை அடுத்து மிகப் பயங்கரமான படுகொலையாக தஸ்தாம்பூர் படுகொலையை விபரித்தன பத்திரிகைகள்.

"உத்தரப் பிரதேச முதல்வர் வி.பி. சிங் பதவியை ராஜினாமாச் செய்யவேண்டும்" என்று அவர்களது வேலையாள் ஒருவரும் 1982 மார்ச் மாதத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வேட்டைக்குச் சென்றுவிட்டு தமது ஜீப்பில் அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர்.

ஜீப்பைக் கண்டதும் பொலிசார் என்று நினைத்துக் கொள்ளையர்கள் சுட்டதில்தான் அவர்கள் பலியாகினர். அதற்கும் பூலான் கோஷ்டிக்கும் எதுவித தொடர்பும் இல்லை.

அதனால் கொள்ளையர்கள் மீது கடும் கோபம் கொண்டிருந்தார் வி.பி.சிங். தன்னுடைய பதவிக் காலத்தில் கொள்ளைக் கோஷ்டியை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று முயன்றார் வி.பி. சிங்.


ஆனால், தஸ்தாம்பூர் படுகொலைகள் அவரது பதவிக்கும், கனவுக்கும் சவாலாக மாறின.

தனது முதலமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்தார் வி.பி. சிங்.

அதற்குமுன்னர் தஸ்தாம்பூரில் பலியானோரின் இறுதிச்சடங்கில் சென்று கலந்துகொண்டார்.

உத்தரப் பிரதேசத்தில் அப்போது காங்கிரஸ் கட்சி செல்வாக்குடன் இருந்தது. தொடர் படுகொலைகள் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கையும் சேர்த்து சரிக்கத் தொடங்கிவிட்டன.

கொள்ளையர்களை ஒடுக்க முடியாத கையாலாகாத அரசு என்று நாடு முழுவதும் கண்டனங்கள் எழுந்தன. அதனால் தஸ்தாம்பூர் படுகொலை



அறிக்கைவிட்டன எதிர்க்கட்சிகள்.

வி.பி. சிங் கொள்ளைக் கோஷ்டிகளை ஒடுக்கப் பல நடவடிக்கைகளை எடுத்திருந்தார். (பின்னர் இந்தியப் பிரதமராக இருந்தவர் இவர்தான்)

கொள்ளைக் கூட்டத்தினர் பதுங்கியிருக்கும் கணவாய்களில் தண்ணீரை அதிகமாகப் பாய்ச்சினால், கொள்ளையர்கள் வெளியே வருவார்கள் பிடித்து விடலாம் என்ற கருத்தை முன்வைத்தார்.

வி.பி.சிங்கின் நம்பிக்கைக்குரிய பொலிஸ் அதிகாரி ஒருவர் இன்னொரு யோசனை கூறினார்.

"பொலிஸ் நாய்களைப் பழக்குவது போல், சிறுத்தைப் புலிகளை பழக்கி கணவாய்களில் ஏவினால், அவை கொள்ளையர்களைப் பிடித்துவிடும்" என்று கூறினார்.

"கணவாய்களில் விமானப்படை குண்டுகளை வீசவேண்டும்" என்று மற்றொரு அதிகாரி யோசனை கூறியிருந்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டங்களைத் தொடர்ந்து பொலிசாருக்கு நவீனரக ஆயுதங்களை வழங்க முடிவு செய்யப்பட்டது.

கொள்ளையர்களிடம் நவீன ஆயுதங்கள் இருக்கின்றன. எனவே பொலிசாருக்கும் அதற்கு ஈடான ஆயுதங்கள் தேவை என்று அதிகாரிகள் கேட்டிருந்தனர்.

எஸ்.எல்.ஆர் துப்பாக்கிகள் -600, இலகு இயந்திரத் துப்பாக்கிகள் 150, மோட்டார் லோஞ்சர்கள் 20, மற்றும் அவற்றுக்கான வெடிபொருட்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்ய 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

முதல்வர் வி.பி.சிங்கின் சகோதரரான நீதிபதி சந்திரசேகர் பிரசாத்தும், அவருடைய 12 வயது மகனான அஜித் பிரதாப் சிங் மற்றும் முக்கியத்துவம்மிக்க ஒன்றானது.

இந்திய ஜனாதிபதி ஜெயில் சிங்கும் நேரடியாகச் சென்று இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டனர்.

தஸ்தாம்பூர் படுகொலையில் தப்பியவர்கள் பூலானும், முஸ்லிமும் தங்களை வேட்டையாடிய குழுவில் காணப்பட்டனர் என்ற தகவலைப் பொலிசாருக்கு தெரிவித்தனர்.

"கொள்ளைக் கோஷ்டிகளைப் பிடிப்பதற்கான முயற்சிகள் ஒரு புறம் நடக்கட்டும். அவர்கள் சரணடைய விரும்பினால் மன்னிப்புத் தரப்படும் என்பதையும் தெரிவியுங்கள்" என்று புதுடில்லி ஆட்சி பொலிசாருக்கு கட்டளையிட்டது.

பூலானும், மான்சிங்கும் சகல செய்திகளையும் தங்களிடமுள்ள சிறிய வானொலிமூலம் தினசரி கேட்டறிந்தனர்.

தனது குழுவினரை பூலான் அழைத்தாள். அவர்களை நோக்கி திடமான குரலில்:

"சரணடைந்தால் மன்னிப்புத் தரப்படும் என்று பொலிசார் ஆசை காட்டுகிறார்கள். பொலிஸ் நாய்களை நான் நம்பமாட்டேன். அவர்கள் கையில் நாம் மாட்டிக்கொள்ளும் வரைதான் அன்பொழுகப் பேசுவார்கள். மாட்டிக் கொண்டோம் என்றால், பின்னர் எஜமானர்களாகிவிடுவார்கள். உங்களில் யாருக்காவது சரணடையும் எண்ணம் இருந்தால் தாராளமாகச் சரணடையலாம். நான் தடுக்கமாட்டேன்."

சொல்லிவிட்டு அனைவர் முகங்களையும் பார்வையால் அலசினாள். சிலர் ஊசலாடுகின்றனர் என்பது முகங்களில் தெரிந்தது. வேறு சிலர் பதில் சொல்ல அவகாசம் தேவை என்பதுபோல தலையைச் சொறிந்தனர்.

மான்சிங்கும், மூன்று நான்கு பேரும்தான்: "நீங்கள் எடுக்கும் முடிவுக்கு நாங்கள் கட்டுப்படுவோம்" என்று கூறினார்கள்.

திருப்பங்கள் தொடரும்...

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 522

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | | | 11 | |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| | 20 | 21 | 22 | 23 | 24 |
| | 26 | 27 | 28 | 29 | |
| 31 | 32 | 33 | | | 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 11.06.2013 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 523
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-168, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 521- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ந | 2 ம | 3 ச | 4 ம் | | 6 த |
| 7 ள | 8 து | 9 க் | 10 கு | | 12 னி |
| 13 வெ | | 15 கா | 16 பி | | 18 நா |
| 19 ண் | | 21 த் | | 23 து | 24 ய |
| 25 பா | 26 ரி | | | 29 ரி | 30 க |
| | 32 ச | 33 த் | 34 தி | 35 ய | 36 ம் |

### இடமிருந்து வலம்

01.அனைவராலும் குருஜீ என்று அன்போடு அழைக்கப்படும் இளைய வயதுடைய ஆத்மீகத் தலைவர்.

07. சாந்தம்.

15. மறுப்பு அல்லது ஆட்சேபம். (குழம்பியுள்ளது)

20. அட்டபோகத்தில் ஒன்று.

25.பரம்பரை. (குழம்பியுள்ளது)

31.இரண்டு

36.வலி அல்லது பலவீனம்.

### மேலிருந்து கீழ்

01.மலேஷியா நாட்டின் பிரதமர்.

02.கருப்பூரம் அல்லது வாயு

05.அச்சம் அல்லது தெளிவின்மை (குழம்பியுள்ளது)

15.எல்லை அல்லது கழுத்து (குழம்பியுள்ளது)

16.பிசாசர் அல்லது மனிதர் (குழம்பியுள்ளது)

18.குத்துவிழும் சத்தம் இப்படியாம்.

20. யாழ்ப்பாண நூலகத்தின் உருவாக்கத்திற்கு முன்னின்று பாடுபட்ட வணக்கத்திற்குரிய அடிகளார் இவர்.

25.சமையல் அறையில் உள்ள மருத்துவக் குணமுடைய பொருள் ஒன்று.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 521 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

ம.றுசாந்தன், கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. கு.வைஜெந்தி, லுணுகம்வேஹேர.
02. க.கமால்தீன், புன்னக்குடா வீதி, ஏறாவூர் -03
03. கே.ராதா, செங்கலடி, மட்டக்களப்பு.
04. ப.சோதிலிங்கன், முத்தையன்கட்டு.
05. ச. குமுதினி, மகாறம்பைக்குளம், வவுனியா.
06. ப.நவுசாந்தினி, கடற்கரை வீதி, திருகோணமலை.
07. ஜ.அலன் பீற்றர், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
08. எஸ்.சுவர்ணன், கொழும்பு - 06.
09. ஆர்.மதிவண்ணன், நீர்கொழும்பு.
10. ப.ரமணன், தென்னங்கும்புர, கண்டி.







## நடிகையின் டைரி கவர்ச்சிப்படமா?

கொலிவூட்டில் 'சிலந்தி' படத்தின்மூலம் பரபரப்பாக பேசப்பட்ட இயக்குநர் ஆதிராம், ஷனாகான் நடித்த 'நடிகையின் டைரி' படத்துக்கு நிர்வாகத் தயாரிப்பாளராக பொறுப்பேற்றுள்ளார்.

கதையின் நாயகியாக ஷனாகான் நடித்திருக்கும் 'நடிகையின் டைரி' படத்தில் சுரேஷ் கிருஷ்ணா, அரவிந்த், சுபின், ஷாந்தி வில்லியம்ஸ், இயக்குனர் மது மற்றும் பலர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளார்கள்.

இப்படத்தை பிரபல மலையாள இயக்குனர் அனில் இயக்கியுள்ளார். வசனங்களை பட்டைத்தீட்டி, பாடல்களை மெருகேற்றி, ஒரு நேரடித் தமிழ்ப்படம் போன்ற உணர்வை ரசிகர்களுக்கு இப்படம் கொடுக்கும்.

தற்போது பரபரப்பாக பேசப்படும் இந்தப்படம் கவர்ச்சிப்படமல்ல. சினிமா உலகில் கோடி கட்டிப்பறந்த கவர்ச்சி நடிகை சில்க் ஸ்மிதாவின் காதலும், கண்ணீரும் கலந்த நிஜ வாழ்க்கை இது. அகால மரணத்திற்கு அவரை இழுத்துச் சென்ற முக்கிய சம்பவங்கள் மட்டும் உணர்ச்சிபூர்வமாக இப்படத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ரசிகர்களுக்கு இப்படம் நிச்சயம் பிடிக்கும் என்கிறார் நடிகையின் டைரி நிர்வாக தயாரிப்பாளர் ஆதிராம்.

## சனாகான் தலைமறைவு

நடிகை சனாகான் திடீரென மாயமாகி உள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழில் சிலம்பாட்டம் படம் மூலம் அறிமுகம் ஆனவர் சனாகான். அதன் பிறகு ஆயிரம் விளக்கு, பயணம் போன்ற படங்களில் இவர் நடித்துள்ளார். அவ்வப்போது பொது மேடைகளில் எதையாவது பேசி பரபரப்பை பற்றவைப்பார். பொலிவூட்டில் பாம்பேடு கோவா, ஹலோ பேரல் என ஒன்றிரண்டு படங்களில் நடித்திருந்தாலும் அங்குள்ள நடிகைகளின் போட்டிக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தார்.

அந்த சமயத்தில்தான், சல்மான் கான் நடத்திய பிக் பாஸ் சீசன் 6 ரியாலிட்டி ஷோவில் சனாகான் பங்கேற்றார்.

இதனால் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகமானதாக கூறப்படுகிறது. மேலும் தன்னுடைய மென்டல் படத்தில் சனாவைதனக்கு ஜோடியாக்கினார் சல்மான். இந்நிலையில் தன்னுடைய உறவினர் பையனுக்காக மைனர் பெண்ணை கடத்த முயன்றார் என்று சனா மீது புகார் எழுந்துள்ளது. இதில் மூவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் சனாகான் தலைமறைவாகியுள்ளார். இதனால் மென்டல் உள்ளிட்ட படங்களின் படப்பிடிப்பு பாதிக்கப் பட்டுள்ளது.

## ஸ்ரீசாந்துடன் நெருங்கி பழகிய நடிகைகள்

கிரிக்கெட் சூதாட்டத்தில் கைதான ஸ்ரீசாந்துடன் நெருங்கிப் பழகிய நடிகைகள் விவரங்களை பொலிசார் சேகரிக்கிறார்கள். அவர்களிடம் விரைவில் விசாரணை நடத்தப்படும் எனத் தெரிகிறது. ஸ்ரீசாந்துடன் அதிக நெருக்கம் வைத்திருந்தவர் இந்தி நடிகை சுர்வின் சாவ்லா. இருவரும் ரியாலிட்டி ஷோ ஒன்றில் ஜோடியாக நடனம் ஆடினர். அதன் பிறகு அடிக்கடி சந்தித்து பேசினார்கள். இருவரும் காதலிப்பதாகவும் கிசுகிசுக்கள் வெளியானது. எனவே சுர்வின் சாவ்லாவிடம் பொலிசார் விசாரணை நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீசாந்துடனான தொடர்பு குறித்து சுர்வின் சாவ்லா கேட்டபோது, ஸ்ரீசாந்தும் நானும் நண்பர்களாக இருந்தோம். ஆனால் சமீபகாலமாக அவருடன் நான் தொடர்பில் இல்லை என்றார்.

சூதாட்டத்தில் ஸ்ரீசாந்த் கைதான போது 'கேன்ஸ்' படவிழாவில் இருந்தேன் என்றும் தெரிவித்தார். ஸ்ரீசாந்த் கைதானது தனக்கு அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது என்றும் கூறினார். ஸ்ரீசாந்த் மலையாளத்தில் தயாரான 'மழவில்லி கூட்டம்' என்ற படத்தில் நடித்து இருந்தார். இதில் கதாநாயகியாக அர்ச்சனா கவியும், நாயகனாக அப்பாஸ் ஹசனும் நடித்தனர்.

இப்படத்தில் நடித்தபோது எந்தெந்த நடிகையுடன் ஸ்ரீசாந்த் நெருக்கமாக இருந்தார் என்பது பற்றியும் விசாரிக்கின்றனர். தமிழ் நடிகை ஒருவர் திருவனந்தபுரம் சென்று கிரிக்கெட் வீரர்களுக்கு அளித்த விருந்தில் பங்கேற்றார். அப்போது ஸ்ரீசாந்துடன் அவர் நடனமாடியதாக கூறப்படுகிறது. அந்த நடிகையிடமும் பொலிசார் விசாரணை நடத்த உள்ளனர்.





## சில்க் ஸ்மிதா போல சாதிக்க போகிறேன்!

சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கையை மையமாக கொண்டு உருவாகும் நடிகையின் டைரி படத்தில் நடித்திருப்பவர் சனாகான்.

இதற்கு முன்பு பல படங்களில் நடித்திருந்தாலும், தற்போது தான் சனாகான் என்ற பெயரை ரசிகர்கள் உச்சரிக்கத் தொடங்கியிருக்கிறார்களாம்.

அதனால், தனது மார்க்கெட்டு சூடுபிடித்திருக்கும் இந்த நேரத்தை சரியான முறையில் பயன்படுத்தி கொள்ளவேண்டும் என்று நினைக்கும் சனாகான், சில்க்கைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் அவரது கதையில் நடிக்கவேண்டும் என்றதும் அவரது முக்கியமான படங்களையெல்லாம் பார்த்தேன். அந்தவகையில், அவர் வேடத்தில் நடிக்க எனக்கு சான்ஸ் கிடைத்தது பெருமையான விசயம்.

# கமலுடன் இணைகிறார் யுவன்

கமல்ஹாஸனின் ஆஸ்தான இசையமைப்பாளர் எனும் அளவுக்கு தொடர்ந்து இசையமைத்தவர் இளையராஜா. இளையராஜாவின் மூத்த மகன் கார்த்திக் ராஜா கூட காதலா காதலா படத்துக்கு இசையமைத்தார். இந்த இடைப்பட்ட காலத்தில் கோடம்பாக்கத்தில் உச்சம் தொட்டார் யுவன் சங்கர்ராஜா. இன்றைக்கு வாங்கும் சம்பளம், இசையமைக்கும் படங்கள் என எந்த அடிப்படையில் பார்த்தாலும் யுவன் சங்கர் ராஜா முதலிடத்தில் உள்ளார்.

ஆனாலும் அவர் இதுவரை ரஜினி, கமல் படங்களுக்கு மட்டும் இசையமைக்கும் வாய்ப்பைப் பெறவில்லை. இந்நிலையில் லிங்குசாமி இயக்கத்தில் கமலின் நடிப்பில் உருவாகும் புதிய படத்திற்கு யுவன்தான் இசையமைக்க உள்ளார்.

இதைக் கேள்விப்பட்ட கமலும், என் படத்துக்கு யுவன் இசையமைக்க வேண்டும் என்று ரொம்ப நாளாக ஆசைப்பட்டேன். அது நடந்திருப்பதில் எனக்குத்தான் மிக்க மகிழ்ச்சி என்றாராம்.






# சூதாட்டம், விளையாட்டுக்கு கெட்டபெயர் – தீபிகா படுகோனே

பிரபல இந்தி நடிகை தீபிகா படுகோனே. இவர் பேட்மிண்டன் முன்னாள் வீரர் பிரகாஷ் படுகோனேயின் மகள் ஆவார். தீபிகா படுகோனே நடித்து உள்ள 'ஏக் ஜவானி ஹெய்ன் தீவானி' என்ற படம் வெளியாக உள்ளது. இந்த படத்தில் அவரது முன்னாள் காதலர் ரன்பீருடன் நடித்து இருக்கிறார். இந்த படம் வருகிற 31-ஆம் திகதி திரைக்கு வர உள்ளது.

இதையட்டி, படத்தை விளம்பரப்படுத்துவதற்கான நிகழ்ச்சி பெங்களூரில் நடந்தது. இதில் கலந்து கொள்வதற்காக நடிகை தீபிகா படுகோனே வந்திருந்தார். அவரிடம், சமீபத்தில் கிரிக்கெட் சூதாட்ட வழக்கில் நடிகர் விண்டு ரந்தவா கைது செய்யப்பட்டது குறித்து நிருபர்கள் கேள்வி கேட்டனர். அதற்கு பதிலளித்து தீபிகா படுகோனே கூறுகையில்,

"சூதாட்டம் எந்தவொரு விளையாட்டு என்றாலும் அதற்கு கெட்ட பெயரை கொண்டு வந்துவிடும். அதுமட்டுமின்றி சூதாட்டத்தில் சம்பந்தம் இல்லாதவர்களையும் அதில் சிக்க வைத்துவிடும். விளையாட்டு வீரர்கள் தங்களது திறமையின்மூலம் நாட்டுக்கு சந்தோசம், உற்சாகம், பெருமையை கொண்டு வர முடியும். ஆனால், இதுவிஷயத்தில் சூதாட்டம் அவர்களுக்கு உதவியாக அமையாது" என்றார்.

# இரவு நேரத்தில் இசையமைப்பதில்லை

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானை பார்க்க வேண்டுமென்றால் இரவு நேரங்களில்தான் முடியும் என்பார்கள்.

காரணம், இரவு நேரத்தில் இடையூறுகள் அதிகமாக இருக்காது என்பதால் அந்த சமயத்தில் தான் கம் போஸ ிங் மற்றும் இசைக் கோர்ப்பு பணிகளை நடத்துவார் அவ இதுக் குறித்து அவர் கூறுகையில், ஆரம்ப காலங்களில் அந்த நேரத்தை நான் தெரிவு செய்தேன். எனக்கு அந்த அமைதி அப்போது தேவைப் பட்டது. அதோடு, இரவு தூக்க மின்றி இசை யமைப் பது கடி- னமாகவும் தெரிய வில்லை. ஆனால், இப்போது நிறைய ஓய்வு தேவைப்படுகிறது. காரணம், இந்தியா மட்டுமின்றி, அயல்நாடுகளிலும் இசையமைக்க சென்று ஒரு ரவுண்டு வந்து விட்டேன். அதோடு விட்டது. அதனால் பகல் நேரம் இசையமைத்து, இரவு நேரத்தில் ஓய்வெடுத்து வருகிறேன் என்கிறார்.

# காதலுக்காக மாறிய கௌதம்

மணிரத்னத்தின் கடல் படத்தின் மூலம் அறிமுகமானார் நவரச நாயகன் கார்த்திக்கின் மகன் கௌதம்.

அப்படத்தில் முதல் படம் என்று தெரியாத அளவுக்கு அவருக்கு நல்ல ட்ரெய்னிங் கொடுத்து நடிக்க வைத்திருந்தனர். இருப்பினும் படம் தோற்றுப்போனதால் கௌதமின் நடிப்பு பேசப்படவில்லை.

அதோடு, மணிரத்னத்தின் அறிமுகம் என்பதற்காக அவரை வைத்து அடுத்தடுத்து படம் இயக்க காத்து நின்ற சில இயக்குனர்களும் அவரது முதல் தோல்வி நம்மை தொற்றி கொள்ளக் கூடாது என்று ஓட்டம் பிடித்தனர்.

இருப்பினும் சினிமாவில் இதெல்லாம் சகஜம் என்று மகனை தட்டிக்கொடுத்து வந்த கார்த்திக், அவருக்கான படவேட்டைகளிலும் தீவிரமடைந்தார்.

அவரது முயற்சியின் பலனாக இப்போது 3 படத்தை இயக்கிய ஐஸ்வர்யா தனுஷ் இயக்கும் கை ராஜா வை படத்திற்கு கமிட்டான கௌதம் இப்போது தெலுங்கில் வெளியான அலமொடலய்ண்டி என்ற தெலுங்கு படத்தின் தமிழ் ரீமேக்கிலும் நடிக்கிறார்.

கமர்சியல் காதல் கதையான இப்படத்தில் கௌதமுக்கு ஜோடியாக புத்தகம் படத்தில் நடித்த ரகுல் பரீத் சிங் நடிக்கிறார். கடந்த சில தினங்களாகவே படப்பிடிப்பு நடைபெற்றுவரும் இப்படத்துக்காக தனது பழைய கெட்டப்பை மாற்றியுள்ளாராம் கௌதம்.





# கணவனுக்கு துரோகம் செய்யும் பாத்திரத்தில் நடிக்கமாட்டேன்

அமலாபால் சினிமாவில் அறிமுகமானபோது நடித்த படம் 'சிந்து சமவெளி'. மாமனார், மருமகள் கள்ளக்காதலை மையமாக வைத்து இப்படம் எடுக்கப்பட்டு இருந்தது. இதில் கணவனுக்கு துரோகம் செய்து அவன் தந்தையுடன் கள்ளத் தொடர்பு வைத்துள்ள கேரக்டரில் அமலாபால் நடித்து இருந்தார். அந்த படத்தில் நடித்தது பெரிய தவறு என்றும் இனிமேல் அது மாதிரியான படங்களில் நடிக்கமாட்டேன் என்று அமலாபால் கூறினார்.

இதுகுறித்து ஐதராபாத்தில் அவர் அளித்த பேட்டி வருமாறு:-

சினிமாவுக்கு வந்த புதிதில் எனக்கு அனுபவம் இல்லை. கதை முழுவதையும் கேட்காமல் என் கேரக்டரை மட்டுமே தெரிந்துகொண்டு நடித்தேன். சிந்து சமவெளி நான் அப்படி நடித்த படம். இதற்காக நிறைய விமர்சனங்கள் வந்தன வருத்தப்பட்டேன். அனுபவம் இல்லாததால் அப்படத்தில் நடித்தேன். இனிமேல் சர்ச்சைகளில் சிக்கமாட்டேன். சிந்து சமவெளி மாதிரி படங்களில் நடிக்கும் தவறை செய்யமாட்டேன்.

இப்போதெல்லாம் கதை முழுவதையும் கேட்கிறேன். எனக்கு பிடித்து இருந்தால் மட்டுமே நடிக்க சம்மதிக்கிறேன்.

'மைனா' எனக்கு திருப்புமுனை படமாக அமைந்தது. தமிழ், தெலுங்கில் பிசியாக நடிக்கிறேன். இரண்டு கதாநாயகிகள் படங்கள் நடிப்பதில் வருத்தம் இல்லை. சிறு கேரக்டரில் வந்தாலும் ரசிகர்களுக்கு பிடிக்கவேண்டும். சிரஞ்சீவி மகன் படத்தில் ஒரு பாடலுக்கு ஆடினேன். சிறப்பாக இருந்தது. நான் எந்த நடிகைக்கும் போட்டி இல்லை. எனக்குள்ள வாய்ப்பை யாரும் பறிக்க முடியாது. நான் இதுவரை யாரையும் காதலிக்கவில்லை.

# தேன் கிண்ணம்



## மனச்சாட்சியே கொல்லும்

பெண்ணாகப் பிறந்திட
மாதவம் செய்திட
வேண்டும் என்ற வார்த்தை
காற்றில் கலந்திட்ட புஷ்வானமாச்சே!

நெஞ்சிலே நஞ்சுவைத்து
நாவிலே வஞ்சம் வளர்த்து
நேசிப்பின் அர்த்தம் தெரியாது
வஞ்சகன் நீ விரித்த வலைவீழ்ந்தாச்சே!

காலமெல்லாம் கன்னி உனக்காக
வாழ்வெல்லாம் நீயே துணையாக
கரம் கோர்த்து சிரம்தாழ்வேன்
என்றே கூறி ஏமாற்றி ஏமாற வைத்தாச்சே!

எந்தன் உள்ளத் துணர்வுகளும்
எண்ணத்தின் வண்ணங்களும்
உனக்கென்றே அர்ப்பணித்தேனே
பாவம் புலப்படாத பாவியாகி பல நாள் ஆச்சே!

காலக்கருக்கள் கரைந்து செல்ல
கண்ணீர் முத்துக்கள் உருகி வழிய
மேனிக்கு தீனி போட்ட மனவலியது
செல்லாக் காசாகி செத்த
பிணமாக்கியாச்சே!

முற்றத்து நிலவின் முழுநிலவு சாட்சியாய்
முடிந்தவரை காதோரம் பேசிய
கதைகள் பலதை குட்டிச் சுவராக்கியே
காத்திருக்க, கலங்க வைத்தே
கைவிரித்தாச்சே!

என்றும் புதைந்திட்ட உந்தன் முகம்
எந்தன் உணர்வுக்குள் கரைந்திட்டே
இறந்திடாது உருவாகிறது கருவாக
இதற்காய் உன் மனச்சாட்சியே
உனைக்கொல்லும்!

அப்ரார் ஏ.அஸீஸ்,
யாழ்ப்பாணம்

# ஈழத்துக் கவிஞர்கள்

## மு.கா.முகம்மது அஸ்வர்



எழுத்துத் துறையில் எந்தவிதமான பின்னணியுமில்லாமல் பாடசாலைக் காலத்திலிருந்தே இளைய படைப்பாளியாக உலாவருகின்றார் மு.கா.முகம்மது அஸ்வர். கிழக்கு மாகாணத்தின் தலை நகர் திருகோண-மலை தக்கியா விதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். இவரது கவிதைகள் காதல், பாசம், நட்பு போன்றவற்றை உருக்கமாக எளிமையான வார்த்தைகள் ஊடாக வெளிப்படுத்தும். ஐம்பத்தியேழு கவிதைகள் எழுதியுள்ள இவர், 2008ஆம் ஆண்டு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய விருது வழங்கும் விழாவில் எழுத்துத்துறைக்கான விருதை தேசிய சமாதான சங்கம் இவருக்கும் வழங்கியிருந்தது.

2003 ஆம் ஆண்டு தடம்பதித்து இடைவிடாது இன்றுவரை எழுதிக்கொண்டிருக்கின்றார்.

### இவரது கவிதைகளில் ஒன்று

**பிரிவின் ஆழம் புரியுமா?**

என் வாழ்வின்
முதல் பிரிவின்
ஆழம் உனக்குத் தெரியாது.
உன்னை நினைத்து நான்..
கண்ணீர் விடுவது
ஏக்கப் பெரும் மூச்சு
என்னை தாக்கின்றது.

நமது பிரிவின்
ஓர் ஆயிரம் சோகங்களை
நான் அழுகையால்
தேற்றிக் கொள்கின்றேன்.
உன் எண்ணங்கள்
உம்மா, வாப்பா என்றழைத்து
வியக்க வைக்கும் விளையாட்டுக்கள்
என்னை அதிர வைக்கின்றன.

நான் உன்னை நடை பழக்கிய
நம் வீட்டு மணல் தெருவில்
உன் பாதங்களைத் தேடுகின்றேன்.
பின்னர் ஏமாந்து போகின்றேன்.
உன்னை இழந்து தினம் தினம்
நான் அழும் சத்தம்
உன்னுள் எதிரொலிக்காதோ!

## என்றென்றும் நிழலாவேன்!



என்னவளே!
உன்னுள் என்னைத்
தொலைத்து விட்டேன்
என்னுள்
உன்னை
விதைத்துக் கொண்டேன்.
வான் என்றால்
நில விருக்கும்,
மலர் என்றால்
மணம் இருக்கும்.
மனம் என்றால் – அங்கு
நீயிருப்பாய்
உயிர் ஒன்றாய்
நானிருப்பேன்.
உன் மனம்
பாறையாக இருந்த
போதெல்லாம்,
வேராக நான் துளைத்தேன்.
அனுபவம்
வேருக்கல்ல,
நன்றி
நெகிழ்ந்து போன பாறைக்கு.
வேருக்கு இடமளித்த
பாறைக்கு
குடையாவேன்.

ஆனந்தன், அம்பனை.



## வந்தாலும் இருந்தாலும்

உன் அருகே வந்ததும்
நான் நெளிகிறேன்
புழுவாய்த் துடிக்கிறேன்
உன்னால் மட்டும் எப்படி
எதையுமே காட்டிக் கொள்ளாமல்
இருக்க முடிகிறது?

நீ அருகே இருக்கும் போது
கொதிக்கும் சூரியக்கதிர்
குளிர்கிறது.
நீ இல்லாத போதோ
குளிரும் நிலவின் கதிர்சுடக்
கொதிக்கிறது.

அ.சந்தியாகோ, கண்டி.



## முரண்

கோவிலின் புனரமைப்புக்கு
ஊரெங்கும்
நிதி வசூலிப்பு!
மீள்குடியேறியோர்
இன்னமும்
தரப்பாள் வீட்டில்!

அலெக்ஸ் பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.

## மன்னிப்பு அவனுக்கு ஏது?

நானொரு கொதியன் எனக்குச் சுள்ளென்று
நாடி நரம்பெல்லாம் ஏறிவிடும்!
ஏனொரு தகரத்தை அடுத்த வீட்டார்
எங்கட வேலியில் தட்டும்போதும்!

சோடா திறக்கப் பக்கென்று மேலெழும்
சோவென் றிரைச்சல் உயரமுத்த
பாடாய் எனக்குள் கொப்பளிக்கும் கோபம்
பார்க்கன் ஆரெண்டு பேச்சுதான்!

அந்நேரம் எதகப்பட்டாலும் போட்டடிப்பன்
அடுத்த நாளிலிருந்து ஒருவாரம்;
எந்நேரமும் அந்த தவறுக்காக தன்னுள்
என்புரு கும்படி வருந்திமாழ்வன்!

சின்னவொரு செயலுக்கு சினப்பது போலவே
சிறுபிழை விடினும் மனம்தாங்கா;
அன்னமதும் வேண்டா அதற்கொரு பரிகாரம்
அடையாது தூக்கமே கொள்ளற்கும்!

உணர்ச்சி நரம்புகள் புடைத்து எழுவதால்
உண்டான நரம்புத் தளர்ச்சியும்
உணர்த்தி விட்டதில் அனுபவம் மிக்கவாம்
உண்மையில் என்மனதில் ஒன்றுமில்லை!

தவறை மனதுணர் வேளையில் வருந்துவான்
தனக்குத் தெய்வத்தின் மன்னிப்புண்டு;
எவனதைச் சரியெண்டு எக்காளமிடுகிறானோ
என்றும் இறை மன்னிப்பவனுக்கேது?

–மூலபாரதி, யாழ்ப்பாணம்

## அச்சமிருந்த அடி திசைக் கடல்

இருள் வெளி ஆலமரம் அச்சத்தில்
இலைகள் சிலுப்பியதனை நேற்றுப்
பார்த்தேன்.
கடற் கிழவியின் தள்ளாட்டத்தை
கண்டதாக ஊருக்குள் எவனோ
சொல்லித் திரிவதாகக் கேள்விப்பட்டது
உண்மையாகவிருக்குமோ.

பேய் மழைக்கு ஒதுங்கிநின்ற
தண்ணீர்க் குஞ்சுகள்
சொல்லிக் கொண்டு வந்திருந்தால்
சோறு சமைத்து வைத்திருப்போம் உண்பதற்கு.

ஆனால் ஆறு பிழிந்த சாறையருந்தி
அறுநூறு பேர் கூறு போடப்பட்ட கதையை
வாசித்ததிலிருந்து
ஆல மர அச்சம் காணாமற் போய் விட்டது.

ஆல மரப் பேயிடமிருக்கின்ற பயமிப்போ
ஆழி மரக் கிளை பரப்பும் கடலுக்கு மாறி விட்டது.

காரிருள் நிறத்தில் பூரித்த அலைகளின்
மாரிக்கால அனுபவம்
மிகையானது தான் என்றாலும்
புரிந்து கொள்ளுமளவுக்கு பூதவுடல்கள் கிடையாது.

கவிதையெழுதி வாசித்த கடற்கரை மணல்
தவியாய்த் தவித்து
தன்னிடமிருந்த அத்தனை வார்த்தைகளையும்
தாரை வார்த்துக் கொடுத்துவிட்டது கடலுக்கு.

எவரோ எழுதிய கவிதை மிச்சமாகி
தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தது
ஆல மரத்தின் கிழட்டுக் கிளையொன்றைப்
பிடித்தவாறு...

எழு திசைக் கடலென்பார்
அழு குரல் ஒலிக்கின்றது
எரிச்சல்மிகு கடலென்றும் சொல்வாரினி.
சிப்பி பொறுக்கச் சென்ற அன்புக் குழந்தையை
முத்தாக விதைத்த சேதியை
முத்துக் குளித்தோர் சொல்லிக்கொண்டிருக்கின்றனர்
இப்போ....

கிண்ணியா சபருள்ளா,
பெருந்தெரு, கிண்ணியா – 06

# தேங்காய் மருத்துவத்தின் அடையாளச் சின்னம்



**தேங்காயில்** பல்வேறு மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. புரதச்சத்து, மாச்சத்து, கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு உற்பட்ட தாதுபொருட்கள், விற்றமின் சி, அனைத்து வகை பி கொம்ப்ளக்ஸ் சத்துக்கள் நார்ச்சத்துகள் என உடல் இயக்கத்துக்கு தேவைப்படும் அனைத்துச் சத்துக்களும் தேங்காயில் உள்ளன.

தேங்காய் எண்ணெய் சித்த மருத்துவத்தில் பல்வேறு மருந்துகளில் சேர்க்கப்படுகிறது. தேங்காய் எண்ணெய் எளிதில் ஜீரணமாகும். தேங்காய் எண்ணெயை தீக்காயம் பட்ட இடத்தில் தடவிவந்தால் தீப்புண்கள் குணமாகும்.

கூந்தல் வளர்ச்சிக்கு தேங்காய் எண்ணெய் சிறந்த டொனிக். தேமல், படை, சிரங்கு போன்ற நோய்களுக்காக தயாரிக்கப்படும் மருந்துகளில் பெருமளவு தேங்காய் எண்ணெய் சேர்க்கப்படுகிறது.

தேங்காய் எண்ணெய் தயாரிக்கும்போது கிடைக்கும் புண்ணாக்குடன் கருஞ்சீரகத்தையும் சேர்த்து தோல் நோய்களுக்கான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. தேங்காய் சிரட்டையில்(வெளிப்புற ஓடு) இருந்து தயாரிக்கப்படும் ஒருவித எண்ணெய் தோல் வியாதிகளை குணப்படுத்துகிறது.

**தேங்காய்ப்பால் நஞ்சு முறிவாகப் பயன்படுத்தப்படுகிறது:–** சேராங்கொட்டை நஞ்சு, பாதரச நஞ்சு போன்ற வற்றுக்கு தேங்காய்பால் நஞ்சு முறிவு சிறந்தது. தேங்காய் எண்ணெயைக் கொண்டு தயாரிக்கப்படும் தைலங்கள் பல்வேறு நோய்களுக்கு அருமருந்து.

குழந்தைகளுக்கு தேவையான எல்லா சத்துக்களும் தேங்காய் பாலில் உள்ளன. தேங்காய் பாலில் கசகசா, பால் தேன், கலந்து சாப்பிட்டால் வறட்டு இருமல் மட்டுப்படும். பெருவயிறுக்காரர்களுக்கு( வயிற்றில் நீர் கோர்த்தல்) இளநீர் கொடுத்தால் சரியாகும். தேங்காய் பாலை விளக்கெண்ணெயில் கலந்துகொடுத்தால் வயிற்றில் உள்ள புழுக்களை அகற்றும்.

தேங்காய் பாலில் காரத்தன்மை உள்ளதால் அதிக அமிலம் காரணமாக ஏற்படும் வயிற்றுபுண்களுக்கு தேங்காய் பால் மிகவும் சிறந்தது. உடலுக்கு தேவையான அமினோ அமிலங்கள் இதில் உள்ளன.

# பாதத்தில் ஆணிக்கூடுகள்!



**மனிதன்** ஆதி காலத்திலிருந்தே நாள் முழுவதும் நடந்துகொண்டோ, ஓடிக் கொண்டோ இருக்கிறான். உணவுக்காக அதிகமான உணவை உண்டு போதிய உடற்பயிற்சி இல்லாமல் இருந்தால் இருதய கோளாறு போன்ற முக்கிய நோய்களுக்கு உள்ளாகலாம்.

நடப்பது சிறந்த உடற்பயிற்சியாகும். இது இரத்த ஓட்டத்தை அதிகமாக துரிதப்படுத்தும். நடக்கும்போது சிலர் கைகளையும், கால்களையும் வீசியும், விசிறியும் நடப்பதைப் பார்த்திருப்பீர்கள். சாதாரணமாக வீட்டில் அப்படி யாராவது நடப்பார்களேயானால், அவர்களுக்கு பாதத்தில் ஆணிக்கூடு இருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம்.

ஒரு சிலர் பாதத்தில் ஏற்படும் ஆணிக்கூட்டால் மிகவும் துன்பத்திற்கு ஆளாகின்றனர். இது காலின் பாதத்தில் தசை இறுக்கமுள்ள பகுதியில் பரிந்துகாணும் ஒரு சென்ரிமீற்றர் ஆழம் செல்லும் மிகுந்த வலியைக் கொடுக்கும்.

இது சாதாரணமாக உள்ளங்காலில் அதிக தேய்வினாலும், முள் தைப்பதாலும் ஏற்படலாம். இதனால் உள்ளங்காலில் தோல் அதிக கனமாக மாறுகிறது. இப்படி அதிக கனமாகவும், முரடாகவும் மாறுமானால் அந்த இடங்களில் தோல் நமது நகங்களைப் போலவும், நாலுகால் பிராணி களின் குளம்புகளைப் போலவும் மாறிவிடும். இந்த இடங்களில் சொல்லமுடியாத வலி ஏற்படும்.

அந்த இடத்தை கத்தியால் சீவினாலும், நகத்தைக் கத்தரித்தாற்போலவே உணர்ச்சியற்றிருக்கும். இந்நிலையில் உள்ளங்காலில் ஒரு குழியுண்டாக்கி அந்த இடம் ஒரு கடினமான பொருள் போல மாறும். இந்தப் பாகம் ஒரு மரத்தின் ஆணிவேர் போல் அடியில் சென்று இறங்கும். இது நடக்கும்போதும், நிற்கும்போதும், கையினால் அமுக்கினாலும் அதிக வேதனையைக் கொடுக்கும்.

பாதத்தில் ஆணிக்கூடு எப்படி ஏற்படுகின்றன?

உடலில் முக்குற்றமான வாத, பித்த, கபம் ஆகியவற்றில் கபமான சூலை நீர் உடலில் உள்ள உப்புநீருடன் கலக்கும் போது உடலில் பல இடங்களில் அந்த நீர் தேங்கி புற்றாக வடிவெடுக்கிறது. கால் பாதங்களில் ஏற்படும் ஆணிக்கூடும் இந்த வகையைச் சார்ந்ததாகும். எனவேதான் இதனைக் கால் புற்றுநோய் என்றும் பழங்கால மருத்துவர்கள் கூறினார்கள். கருணீகச் சூலை நீர் அதிகமாக உற்பத்தியாகி உப்பு நீருடன் கலக்கும்போது உடலின் எந்தப் பாகத்திலும் இத்தகைய புற்று ஏற்பட வாய்ப்புண்டு.

ஒரு சிலர் இதனை வளரவளர வெட்டிவிடுவார்கள். அவ்வாறு செய்யாமல் அம்பான் பச்சரிசி என்ற சிறிய இலையுடைய செடியின் இலையைக் கிள்ளி அதிலிருந்து வரும் பாலை ஆணி உள்ள இடத்தின் மீது வைத்துவரவேண்டும். இவ்வாறு தினமும் இரண்டு அல்லது மூன்று தரம் பூசவேண்டும். இவ்வாறு செய்துவர ஆணி விழுந்துவிடும்.

வட்டச் சாரண வேரை தீயில் சுட்டு கரியாக்கி எடுத்து அதனை தேங்காயெண்ணையில் ஆணி இருக்கும் இடத்தில் பூசிவர விரைவில் ஆணி உதிர்ந்துவிடும்.

மருதாணியுடன் வசம்பு, மஞ்சள் சேர்த்து அரைத்து ஆணி இருக்கும் இடத்தில் வைத்து வெற்றிலையால் மூடி வெள்ளைத் துணியால் கட்டிவரவேண்டும். இப்படி தினமும் புதிதாக கட்டிவர வேண்டும். ஆணி விழுந்த இடம் மெதுவாக குணமாகும்.

# உடல் பருமனாகிறது என்று கவலையா?



**சில** வருடங்களுக்கு முன்புவரை இல்லாத அளவுக்கு இன்று உடல் பருமன் பிரச்சினை தலைவிரித்தாடுகிறது. உடல் பருமன் எப்போதும் தனியாக வருவதில்லை. நீரிழிவு, இரத்த அழுத்தம், இதய நோய், குழந்தையின்மை என ஏகப்பட்ட இம்சைகளையும் சேர்த்து இழுத்துக் கொண்டுதான் வரும். உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி என எதற்கும் கட்டுப்படாத உடல் எடையை 'லைப்போசக்ஷன்' என்கிற நவீன சிகிச்சையின் மூலம் கட்டுப்படுத்தலாம் என்கிறார் உடல் பருமன் மற்றும் குழந்தையின்மைக்கான சிகிச்சை நிபுணர் சரவணன்.

"உடல் பருமனாக இருப்பவர்களின் உடலில் சுரக்கும் ஹோர்மோன்களே, நாளுக்கு நாள் அவர்களது பருமன் அதிகரிக்கக் காரணம். சாப்பிடக் கூடாது, உணவைத் தவிர்க்க வேண்டும் என அவர்கள் கட்டுப்பாடாக இருக்க நினைக்கும்போதே பசியைத் தூண்டக்கூடிய ஒரு ஹோர்மோன், அதிகமாக சுரந்து, நிறைய சாப்பிட வைத்து, எடைக் குறைப்பை வழக்கத்தைவிட, செயலிழக்கச் செய்துவிடும்.

உடற்பயிற்சி செய்தாலும், பருமன் குறையாது. 'லைப்போசக்ஷன்' என்கிற நவீன சிகிச்சையின் மூலம், உடலின் எந்தப் பகுதியில் கொழுப்பு இருந்தாலும், அதை ஊசிமூலம் உறிஞ்சி எடுத்துவிடலாம். அறுவை சிகிச்சை இல்லாமல், ஒரே நாளில் சிகிச்சை முடித்து வீடு திரும்பலாம். மிகக் குறைவான மயக்கம் கொடுத்துச் செய்யப்படுகிற இந்த சிகிச்சையின் மூலம் இடுப்பு, வயிறு, தொடை, கைகள், மார்பகம் என எந்தப்பகுதிக் கொழுப்பையும் அகற்றலாம்.

பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணரின் உதவியோடு இது செய்யப்படும். பொதுவாக உடல் இளைக்கச் செய்கிற எல்லா சிகிச்சைகளுக்குப் பிறகும், சருமத்தில் சுருக்கம் தெரியும். இந்த சிகிச்சையும் விதிவிலக்கல்ல. ஆனால், அது அசிங்கமாகத் தெரியாமலிருக்க, சிகிச்சை செய்யப்பட்ட பகுதியின் மேல் அவரவர் உடல் அளவுக்கேற்ப, ஒரு பிரத்தியேக பேண்டேஜ் கட்டிவிடப்படும்.

இது சுருக்கங்கள் விழாமல், சருமத்தை அழகாக்கச் செய்யும். எந்த வயதுக்காரர்களும் பயமின்றி, 'லைப்போசக்ஷன்' சிகிச்சையை செய்து கொள்ளலாம். சிகிச்சை முடிந்த 3 – 4 நாட்களில் வழக்கமான வேலைகளுக்குத் திரும்பலாம்.

ஒரே முறையில் எத்தனை பகுதிகளுக்கு வேண்டுமானாலும் இதை செய்துகொள்ளலாம். வேறு எந்தவகையிலும் குறைக்கவே முடியாத கொழுப்பை நீக்கத்தான் இந்த சிகிச்சை. எனவே இதைச் செய்துகொண்டால், பிறகு உணவுக்கட்டுப்பாடோ, உடற்பயிற்சியோ தேவைப்படாமல், எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என அர்த்தமில்லை. அதிகப்படியான கொழுப்பை நீக்கி, சராசரி உடல்வாகுக்குத் திரும்பியதும், முறைப்படி உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சியை மேற்கொண்டால், மறுபடி பருமன் வராமல் காக்கலாம்.

உடல் பருமன் கட்டுக்குள் வந்துவிட்டாலே, நீரிழிவு வராது. இதய நோய்கள் தாக்கும் அபாயமில்லை. குழந்தையின்மையால் அவதிப்படுவோருக்கும், கருத்தரிக்கும் வாய்ப்புகள் அதிகரிக்கும். மொத்தத்தில் நோய்நொடியற்ற ஆரோக்கிய வாழ்க்கை வசப்படும்.



Dr. சரவணன்

# படர் தாமரை

இன்றைய நவீன உலகில் நாம் வாழ்வதற்காக சம்பாதிக்கின்றோமா அல்லது சம்பாதிக்கத்தான் வாழ்கின்றோமா என்றே புரியாமல் நம் வாழ்க்கை பயணம் ஓடிக் கொண்டிருக்கிறது. மிகக் குறைந்த சதவீத மக்கள் தொகையினர் தான் சரியான வாழ்க்கை முறையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதில் சுகாதாரத்திற்கு இடமே கொஞ்சம்தான். அதிலும் படிப்பறிவில்லாதவர்கள், வசதி குறைந்தவர்கள், போதிய அக்கறை இல்லாதவர்களுக்கு தன் சுகாதாரத்தை பற்றிய கவலை என்பதே இல்லை.



**படர் தாமரைக்கான காரணங்கள்**

படர் தாமரை பூஞ்சை தொற்றால் ஏற்படக் கூடிய ஒருவகை தோல் நோய். இது ஏற்படப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் சில:

- உடலை சுத்தமாக தேய்த்துக் குளிக்காமல் இருப்பது.
- இறுக்கமான அழுக்கான காலணி அணிவது.
- அழுக்கான ஆடைகளை அணிவது.
- சரியாக உலராத ஈரமான உள்ளாடைகளை அணிவது.
- ஒருவரின் ஆடைகளை மற்றவர்கள் மாற்றி அணிவது.
- அழுக்கான நீர், தேங்கிய குட்டை, குளம், ஏரி போன்றவற்றில் குளிப்பது.
- வீட்டில் வளர்க்கும் பிராணிகள்மூலம் பரவுவது.

**படர்தாமரை தோன்றும் இடங்கள்:**

தலை, முகம், நெஞ்சு, வயிறு, தொடை, இடுக்கு, அக்குள், நகம் மற்றும் விரல் இடுக்குகள் போன்ற இடங்களில் பூஞ்சை தாக்குகிறது. முக்கியமாக சூரிய ஒளிபடாத ஈரப்பதமான தோலை எளிதில் தாக்கி கிருமியானது வளர ஆரம்பிக்கின்றது. இவற்றில் அதிக நமைச்சல், சொறிதல் எரிச்சலுடன் வேதனை உண்டாகும். சரிவர சுகாதாரத்தை கவனிக்காதவர்களுக்கு மற்ற இடங்களில் பரவும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

நம்முடைய அன்றாட சுகாதாரம் மூலமாக எளதில் பூஞ்சை தொற்றுநோய்களை தவிர்க்கலாம். ஆரம்பத்திலேயே போதிய மருத்துவமும், சுகாதாரமும் மேற்கொண்டால் படர் தாமரை தொல்லையில் இருந்து எளதில் விடுபடலாம்.



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# லேடிஸ் ஸ்பெஷல்

## ஏமாறாதே... ஏமாற்றாதே!



பெண்கள் பொதுவாகவே இளகிய மனம் படைத்தவர்கள். ஆதலால்தான் பெண்களை இலகுவில் ஆண்களால் தம்வசப்படுத்த முடிகிறது.

தமது விருப்பமில்லாமல் பெரும்பாலும் பாலியல் நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபடுவதற்கும் இதுவும் ஒரு காரணம்.

பெண்கள் தாயுள்ளம் படைத்தவர்கள், இரக்க குணமுடையவர்கள். இதனை ஆண்கள் தமக்கு சாதகமாக்கி, பெண்களை வசப்படுத்தி, ஏமாத்துகின்றனர். இதில் அவதானமாக இருக்கவேண்டியவர்கள் பெண்களே. ஒரு பெண்ணை தொடும்போது ஆரம்பத்தில் அவள் மறுத்தாலும், போகப்போக அவளும் அதற்கு சம்மதிக்கிறாள். இதனையே ஆண்கள் விளையாட்டாக, நட்பு ரீதியாக பெண்களை தொடுவதும், தட்டுவதும் பின்பு காலப்போக்கில் அதனை சாதகமாக்கி அவர்களை பாலியல் கலாசாரத்துக்குள் உள்வாங்குகிறார்கள். இதனை அறியாது இத்தகைய ஆண்களுடன் நட்பு பாராட்டுவது பெண்களின் முட்டாள்தனம். ஆகையால் பெண்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் இருப்பதே அவசியம்.

## சமுதாயத்தில் பெண்களுக்கு கட்டுப்பாடு

சமுதாயத்தைப் பொறுத்தவரை எந்த தவறையும் ஆண்கள் செய்யலாம். ஆனால் பெண்கள் செய்யக் கூடாது என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ள விதி. ஆனால் இதை பெண் அடிமைத்தனம் என்று சொல்லக்கூடாது. சமுதாயத்தில் ஆண்கள் செய்யும் தவறுகளைவிட பெண்கள் செய்யும் தவறுகள்தான் அதிக பிரச்சினைகளை உருவாக்குகிறது. உதாரணமாக, ஒரு பெண் திருமணத்திற்கு முன்பு உடலுறவில் ஈடுபடுவதால் கர்ப்பமடைய நேரிடும். இதனால் அவள் பெற்றெடுக்கும் பிள்ளையின் எதிர்காலம் கேள்விக்குறியாகலாம். இதேபோல, திருமணத்திற்குப் பிறகு ஆண் வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்தாலும் சமுதாயத்தில் இரண்டாம் தாரம் என்று பெயர் வைத்துவிடுவார்கள்.



ஆனால் இதே ஒரு பெண் வேறு ஆணுடன் தொடர்புகொண்டால், அது அந்த பெண்ணின் குடும்பத்தையே சீர்குலைத்துவிடும். ஒரு ஆண்பிடித்த பெண்ணை பெற்றோருக்குத் தெரியாமல் திருமணம் செய்துகொள்ளலாம். அதற்கு "அவன் காதலிச்ச பெண்ணைக் கட்டீட்டான்" என்று சொல்வார்கள்.

ஆனால், ஒரு பெண் இதைச் செய்தால் அவள் ஓடிப் போய்விட்டாள் என்று கூறுவார்கள். இது போல ஒரு குடும்பத்தில் வாழும் பெண், தான் காதலிக்கும் ஆணை நம்பி வீட்டை விட்டு வெளியேறுவதால், அவள் வாழ்க்கை மட்டும் பாதிக்கப்படுவதில்லை, அந்த பெண்ணின் குடும்பத்தாரும் பல வழிகளில் பாதிக்கப்படுகிறார்கள். பெண் வீட்டை விட்டு ஓடுவதால் ஏற்படும் துக்கத்தைவிட, அதனால் ஏற்படும் அவமானமே அவர்களை நிலைகுலையச் செய்துவிடும். உற்றார், உறவினர்களுக்கும், அண்டை வீட்டாருக்கும், பெண் எங்கே என்று கேட்கும் கேள்விக்கு சொல்வதறியாது கலங்கும் பெற்றோரின் நிலை பரிதாபத்துக்குரியது.

சிலர் இந்த அவமானத்தை தாங்க இயலாமல் தற்கொலை செய்து கொள்வதுமுண்டு. சிலர் ஊரைவிட்டு சென்றுவிடுவதும், உண்டு. வீட்டை விட்டு செல்லும் பெண்ணிற்கு திருமணமாகாத சகோதரிகள் இருப்பின், அவர்களது வாழ்க்கை இன்னும் மோசமாகிறது.

திருமணத்திற்காக வரன் தேடும்போது கேட்கும் முதல் கேள்வி அவர்களது குடும்பத்தைப் பற்றியதுதான். அதில் ,ப்படி ஒரு சிக்கல் இருப்பின், மாப்பிள்ளை வீட்டார் சற்று தயக்கம் காட்டத்தான் செய்வார்கள். அக்காள் இப்படி என்றால் தங்கை எப்படி இருப்பாளோ என்று வாய்விட்டு பேசுபவர்களும் உண்டு.

சமுதாயத்தின் ஆணிவேரே பெண்தான். இதனால்தான் ஆணிவேர் எந்தவகையில் தவறுசெய்ய நேர்ந்தாலும் அதனால் பாதிக்கப்படுவது முழு மரமும்தான் என்று பயந்துதான் பெண்களுக்கு இவ்வளவு கட்டுப்பாடுகளையும் இந்த சமுதாயம் விதித்துள்ளது.



தரையைச் சுத்தம் செய்யப் பயன்படும் சோப் ஓயிலில் உள்ள இரசாயனங்கள், கால்களில் பட்டால் சிலருக்கு வெடிப்பு உண்டாகும். இதிலிருந்து விடுதலை பெற சில டிப்ஸ்!

* ஒரு நாள் விட்டு ஒரு நாள் எலுமிச்சை தோலால் பாதங்களை நன்றாக தேய்த்து கழுவுங்கள். இது வெடிப்பில் உள்ள அழுக்குகளை நீக்கி, பாதத்தை சுத்தமாக்கும். கடுகு எண்ணெயை கால், கைகளில் தேய்த்து கழுவிவந்தால், சொரசொரப்பு தன்மை நீங்கி, மிருதுவாகும்.

* பாத்திரம் தேய்க்கும் நாரில் தயிரை தொட்டு உள்ளங்காலில் தேயுங்கள். மறுநாள் தண்ணீரில் கல் உப்பைப் போட்டு நாரில் தொட்டு தேயுங்கள். தொடர்ந்து இப்படி செய்துவர, பாதம் மென்மையாக மாறுவதை காணலாம்.

* வெந்தயக் கீரையை அரைத்து கை, கால்களில் பத்துபோல் அப்பி தேய்த்து கழுவி வந்தாலும், முரட்டுத் தன்மை போய் மிருதுவாகும்.

* மருதாணி பவுடருடன் தேயிலை, சீனி தேங்காய் எண்ணெய் கலந்து கை, கால்களில் இட்டுக்கொள்வது மிகவும் நல்லது. இது வெடிப்பு மற்றும் சொர சொரப்பை நீக்கி குளிர்ச்சியாக்கி, பஞ்சு போன்று மென்மையாக்கும்.



## மருதாணி கோன் செய்யும் முறை

மருதாணி கோன் செய்தென்று பார்ப்போமா. மருதாணி பவுடர் வாங்கி நாமே தாயாரித்து பிரிட்ஜில் வைத்துக்கொண்டால் அடிக்கடி மருதாணி வைத்துக் கொள்ளலாம்.

**தேவையானவை**

மருதாணி கலவை, பிளாஸ்டிக் திக் கவர், கரண்டி கத்திரிக்கோல், செலோ டேப்

**செய்முறை**

திக் பிளாஸ்டிக் கவரை சதுர வடிவமாக வெட்டி கொள்ளவும். மருதாணி பவுடரை வெள்ளை மல்துணியில் சலித்து அத்துடன் நீலகிரி தைலம், திக்கான தேயிலைச் சாயம், சிறிது சீனி சேர்த்து உளுந்து வடை மா பதத்திற்கு கலக்கிக் கொள்ளவும். சதுர வடிவமாக வெட்டிய பிளாஸ்டிக் கவரை வேர்க்கடலை மடிக்கும் பொட்டலம்போல் மடித்து செலோ டேப் போட்டு அங்கங்கே பிரியாமால் கீழிருந்து மேலாக ஒட்டவும். பிறகு கலக்கிய மருதாணியை ஒரு கரண்டியால் உள்ளே எடுத்து நிரப்பவேண்டும். முக்கால் பாகம் நிரப்பினால்போதும். மேலே உள்ள கால்பாகத்தை மடித்து செலோ டேப் போட்டு ஒட்டி விடவும்.

டிப்ஸ்: தேயிலைச் சாயத்துக்குப் பதில் கட்டியான புளிச்சாறும் சேர்க்கலாம். மருதாணி உடல் சூட்டை தணிக்கும். மாதம் ஒரு முறை வைப்பது அனைவருக்கும் நல்லது.

## இறால் வறுவல்

**தேவையானபொருட்கள்:**

இறால் 1/4 கிலோ
மிளகாய்த்தூள் - 2 மேசைக்கரண்டி
இஞ்சி பூண்டு விழுது - 1 கரண்டி
முட்டை - 1
சோளமா - 1 மேசைக்கரண்டி
உப்பு - தேவைக்கேற்ப
எண்ணெய் - தேவைக்கேற்ப

**செய்முறை:**

இறாலின் தோலை முழுவதும் உரிக்கவும். சுத்தம் செய்து அதில் மஞ்சள் தூளை போட்டு பிரட்டவும். அதன்பின்னர் இஞ்சி பூண்டு விழுது, மிளகாய்தூள், உப்பு சிறிதளவு சோளமா சேர்த்து பிரட்டி வைக்கவும். முட்டையை நன்கு நுரை வரும்வரை அடித்துக் கொள்ளவும். ஒரு மணிநேரம் வைத்திருந்து பின் ஒவ்வொரு இறாலையும் முட்டையில் நனைத்து எண்ணெயில் பொரித்தெடுக்கவும்.



## கறுப்பான பெண்களுக்கு...!

கறுப்பான சருமம்கொண்ட பெண்கள் கோடை காலத்தில் தைரியமாய் வெளியே சுற்றலாம். ஏனெனில் அவர்களுக்கு வெப்பத்தினால் ஏற்படக்கூடிய கொப்புளங்கள், கோடைகால சரும பாதிப்புகள் எதுவும் ஏற்படாது. கறுப்பான பெண்கள் களையாக மாற வழிகள்.

முகத்திற்கு பேஷியல் போடும் முன்பு முகத்தில் உள்ள அழுக்குகளை துடைத்து எடுக்கவேண்டும். காய்ச்சாத பாலை ஒரு கிண்ணத்தில் எடுத்துக்கொண்டு சிறிதளவு பஞ்சில் நனைத்து முகத்தை துடைக்க வேண்டும்.

சருமத்தில் உள்ள அழுக்குகள் எல்லாம் வெளியேறிவிடும். நன்கு கனிந்த பப்பாளியை மசித்து எடுத்துக்கொள்ளவும். அதை வைத்து முகத்துக்கு மென்மையாக மசாஜ் கொடுக்கவும். மசாஜ் செய்கிறபோது கைகளை ஒரேஞ்சு சாற்றில் நனைத்துக் கொள்ளவும்.

கொஞ்சம் பப்பாளிக் கூழ், இரண்டு துளி தேன், கொஞ்சம் பூரல் எல்லாம் சேர்த்து கடைசியாக முகத்துக்குப் பேக் போடவும். 20 நிமிடம் ஊறவிட்டு குளிர்ந்த நீரில் கழுவ முகம் புத்துணர்ச்சியாகும்.

நன்கு கனிந்த பூவன் வாழைப் பழத்தை பிசைந்து அத்துடன் தேன், ஒரேஞ்சு சாறு, பயத்தம் மாவு கலந்து முகத்தில் தடவி, 20 நிமிடம் ஊற விட்டுக் கழுவிவர, நிறம் பளிச்சென்று மாறும்.

## பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-370

**கேள்வி : முகம் புத்துணர்ச்சி பெற என்ன செய்யவேண்டும்?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-11.06.2013

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 370
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 368 இற்கான விடை :- நம்பிக்கை, ஸ்டைல்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- உமா கருணாநிதி, சுன்னாகம்.

370

பெயர் : ..........
முகவரி : ..........
..........
தே.அ. அட்டை இல : ..........
விடை : ..........
..........
கையொப்பம் : ..........

## உலகப் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள்:

மேற்படி உலகெங்கும் வியாபித்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்னவென பல்வேறுபட்ட பொருளியல் நிபுணர்களும் பல விதமாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். அவற்றை பின்வருமாறு சுருக்கமாக நோக்கலாம்.

1. உயிரியல் எரிபொருள் (Bio Fuels) உற்பத்தி:

வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் தங்களது எரிபொருள் தேவையை நிறைவு செய்யவேண்டி உணவாகப் பயன்படும் பெருமளவிலான தானியங்களை பயன்படுத்தி உயிரியல் எரிபொருள் (எதனோல்) உற்பத்தியில் ஈடுபடுவதே இன்றைய விலைவாசி அதிகரிப்பிற்கும் பொருளாதார நெருக்கடிக்கும் காரணம் என சிலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

2. சனத்தொகைப் பெருக்கம்:

இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒன்பது பில்லியனை தாண்டவிருக்கும் தாறுமாறான உலக சனத்தொகைப் பெருக்கம், தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாக பலராலும் கருதப்படுகின்றது. எனினும் சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப உற்பத்தி வீதம் அதிகரித்துள்ளதுடன் மனித வளமிக்க இந்தியா, சீனா போன்ற நாடுகள் உலகப் பொருளாதார நெருக்கடியால் நேரடியாக பெரிதும் பாதிக்கப்படவில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

3. எதிர்பாராத காலநிலை மாற்றங்கள்:

உலகில் முக்கிய உற்பத்தி நாடுகளில் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக ஏற்பட்ட வறட்சி, சூறாவளி, வெள்ளம், மாறுபட்ட மழைவீழ்ச்சி போன்ற பாதகமான கால நிலை மாற்றங்கள் உல்க பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் எனப் பொருளியல் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றன.

4. அரசியல் ஸ்திரமற்ற தன்மை:

உற்பத்தி நாடுகளின் அரசியல், பொருளியல் ஸ்திரமற்ற நிலைமை உலகப் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களுள் ஒன்றாக சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்வாறு பலராலும் பல விதமான கருத்துக்கள் சொல்லப்பட்டாலும் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அவர்களால் கூறப்பட்ட "இந்திய மத்திய தர வர்க்கத்தினர் அதிகளவு உணவு உட்கொள்வதுதான் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்" எனும் கூற்று அதிக விமர்சனத்திற்கும் விசனத்திற்கும் உட்பட்டது என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

## உலகப் பொருளாதாரம் ஆழ்ந்த மந்த நிலைக்குள்

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கிகளில் இருந்து எளிதாகப் பெறப்பட்ட பணம் உட்செலுத்தப்பட்டுள்ளதால் இந்த ஆண்டு பெரும்பாலும் நிதியச் சந்தைகள் ஒரு ஏற்றத்தைக் கொண்டுள்ளன. ஆனால் காச நோயாளியின் கன்னங்களில் ரோசா வண்ணம் மலர்வது போல், பங்குகளின் விலைகள் ஏறியுள்ளது. பொருளாதார ஆரோக்கியத்தின் வெளிப்பாடு அல்ல, மாறாக ஆழ்ந்துபோயுள்ள நோயின் அறிகுறியாகும்.

ஸ்பெயின் மற்றும் இத்தாலியக் கடன்களுக்கான வட்டி விகிதங்கள் கடந்த சில நாட்களில் மீண்டும் தீவிரமாக ஏறியிருப்பதால் காட்சி மாற்றமடைந்துள்ளது. மற்றொரு ஐரோப்பிய நிதிய நெருக்கடிச் சுற்று அருகில் உள்ளது என்ற எச்சரிக்கைகளுக்கு நடுவே இது நிகழ்ந்துள்ளது. ப்ளூம்பேர்க் மேற்கோளிட்டுள்ள ஒரு நிதியப் பகுப்பாய்வாளரின் கருத்துப்படி, "யூரோ நெருக்கடி மீண்டும் வந்துவிட்டது", வட்டிவிகித உயர்வின் வேகம் "புதிய சந்தைப்பீதியின் கூறுபாடுகளை" வெளிப்படுத்தியுள்ளது. ஸ்பெயின் குறித்த சந்தை அச்சங்கள் பிரதம மந்திரி மரியானோ ராஜோய் அரசாங்கம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.5% க்கு சமமான வெட்டுக்களை நடத்த உள்ளது என்ற அறிவிப்பைத் தொடர்ந்து வந்துள்ளன. ஒரு முக்கிய தொழில்மயமாக்கப்பட்ட நாட்டில் மிகப்பெரிய வெட்டுத்திட்டங்களில் ஒன்றாகும் இது.

ஆனால் புதிய கொந்தளிப்புச் சுற்றிற்கு ஆதாரம் ஸ்பெயின், இத்தாலி நிலைமை மட்டுமல்ல, உலகப் பொருளாதாரம் முழுவதிலும் ஆழ்ந்துள்ள இயக்கச் சோர்வுதான். உலக நிதிய நெருக்கடி தொடங்கி நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரும், எதுவும் இன்னும் தீர்க்கப்படவில்லை. பைனான்சியல் டைம்ஸ் மற்றும் ப்ரூக்கிங்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள ஓர் அறிக்கையின்படி, "உலகப் பொருளாதாரம் உயிர்கொடுக்கும் கருவிகளை நம்பித்தான் இன்னமும் உள்ளது."

**வளைகுடா நாடுகளின் பொருளாதார சரிவுக்குக் காரணம் தங்களின் பொருளாதார முன்மாதிரியாக மேற்கு நாடுகளையே கொண்டிருந்ததால் இந்நாடுகளின் தொழில் அதிபர்கள் தங்கள் முதலீடுகளை முழுக்க முழுக்க அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் செய்திருந்தமையே என பொருளியல் நிபுணர்கள் காரணம் காட்டுகின்றனர்.**

**உலகப் பொருளாதாரத்தில் காணப்படும் ஆழ்ந்த மந்தநிலைப் போக்குகள், உடனடியான அரசியல் தாக்கங்களை கொண்டுள்ளன. இவை சிக்கன நடவடிக்கைகளைச் சுமத்துதலுடன், பணி நீக்கங்கள், பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் ஊதிய வெட்டுக்கள், வேலை வாய்ப்பின்மை, வேலைக்கேற்ற ஊதியமின்மை, விலைவாசி உயர்வு, வறுமை மற்றும் குற்றச்செயல்கள் அதிகரிப்பு என்பவற்றுடன் இணைந்து தொழிலாளர் வர்க்கத்தின்மீது சர்வதேசத் தாக்குதலை தீவிரப்படுத்தும். இந்த முடுக்கி விடப்படும் சர்வதேசத் தாக்குதலை சர்வதேச நாடுகளின் தொழிலாளி வர்க்கம் தன்னுடைய சொந்த அரசியல் – பொருளாதார மூலோபாயத்தின் மூலம்தான் எதிர்த்து நிற்க முடியும். அதற்கு சர்வதேச தொழிலாளர் ஐக்கியம் என்னும் தளம் தேவை.**

நிதிநிலைமை ஏராளமான நிதியை நிதிய முறையில் உட்செலுத்துவதின் மூலம்தான் உயிரோடு தப்பியுள்ளது. ப்ரூக்கிங்ஸ் நிறுவனத்தின் பேராசிரியர் ஈஸ்வர் பிரசாத் கருத்துப்படி, "உலகப் பொருளாதார நெருக்கடி உறுதியான பொருட்கள் வாங்குதல் இல்லாத நிலைமை, அவற்றின் மட்டத்தை அடைந்துவிட்ட கொள்கைக் கருவிகளின் செயற்பாடுகள், அதிக மாற்றீடுகள் இல்லாத நிலை மற்றும் வலுவற்ற சந்தைகளும் அரசியல் உறுதியற்ற தன்மை ஆகியவற்றால் இன்னமும் தள்ளாடிக் கொண்டுதான் இருக்கிறது.

நிலைமை நலிந்துதான் உள்ளது உரை ஒன்றில், சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிர்வாக இயக்குனர் கிறிஸ்டின் லகார்ட் உலகப் பொருளாதாரத்தின் இடர்கள் "உயர்ந்துதான் உள்ளன", "நிலைமை நலிந்துதான் உள்ளது." பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவு தரும் கொள்கைகள் தேவை என்று லகார்ட் அழைப்புவிடுத்துள்ளார். ஆனால் அத்தகைய பேச்சு, வங்கிகள் மற்றும் உலக நிதிய நிலையங்கள் ஆணையிட்டு, சர்வதேச நாணய நிதியத்தினால் வலியுறுத்தப்படும் சிக்கனத் திட்டங்களைக் குறித்த மேற்பூச்சுக்கள்தான்.

இத்திட்டத்தின் விளைவுகள் மிகத் தெளிவாக ஐரோப்பாவில் காணப்பட முடியும். கிரேக்கம் ஏற்கனவே 1930களில் இருந்த நிலைமைகளுக்கு ஒப்பத் தள்ளப்பட்டுவிட்டது. கண்டம் முழுவதும் மந்தநிலைப் போக்குகள் ஆழ்ந்துவிட்டன.

பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் (OECD) சமீபத்திய மதிப்பீடு 2012இல் பொருளாதார வளர்ச்சி கிட்டத்தட்ட பூஜ்ஜியம் என்பதைச் சுட்டிகாட்டியுள்ளது. மிக முக்கியமான ஜேர்மனியப் பொருளாதாரம் 0.1 சதவிகித வளர்ச்சியை மட்டுமே கடந்த ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் காணும் என எதிர்பார்க்கப்பட்டது. மிக நலிந்த 1.5 % ஐ இரண்டாம் காலாண்டில் எட்டலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

பிரான்ஸைப் பொறுத்தவரை, இயைந்த புள்ளிவிவரங்கள் சுருக்கம் 0.2 சதவிகிதம், 0.9% ஏற்றம் என உள்ளன. இத்தாலி இரு காலாண்டுகளிலும் முறையே 1.6%, 0.1 சரிவைக் காணக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஐக்கிய இராச்சியத்தில் 0.4 சுருக்கம் முதல் காலாண்டிலும், அடுத்த காலாண்டில் 0.5 ஏற்றமும் அடையலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பு அமெரிக்க வளர்ச்சி "வலுவாக இருக்கும்" என்று கணித்திருக்கையில், சமீபத்திய வேலை பற்றிய அறிக்கை இதை பொய்யாக்குகிறது. அதன்படி அமெரிக்கப் பொருளாதாரம் 2012 மார்ச் மாதம் 120,000 வேலைகளை மட்டுமே உருவாக்கியது: இது முந்தைய மூன்று மாதங்களின் வளர்ச்சியில் பாதிக்கும் குறைவாகும்.

## சீனாவின் வளர்ச்சி புதிய பாதை திறக்குமா?

செப்டம்பர் 2008இல் உலக நிதிய முறிவின் ஆரம்பத்தில் இருந்தே, முதலாளித்துவ முறைக்கு ஏற்றம் காண விரும்புவோர் சீனாவின் வளர்ச்சியை புதிய பாதைகள் திறக்கலாம் என்பதற்குச் சான்றாகச் சுட்டிக்காட்டினர், ஒருவேளை இது 'ஆசிய நூற்றாண்டு' என்பதற்குக் கூட வழிவகுக்கலாம் என்றனர். ஆனால் இந்த ஊகங்கள் சீனாவின் பொருளாதார வளர்ச்சி உலகப் பொருளாதாரத்தைத்தான் முற்றிலும் நம்பியுள்ளது என்ற உண்மையை புறக்கணித்துள்ளன. இத்தொடர்புகள் தான் சீனாவின் விரிவாக்கத்திற்கு மையத்தானமாக இருந்தன. அவை இப்பொழுது ஆழ்ந்துபோகும் உலகச்சரிவின் மாற்றும் கருவியாகி விட்டன.

சீனாவில் வளர்ச்சி விகிதம் கடந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்கு 8.1% என்று அறிவிக்கப்பட்டது. இது 11 காலாண்டுகளில் மிகவும் குறைவு, அரசாங்கத்தின் கணிப்பான 8.4% ஐ விடக் குறைவாகும். விகிதத்தில் ஏற்பட்டுள்ள சரிவு ஏதோ ஒரு முறை ஏற்படும் நிகழ்வு அல்ல. சீனாவின் பொருளாதார விரிவு 2010இன் கடைசி மூன்று மாத காலத்தில் இருந்து ஒவ்வொரு காலாண்டும் நலிந்து போகும் அடையாளத்தைத்தான் காட்டியுள்ளது. மொத்த இறக்குமதிகள் 5.3% மட்டுமே உயர்ந்தன. எண்ணெய் இறக்குமதிகள் 5.8% குறைந்துவிட்டன. பித்தளை 4.6% குறைந்து, இரும்புத் தாதுப் பொருள் இறக்குமதி 3.2% குறைந்துவிட்டது.

உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி குறித்த புள்ளிவிவரங்கள் உத்தியோகபூர்வ விகிதங்களைவிட குறைவாகவே இருக்கலாம். போர்பஸில் வெளியிடப்பட்டுள்ள ஒரு பகுப்பாய்வின்படி, பொருளாதாரத்தின் மற்ற பிரிவுகளைவிட வளர்ச்சியில் அதிகமாக இருக்கும் மின்சக்தி உற்பத்தி 7.1% தான் உயர்ந்தது. இதன் பொருள் உண்மையான மொத்த வளர்ச்சி விகிதம் 6% என்ற குறைந்த நிலையில் இருக்கலாம் என்பதாகும். "தற்பொழுதுள்ள இயக்கமுறை கீழ்நோக்கியதாகும். ஒவ்வொரு நாளும் நாம் மாற்றுவதற்கு மிகவும் கடினமான இயக்க நிலையைத்தான் காண்கிறோம்" என்று கட்டுரை குறிப்பிட்டுள்ளது.

இதே போக்குகள்தான் இந்தியாவிலும் காணப்படுகிறது. அங்கு தொழில்துறை வளர்ச்சி, முதலீடு ஆகியவற்றிலும் விரைவான சரிவு உள்ள நிலையில் பொருளாதார வளர்ச்சி 7%க்கும் கீழே போய் விட்டது. ஐரோப்பிய நெருக்கடியின் பாதிப்பு ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி விற்பனைப் புள்ளிவிவரங்களில் பிரதிபலிக்கிறது. இது 2012 மார்ச் மாதம் 19.5% என்றுதான் 2010-11இல் இருந்த 37.6% உடன் ஒப்பிடும்போது உள்ளது.

உலகப் பொருளாதாரத்தில் காணப்படும் ஆழ்ந்த மந்தநிலைப் போக்குகள், உடனடியான அரசியல் தாக்கங்களை கொண்டுள்ளன. இவை சிக்கன நடவடிக்கைகளைச் சுமத்துதலுடன், பணி நீக்கங்கள், பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் ஊதிய வெட்டுக்கள், வேலைவாய்ப்பின்மை, வேலைக்கேற்ற ஊதியமின்மை, விலைவாசி உயர்வு, வறுமை மற்றும் குற்றச்செயல்கள் அதிகரிப்பு என்பவற்றுடன் இணைந்து தொழிலாளர் வர்க்கத்தின்மீது சர்வதேசத் தாக்குதலை தீவிரப்படுத்தும். இந்த முடுக்கிவிடப்படும் சர்வதேசத் தாக்குதலை சர்வதேச நாடுகளின் தொழிலாளி வர்க்கம் தன்னுடைய சொந்த அரசியல் - பொருளாதார மூலோபாயத்தின் மூலம்தான் எதிர்த்து நிற்க முடியும். அதற்கு சர்வதேச தொழிலாளர் ஐக்கியம் என்னும் தளம் தேவை. புதிய பொருத்தமான பொருளாதாரச் சிந்தனையும் பொருளாதாரச் சீரமைப்பும் சர்வதேச நாடுகளில் இடம்பெறவேண்டும்.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 20



# 40 சிங்கை மைந்தன் அமரசிம்மன்

**“உண்மைதான்** பிரபு! தங்கள் வீரர்களோடு காட்டுக்குள் செல்ல நான் விரும்பவில்லை. தனித்தும் அவர்களை பின் தொடரவில்லை”

“நீ புத்திசாலி! ரோகணத்துக் காடு எம்மவரை பலி வாங்கிவிடும் என்பது முதல் காரணம் இரண்டாவது காரணம்... ?”

“நான் தனித்துப்போனால் தங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி தப்பித்துவிட்டதாக...”

“தர்மசேனா நீ நல்லவன். நீ உன் மன்னரிடம் செல்லலாம். எம்முடன் ஒத்துழைத்தமைக்கு நன்றி. அதுசரி. முக்கியத்துவம் வாய்ந்த எமது போர் நடந்த இடத்தின் பெயர் என்ன?” என்றான்.

“கேகாலைக்கு சமீபமாகத்தான் இந்த இடம் இருக்கிறது. ‘கோட்டகம’ என்று பெயர்”

“நல்லது இந்த இடத்தில் எமது வெற்றியை குறிக்கும் ஓர் கல்வெட்டினை நாட்டிவிட்டு நாம் ஊர் திரும்புகின்றோம். கதிரவா! காலாட் படையினரை கலங்களில் கூட்டிச் செல்லுங்கள். நாங்கள் தரைப்பாதையூடாக வந்து சேர்க்கின்றோம்” என்று கூறிவிட்டு கூடாரத்துக்குள் சென்றான்.

சிங்கை நகர் விழாக்கோலம் பூண்டிருந்தது. அரண்மனை முன்றலில் மன்னரும் துணைவியாரும், அமரசிம்மனின் படையணியின் வருகைக்காக காத்திருந்தனர். மதுரவல்லி ஒருபுறம் மகிழ்ச்சியும், கேரளத்தில் இருந்து வந்த செய்தியால் மனம் ஓர் நிலையில் இல்லாது தவித்துக் கொண்டிருந்தான். கண்ணுக்கு எட்டிய தூரத்தில் புழுதியை கிளப்பி வரும் புரவிப் படையணியைப் பார்த்துவிட்டு கோட்டைத் தலைவன் ஊதுகொம்பு ஊதுபவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்க படை வரவை அறிவுக்கும் ஊதுகொம்புகள் ஒலி எழுப்பின. தொடர்ந்து மக்களின் ஆரவார ஒலி ஆட்டம், பாட்டு முதலிய கலை நிகழ்வுகள் எல்லாம் ஒரே குதூகலமாக இருந்தன.

பூரண மகிழ்ச்சியுடன் வந்திறங்கிய அமரசிம்மனுடன் மன்னரும் விருந்துண்ட பின் பெரிய உடையார் அவனை அழைத்து சேர மன்னன் நோய் வாய்ப்பட்டிருப்பதையும், உடனடியாக அவன் மதுரவல்லியை அழைத்துக்கொண்டு சேர நாடு செல்லவேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

“ஓ.... இதனால்தான் எமது வெற்றி விழாவை பூரண மகிழ்ச்சியுடன் கொண்டாட முடியாது மதுரவல்லி அவஸ்தைப்படுகிறாளா?” என்றான் அமைதியாக.

“எப்படி மகிழ்ச்சியுடனிருக்க முடியும்? ஆனாலும் இளவரசி அதனைக் காட்டிக் கொள்ளவில்லை. பெற்றவன் கடுமையான நோயினால் அவஸ்தைக்குள்ளாகி இருக்கும் போது எப்படி அவர் களால்...” என்று பெரிய உடையார் நிறுத்தியதும்...

“நான் ஏற்கனவே தங்களிடம் கூறியிருக்கிறேன் அமரசிம்மனுக்கு எமது இராச்சிய விசயம்தான் பெரிதாய் தெரியுமே தவிர மதுரவல்லியின் மனத்துயரை பொருட்படுத்தமாட்டான் என்று. இங்கே பார் அமரசிம்மா! உடனடி யாக மதுரவல்லியை அழைத்துக் கொண்டு சேர நாட்டுக்குச் செல். இது என் கண்டிப்பான அன்புக் கட்டளை” என்று கூறிக் கொண்டே வந்தார் மன்னர் கனகசூரியர்.

“நான் இரண்டொரு நாள் கழித்துப் போகக் கூடாதா?” என்றான்.

“கேட்டீர்களா மந்திரியாரே! நான் சொன்னால் கேட்கமாட்டான் என்று தானே தங்களிடம் கூறினேன்”

“மன்னர் ஏன் அவசரப்படுகிறார் தெரியுமா?” என்று பெரிய உடையார் கேட்டார்.

“அமரசிம்மா! நீ செய்த சாதனை நாடறியும், கடுமையான நோய் பாதிப்பு என்பதால்தானே சேர இளவரசர் செய்தியனுப்பியுள்ளார். நீ இங்கே தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் எனக்குத்தான் அவமானம். அதுமட்டுமல்ல நீ சேர நாட்டுக்கு போகும் முன்னர் மன்னருக்கு ஏதும் நடந்துவிட்டால்...?”

“போதும் மன்னர் பெருமானே போதும். நான் இன்று மாலையே புறப்படுகின்றேன்” என்று கூறிய போது அவனைக் கட்டித்தழுவிய கனகசூரியன் பின்வருமாறு கூறினான்.

“அமரசிம்மா! சிங்கையின் செல்வா! உன்னை பிரிந்திருக்க எனக்கு மட்டும் விருப்பமா? ஆனால் நீ பெண் வீட்டாரின் பெரும் மதிப்புடன் திகழவேண்டும். அது தான் என்னுடைய விருப்பம். நலமே சென்றுவா. நீ எனது நாட்டின் தளபதியாக இருந்தாலும் மகள் உன்னை விரும்பிய காரணத்தால் பல மன்னர்கள் பெண் கேட்டும் கொடுக்காது உன்னையே தன் மருமகனாக ஏற்ற சேர மன்னின் மனதை மகிழ்ச்சிப்படுத்து. அவன்பெற்ற மகளை மகிழவை. உன் பெருமை கண்டு சேர நாடே மகிழட்டும்” என்று அவனை தேற்றி ஆறுதல் கூறினார்.

சிங்கைப் பெருந்துறை என்றுமில்லாதவாறு மக்கள் கூட்டத்தால் நிரம்பியிருந்தது. உபதளபதிகள் எல்லோரையும் மன்னர் முன்னிலையில் அழைத்து வீரசிங்கனைத் தளபதியாக நியமித்துவிட்டு தனக்குத் தந்த ஒத்துழைப்பை வீரசிங்கனுக்கு வழங்கவேண்டும் என்றுகூறி மன்னரிடமும், மகாராணியிடமும் விடைபெற்று கப்பற்துறைக்குப் புறப்பட்டனர். மதுரவல்லியும் அமரசிம்மனும் கப்பற்துறை வரை மக்கள் கூடி நின்று அவர்களை வாழ்த்தி வழியனுப்பிய மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியே துறை முகத்துள்ளும் கூடி வாழ்த்து ஒலி எழுப்பிக் கொண்டிருந்தது.

பெரிய உடையார் தலைமையில் மந்திரி, பிரதானிகள், அரண்மனை முக்கியஸ்தர்கள், பலரும் பூரணகும்பம் வைத்து அமரசிம்மன் தம்பதிகளை வரவேற்றனர். மக்களின் வாழ்த்தொலி கடலின் அலை ஓசையுடன் சேர்ந்து ஒலித்து விண்ணை அதிரவைத்தது.பெரிய உடையார் எல்லோரையும் அமைதியாக இருக்கும்படி வேண்டிக் கொண்டார். பூரண அமைதி நிலவியதும் பெரிய உடையாரின் குரல் கணீரென்று ஒலித்தது.

“எமது நாட்டிற்கு பெருஞ்செல்வமாக விளங்கிய ‘சிங்கையின் செல்வன்’ தனது மனைவியுடன் இளவரசியின் பிறந்தகம் செல்கின்றான். சேரமன்னர் நோய்வாய்ப்பட்டிருப்பதால் சிலகாலம் இளவரசியார் தந்தையுடனிருக்க வேண்டிய சூழ்நிலை. ஆகவே எமது இராச்சியத்துக்கு ஓர் அழகுத் தெய்வத்தை மருமகளாகத் தந்த சேர நாட்டுக்கு சகலகலா வல்லவனான சிங்கை மைந்தனை நாம் சிலகாலம் அங்கே அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்” வாழ்க சிங்கை மைந்தன்” என்றுகூறி முடித்தார்.

மாடன், காராளன், செங்கோடன், கதிரவன், வீரசிங்கன், சிங்கை யாரியன் முதற்கொண்டு சகலரும் அவனிடம் தனித்தனியே விடைபெற்று அவர்களை சேர நாட்டுக் கலத்தில் ஏற்றிவிட்டனர். கலத்தின் மேற்தட்டில் நின்று எல்லோருக்கும் வணக்கம் செலுத்தி விடைபெற்றனர் அமரசிம்மன் தம்பதிகள். அன்னப்பட்சியின் முகப்புடைய அந்தக் கலம் நங்கூரம் எடுத்ததும் கடல் அலைகளை கிழித்துக்கொண்டு புறப்பட்டது. அவர்களுடைய கலத்தை தொடர்ந்து பாதுகாப்புக்கு நான்கு கலங்கள் மாடன், காராளன், செங்கோடன், கதிரவன் தலைமையில் சூழ்ந்துசென்றன. சிங்கை மைந்தன் தன் மண் மாதா கண்ணுக்கு மறையும்வரை மேல் தளத்தில் நின்று பார்த்துக் கொண்டு நின்றான்.

தாய்க்குப்பின் தாரமே என்பார்களே! அதேபோன்று மண்மாதாவின் அணைப் பினின்றும் விடுபட்டவனை மதுரவல்லி அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பில் கடல் அன்னை தாலாட்ட சிங்கை மைந்தன் தன்னை மறந்து அவளுடன் ஒன்றித்து மறந்துநின்றிருந்தான்.

(நிறைவுற்றது)





**© சிந்தியா! முல்லைத்தீவில் குடியேறிய முஸ்லிம் மக்கள் அடிப்படை வசதிகூட இல்லாமல் வாழ்வதாகத் தெரிவிக்கின்றனரே..?**

*எச்.எம்.ஷாஜகான்.*
*கல்முனை-05.*

இப்பிரச்சினை முல்லைத்தீவில் குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு மட்டும் பிரத்தியேகமானது அல்ல. வடக்கு - கிழக்கின் பல பகுதிகளிலும் அவ்வப்போது இடம் பெயர்ந்தவர்கள் இப்போது மீள்குடியேற்றப்படுவதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றது. எனினும், அவ்வாறு மீள்குடியேறுபவர்களில் கணிசமானவர்களுக்கு தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் இருக்கின்றது என்பதும், அவை விரைவாகத் தீர்த்து வைக்கப்படவேண்டியதும் அவசியம். அதேவேளை இவ்வாறான பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஓர் இரவுக்குள் தீர்த்துக் கொள்ளமுடியாது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய அதே வேளை அதையே சாக்காகக் கூறிக் கொண்டிருப்பதையும் அனுமதிக்க முடியாது.

எது எப்படியிருப்பினும் ஷாஜகான், பிரச்சினைகளை பரந்துபட்ட சமூகக் கண்ணோட்டத்துடன் பார்க்கப்படுவது அவசியம். நம் மத்தியில் உள்ள சில ஊடகங்களைப் போன்று குறுகிய வட்டத்துக்குள் சிந்தித்து இடைவெளிகளை அதிகரிக்காதிருக்க எல்லோரும் பழகிக் கொள்வது நல்லது.



**©சிந்தியா! பழம் பெரும் பாடகர் ரி.எம்.சௌந்தரராஜனின் மரணம் இசைத்துறைக்கு பேரிழப்பு அல்லவா?**

*ரி.கலிஸ்ரன்.*
*வெள்ளவத்தை.*

நிச்சயமாக! 1950 ஆம் ஆண்டு திரைப் படங்களுக்கு பின்னணிப் பாடகராக காலடி பதித்தவர். செம்மொழி மாநாட்டுக்காக ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்த செம்மொழி மாநாட்டுப் பாடல்களையும், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.

நடிகர் திலகம், மக்கள் திலகம், ஜெயசங்கர், ஸ்ரீகாந்த், சிவகுமார், கமல், ரஜினி, விஜயகாந்த் என்று சுமார் ஆறு தசாப்தங்களாக தமிழ் திரையுலக கதாநாயகர்களுக்கு உயிரோட்டமாகக் குரல் கொடுத்தவர் இன்று மௌனமாக இருக்கிறார். இருந்தாலும் தமிழ் உள்ளவரை அவரின் குரல் காற்றலைகளில் தவழ்ந்து கொண்டேயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**© சிந்தியா! வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதில் குழப்பங்கள் இருப்பது போல் தெரிகின்றதே...?**

*சு.வசீகரன்.*
*மட்டக்களப்பு.*

இது ஒரு ஜனநாயக நாடு ஒவ்வொருவருக் கும் தாங்கள் விரும்பிய வாறு கருத்துரைக்கும் சுதந்திரம் இருப்பதாகச் சொல்லப் படுகின்றது. அந்தச் சுதந்திரத்தை வைத்தே ஒவ்வொருவரும் தத்தமது மன விருப்பங்களை வெளியிட்டு வருகின்றனர்.

அதுபோன்றே வட மாகாண சபைத் தேர்தல் பற்றிய கருத்துக் களும் வெளிவருகின்றது என்றே எடுத்துக் கொள்ளலாம்.

எனினும் உள், புற அழுத்தங்களை சமரசம் செய்துகொள்ளும் வகையில் அரசாங்கம் விவேகமான தீர்மானத்தை மேற்கொள்ளும் என்று நம்பலாம்.

**© சிந்தியா! தமிழ் சினிமாவில் முன்னைய காலங்களைப் போல் நடிகைகள் நிலைத்து நிற்பதில்லையே...?**

*எம்.சர்மிதா.*
*திருகோணமலை.*

என்ன சர்மிதா இப்படிச் சொல்லி விட்டீர்கள்! ஸ்நேகா, த்ரிஷா, நயன்தாரா, போன்றோர் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தாக்குப்பிடித்து நிற்பது உங்களுக்குத் தெரியவில்லையா? திறமை உள்ளவர்கள் நிலைத்து நிற்கிறார்கள். கவர்ச்சியை நம்பிக் களம் புகுந்தவர்கள் இடம்தெரியாமல் மறைந்துவிட்டார்கள். ஒருவேளை நீங்கள் அவ்வாறான ஒருவரின் ரசிகையோ தெரியவில்லை.

**©சிந்தியா! ஆட்ட நிர்ணய குற்றச் சாட்டில் சிக்கியுள்ள ஸ்ரீசாந்துக்கு கிரிக்கெட் எதிர்காலம் உண்டா?**

*அ.றெஜிஸ்ரன்.*
*குளியாப்பிட்டிய.*

இருக்கலாம்...! போட்டி வர்ணனையாளராக, போட்டி விமர்சகராக...


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

## மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

**மீள்குடியேற்றம்** பெயரளவில் முடிந்திருக்கிறது. வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கும் அவர்களுக்குப் பதில் சொல்வதற்குமான தேவையை இல்லாமல் செய்துகொள்வதற்காக இடம்பெயர்ந்தவர்கள், அகதிகள் என்ற பெயரில் இருந்தவர்களின் பட்டியல்கள் இல்லாமல் செய்யப்பட்டன என்பது எல்லோருக்கும் தெரிந்தது.

யுத்த காலத்தின் பின்னர் மீளக் குடியேற்றப்பட்டவர்கள் தற்போது என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதற்குப் பல்வேறு உதாரணங்கள் இருக்கின்றன. அதற்கு கடந்த மாத இறுதி கிழக்கு மாகாண சபையில் எடுக்கப்பட்ட சம்பூர் மக்கள் தொடர்பான தீர்மானம் முக்கியமானது.

இருப்பினும் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

தொடர்ச்சியாக யானைத் தொல்லையை எதிர்கொண்டு வரும் தமது கிராமத்தில் இந்த வருடத்தில் மாத்திரம் 8 வீடுகள் யானைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாகவும், 50 க்கும் மேற்பட்ட நெல் மூடைகள், சோளம், அரிசி என பல உணவுப் பொருள்களையும் யானைகள் நாசமாக்கியுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றார்.

யானை வேலிகள் அமைக்கப்பட்டாலும், அவை சரியான முறையில் பராமரிக்கப்படாமையினால் அவற்றினை உடைத்து யானைகள் உள்ளே வரத்தொடங்கி பல மாதங்களாக வெலிக்காகண்டி கிராமத்தினுள் நுழைந்து அட்டகாசம் செய்வதாகவும், மீள்குடியேற்றப்பட்ட

# அதிகாரிகளின் அக்கறையில்லாத வெலிகாகண்டி கிராமம்?

சம்பூர் மக்களின் உண்மைக் உண்மையான பிரச்சினைகள் குறித்து அப்பிரதேச மக்களையும் இப்பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய உயர் அதிகாரிகளையும் கிழக்கு மாகாண முதலமைச்சர் அழைத்து நடைமுறை சாத்தியமான தீர்வுகள் குறித்து விசேட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பும் நிர்மாணமும், கிராமிய மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை அமைச்சரவை பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார்.

இது தொடர்பாக ஆராய்ந்த அமைச்சரவை சம்பூர் மக்களின் பிரச்சினை தொடர்பாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீட் தலைமையிலான விசேட கூட்டம் ஒன்றை கூட்டி, பாதுகாப்பு உயர் அதிகாரிகள், சம்பூர் மக்களினுடைய பிரதிநிதிகள், இப்பிரச்சினைகள் தொடர்பாக ஏனைய அதிகாரிகளையும் அழைத்து நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான அனுமதியினை அமைச்சரவை வழங்கியிருந்தது.

இந்த இடத்தில் மீள்குடியேற்றப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் பதுளை வீதியில் செங்கலடியிலிருந்து 30கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மிகப் பின்தங்கிய கிராமமான வெலிகாகண்டி பற்றி நாம் ஆராய்கிறோம்.

வெலிகாகண்டி மக்கள் தாங்கள் குடியேற்றப்பட்டு 2 வருடங்களாகியும் தங்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து தரவில்லை என்று மார்ச் மாதம் 20ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகம் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அரசாங்க அதிபரால் வழங்கப்பட்ட உறுதி மொழிகளுக்கமைய அண்மைய வாரங்களில் ஐக்கிய நாடுகளின் கபிராட் நிறுவனம் அங்குள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துத் தருவதாக உறுதியளித்து அதற்கான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருந்தாலும், யுத்த வடுக்களுடன் வாழும் வெலிக்காகண்டி மக்களின் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படுமா என்ற ஆதங்கம் இன்னும் அவர்களிடம் இருக்கிறது. வெலிக்காகண்டி பிரதேசம் செங்கலடி பிரதேசத்துக்குட்பட்ட பதுளை வீதியில் பெரியபுல்லுமலைக்கு அருகில் உள்ள தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் ஒன்றாகவுள்ளது.

தமிழர்களின் எல்லைப் பிரதேசங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என கடந்த காலங்களில் குரல் கொடுக்கப்பட்டுவரும் நிலையிலும் இதுவரையில் இக்கிராமம் அரசியல்வாதிகளின் கண்கள் படாத நிலையிலேயே இருந்து வருகின்றது என்பது இக்கிராம மக்களின் கவலையாகும். சுமார் 57 குடும்பங்களைக் கொண்டுள்ள இக்கிராமத்தின் இன்றைய நிலை மிகவும் கவலைக்குரிய நிலைக்கு மாறியுள்ளதாகவும் அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

வெலிகாகண்டி மக்கள் 1962ஆம் ஆண்டுகளில் நாங்கள் குடியேறியிருந்தோம் இன்று வரை எங்களுக்கு அபிவிருத்தி என்றவகையிலே எங்களுக்கு முன்னேற்றம் எதுவும் இல்லை. 1966ம் ஆண்டு எங்களுக்கு காணி கொடுக்கப்பட்டது. யுத்த வன்செயல் காரணமாக 3 தடவைகள் அகதிகளாகி வேறு இடங்களில் தங்கியிருந்து மீண்டும் வந்திருக்கின்றோம். அகதிகளாக வந்தாலும் எங்களை திரும்பவும் அங்கேயே கொண்டு குடியமர்த்திவிடுகிறார்கள்.

எங்களுக்கு தற்போது காட்டு யானைகளால் பல தொல்லைகள் காணப்படுகின்றன. குடியேற்றப்பட்டது முதல் எங்களுக்கான அடிப்படை வசதிகளான வீதி, வீடுகள், யானைப் பாதுகாப்பு, மின்சாரம், வெள்ளப் பாதுகாப்பு என எதுவுமே ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

யானைகள் பிரச்சனையை 2010ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து எதிர்கொண்டு கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு இது வரைக்கும் எந்த ஒரு முடிவும் கொடுக்கப்பட்டதாயில்லை. கடந்த வெள்ளிக்கிழமை இரவு யானை தாக்கியதில் 3 வீடுகள் சேதமடைந்துள்ளன.

தமக்கு வீடுகள், மின்சார வசதிகள், நீரப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என்றும் கூறுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புற பிரதேசங்களில் ஒன்றான வெலிக்காகண்டி பிரதேச மக்கள் பல்வேறு திட்டங்கள்மூலம் பாரிய அபிவிருத்திப்பணிகள் மாவட்டத்தில் இடம்பெற்று வருகையில் இவ்வாறான கிராமங்களில் இதுவரையில் ஒரு அபிவிருத்தி பணியேனும் 'நடைபெறாமல் இருப்பதன் காரணம் என்ன என்பது புரியாத புதிராகவே இருந்து வருகின்றது என்றும் கவலை கொள்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளின் வாழ்க்கைத்தரம் உயர்ந்த நிலையில் உள்ளபோது தங்களது அடிப்படை தேவைகூட பூர்த்திசெய்யப்படாத நிலையை உணரும் இந்த மக்கள் தாங்கள் ஏனையவர்களால் புறக்கணிக்கப்படுவதாக எண்ணும் அளவுக்கு இன்று நிலைமை உச்சக்கட்டத்தில் உள்ளது.

கடந்த வார இறுதியில் மட்டக்களப்பு தேற்றாத்தீவில் உதயம் விளையாட்டுக் கழகத்தின் கலாசார விளையாட்டு, சாதனையாளர் பாராட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து பல்வேறுபட்ட இடப்பெயர்வுகளையும் இன்னல்களையும் சந்தித்திருந்தனர்.

இந்த மாவட்டத்தில் தற்போது அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 வருடங்களில் பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு இணங்க ஐந்தாண்டுத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதில் 40 சதவீதமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், இதற்குரிய வேலைப்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. இதற்குரிய

**- பிரகஸ்பதி -**

நிதித் தேவைகள் குறித்து ஐரோப்பியம் ஒன்றியம், மற்றும் ஏனைய அமைப்புக்களிடம் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5 வருட நிறைவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டத்தின் நோக்கம் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமையில் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களைத் திரட்டுவதற்காக அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் உரிய விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதுபோல் வீடு அற்றோருக்கான வீடுகளை வழங்கும் திட்டம் மிக விரைவில் இந்த மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

தங்களது நிலையை ஏனையவர்களுக்கு தெரியப்படுத்தவும் தங்களை தொடர்ந்து புறக்கணிக்கமுடியாது என்பதை அறைகூவவும் வெலிகாகண்டி பிரதேச மக்கள் வித்தியாசமான முறையிலான இந்த ஆர்பாட்டப் போராட்டத்தை மட்டக்களப்பில் முன்னெடுத்திருந்தமையானது பெரியளவிலான ஒரு கலக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

தமது வீட்டு பொருட்களுடன் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக வந்தமர்ந்து கூடாரமிட்டு சமைத்து சாப்பிட்டு இந்த போராட்டத்தில் அவர்கள் நடத்தினர். கஸ்டத்தின் உச்சத்தினை அனுபவித்து வரும் மக்கள் என்ற அடிப்படையில் அவர்களின் ஒவ்வொரு வார்த்தையிலும் அவர்களின் நிலை வெளிப்பட்டது.

தங்களது நீண்டகாலப் பிரச்சினை குறித்து கருத்து தெரிவித்த அக்கிராம மக்கள், கதவுகள், யன்னல்கள் இல்லாத வீடுகள், கொட்டகைகள், போன்றவற்றிலேயே நாங்கள் வாழ்ந்துவருகிறோம். விவசாயம், மீன்பிடி, 'சேனை தொழில் ஆகியவற்றை நம்பியே நாம் வாழ்வை நடத்தி வருகிறோம். யானைப் பிரச்சினைகளால் அவை பாதிப்படைந்தால் நாங்கள் எப்படி வாழ்வது. இதற்கொரு தீர்வே இல்லையா? கம்பு, தடியை வெட்டி யானைகளை விரட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அதையும் மீறி வாழ்ந்து கொண்டிருக்கும் போது சூடேறிப்போன தகரத்தைக் கொடுத்து குடியமர்த்தி இருக்கின்றார்கள். பிரதேச செயலாளர், கிராம சேவையாளர்களிடம் கேட்டாலும் வீதியைப் புனரமைக்க மில்லியன் கணக்கில் காசு வேண்டும் என்று சொல்கிறார்கள். நாங்களும் மனிதர்கள் தானே, பாடசாலைக்கு மாணவர்கள் செல்வது மிகவும் கடினமாக உள்ளது காரணம் யானைகள் தொல்லை. வீதிப்பிரச்சினை என்று அடுக்கிக் கொண்டே சென்றனர்.

இரு பக்கத்தாலும் காடு சூழ்ந்த பகுதி. குடிநீர் வசதி இல்லை. பாலத்திற்குக்கூட கம்பு, தடிபோட்டு செல்லக் கூடிய நிலை. காட்டு யானைகளை இலகுவில் விரட்டிவிட முடியும் . மனிதர்கள் வளர்த்த யானைகள் என்பதால் அவைகளை விரட்டுவது மிகவும் கடினமாக உள்ளது என்று ஒரு வயோதிபர் யானைப்பிரச்சினைகள் குறித்து தெரிவித்தார்.

மக்களுடைய பிரச்சினைகளை யாரும் கவனிப்பதில்லை. இவ்வாறான பிரச்சினைகளை அரசாங்க அதிபர்கள் பார்வையிடுவதில்லை என்ற மனோநிலை மக்கள் மத்தியில் ஏற்படும் அளவுக்கு ஒரு பிரதேச மக்கள் கவனிப்பாரற்று விடப்பட்டிருக்கிறார்கள் என்ற கவலை அந்த மக்களின் ஆர்ப்பாட்டப் போராட்டம், மற்றும் மனவடுக் கருத்துக்களிலிருந்து தெரியவந்தது.

இந்த மக்களுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், மின்சார சேவைகள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், வனவிலங்கு பரிபாலனம் ஆகியவற்றுடன் பேசி இவர்களது கிராமத்தின் மின்சார, வெள்ள, யானைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அதேவேளை சம்பவ இடத்துக்கு வருகைதந்த கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், அப்பகுதியில் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி வீட்டு வசதிகளையும், வீதிப்புனரமைப்பையும் தான் செய்துதருவதாக உறுதியளித்திருந்தார்.

ஆனால் கொடுக்கப்பட்ட உறுதி மொழிகளில் வீடுகள் அமைப்பது ஒரு வெளிநாட்டு நிறுவனம் என்றவகையில் அதனால் முன்னெடுக்கப்படுவதாக அறியமுடிகிறது. ஆனால் அரசாங்க உத்தியோகத்தர்களிடம் கொடுக்கப்பட்ட பொறுப்புக்கள் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது. இவ்வாறான அசமந்த போக்கான நடவடிக்கைகள் மக்களை மேலும் கவலையுள்ளவர்களாகவும் அரசாங்கத்தின் மீதும் அதன் அதிகாரிகள் மீதும் அக்கறை அற்றவர்களாகவும் மாற்றுவதற்கான வாய்ப்புக்களையே ஏற்படுத்தும்.

மீள்குடியேற்றப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் அவர்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுவதில் சிக்கல்களை எதிர்கொண்டு வரும் வெலிகாகண்டி மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டியது அரசாங்க அதிகாரிகளின் கடமையல்லவா?

இவ்வாறான விடயங்களை ஞாபகத்தில் வைத்து அரசாங்க அதிகாரிகள் அரசாங்கத்தில் மக்களது வரிப்பணத்தில் வாழ்க்கையை நடத்துபவர்கள் என்பதனையும் ஞாபகத்தில் வைத்துச் செயற்பட வேண்டும் என்பது மக்களது வேண்டுகோளாக இருக்கிறது.

இது எதிர்காலம், மற்றும் மேம்பாடு, பொருளாதார அபிவிருத்தி என சகல துறைகளையும் உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்புமாகும்.

**- ஷர்மி -**




"பெண்களுக்கு ஊடகவியல் பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்பதற்காக நாம் ஆரம்பித்த இந்த நீண்ட தூரப் பயணம் இரண்டு வருடங்களைக் கடந்து இன்று சான்றிதழ் வழங்கும் கட்டத்திற்கு வந்திருக்கின்றது.

இப்பொழுது திருகோணமலையில் 10 இற்கு மேற்பட்ட இளம் பெண் ஊடகவியலாளர்கள் ஊடகத்துறைக்குத் தயார்ப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பது பெருமைக்குரிய விடயம்."

இவ்வாறு பிராந்திய ஆளுகைக்கு ஆதரவளிக்கும் யூ.எஸ்.எயிட். திட்டத்தின் (USAID- Supporting Regional Governance Program) தலைமை அணி பிரதிநிதி சுசான் வார்ட் ( Susan Ward- Chief of Party SuRG) தெரிவித்தார்.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகத்துறையில் பயிற்சியை நிறைவுசெய்து கொண்டுள்ள

# சக்தி வாய்ந்த ஊடகத்தில் பெண்களின் சாதனை!

இளம் பெண் ஊடகவியலாளர்களைக் கௌரவித்து சான்றிதழ் வழங்கி வைத்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை கொழும்பு யூ.எஸ்.எயிட். நிறுவன அலுவலகத்தில் இடம்பெற்றது.

அங்கு நிகழ்ச்சியின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய சுசான் வார்ட் கூறியதாவது, "ஊடகத்துறை என்பது பலவகையான சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடியதொன்றாக இருக்கின்ற போதிலும் நீங்கள் மொழி, சமூக, பால், வர்க்க, பிரதேச வேறுபாடின்றி ஆக்கபூர்வ ஜனநாயக நோக்கங்களுக்காகப் பணியாற்ற வேண்டும்.

பெண் ஊடகவியலாளர்களாக இருக்கின்ற நீங்கள் குறிப்பாக சமூகத்தில் பெண்களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இலங்கையிலும் அனைத்துலக மட்டத்திலும் பெண்களைப் பற்றிக் காலாகாலமாக இருந்து வருகின்ற கண்ணோட்டங்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்து பாகுபாடற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க உங்கள் ஊடகத்துறைப் பணி உதவவேண்டும்.

பெண்கள் சார்பாக ஆண்கள் முன்னெடுக்கின்ற ஆக்கபூர்மான முன்னெடுப்புக்கள் ஒரு புறமிருக்க பெண்களாகிய நீங்கள் இன்னமும் அக்கறை எடுத்து சமூகத்தில் பெண்களைப் பற்றிய கண்ணோட்டங்களை மாற்றியமைக்க முன்வர வேண்டும்.

ஊடகத்துறை என்பது மிகவும் சக்தி வாய்ந்த ஒன்று. அதன்மூலம் பல சாதகமான விடயங்களைக் முன்கொண்டு வரலாம். சாதனை புரியலாம்." என்றார்

நிகழ்ச்சித் திட்ட அதிகாரி பிரியா பகீரதன் ( Priya Bhagirathan – Program Officer SuRG) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக வளவாளர்களான ஏ.எச்.ஏ. ஹுஸைன், எஸ். ஷோபா, ஏ. நிக்ஸன், எஸ். சுரேந்திரன் ஆகியோரும் அதிதிகளாகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

திருகோணமலை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகளை முடித்துக் கொண்ட 12 இளம் பெண் ஊடகவியலாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# அவர்கள் வருவார்களா?

முருகேசு உடையார் தன் அன்புத் துணைவியின் பிரிவால் துரும்பாய் இளைத்திருந்தார். கலகலப்பாக விளங்கிய வீட்டில் இப்போ யாருமில்லை. மூன்று ஆண் பிள்ளைகளைப் பெற்ற செல்லம்மாவுக்கு கொள்ளி வைக்க ஒரு பிள்ளை இல்லை. எண்ணியெண்ணி பெருமூச்சுவிட்ட வண்ணம் பாயோடு ஒட்டும் நிலை. படுத்த படுக்கையானார். சரசு மட்டும் அடிக்கடி தொலைபேசிச் செய்திகளை அனுப்பிக்கொண்டே இருந்தாள். தன் பிள்ளைகள் வருவார்கள் என்ற நம்பிக்கையில் அன்னம் தண்ணி இன்றிப் புரண்டார். உடையாருக்கு வருத்தம் கடுமையாம். சனங்கள் வாறதும், போறது மாக இருந்தார்கள். பிள்ளைகள் வருவார்களா? ஊரவர்களின் கேள்வி. உடையாரின் கண்கள் நிலை குத்தி நின்றன. நினைவுகள் ஓடின.

பூநகரி பிரதேசத்தில் பழம் பெரும் கிராமம் அது. சரித்திர பிரசித்திப் பெற்ற பல தொன்மையான எச்சங்களை புதைந்து கிடக்கும் உயர்ந்த மண் குன்றுகள் நிறைந்த அழகு பொலிந்த அக்கிராமம் பனை, தென்னை வளங்களுடன், கடல் வளமும் நிறைந்து இன்று பல சுற்றுலாப் பயணிகளின் கண்ணுக்கு விருந்தளிக்கும், சிற்றூர்தான் கௌதாரிமுனை.

பேரோடும், புகழோடும் வாழ்ந்துவந்த முருகேசு உடையார் வீட்டில் அந்தச் சோகச் சம்பவம் நடைபெற்று இன்று ஆறாவது நாள். நேற்று ஐந்தாவது நாள்தான் எட்டுச்செலவு என்று சொல்லப்படுகின்ற இறந்த ஆத்மாவுக்காகச் செய்யப்படும் கிரியைகள் தடல்புடலாகப் பெரும் செலவுடன் நடைபெற்று முடிந்தது. உடையாரின் மனைவி செல்லம்மாவின் படத்தின் முன் பல தரப்பட்ட உணவு வகைகள், பழ வகைகள், இறைச்சி, மீன், பலகாரங்கள், குடி வகைகள் எனப் படைத்துப் பொழுது கருகும் செக்கல் நேரத்தில் பலர், பந்தம் ஒரு கையில் ஏந்தி படைத்த பண்டங்களை எடுத்துச் சென்று கிரியைகள் நடைபெற்ற இடத்தில் படைத்து மீண்டனர்.

எடுபிடியாய் வேலையில் ஈடுபட்ட பலருக்கு உடையாரின் உபயமும் கிடைத்தது. அவர்கள் எதுவித கவலையும் அற்றவர் களாக வயிறு புடைக்கக் குடித்துக் கும்மாளம் போட்டுப் பல்சுவைமிக்க எஞ்சிய உணவுகளையும் வயிற்றிற் போட்டு உண்ட களை கொண்டவர்களாக முன் முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த தகரப் பந்தலுக்குள் குறட்டைவிட்டபடி புரண்டு, புரண்டு உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

நேரம் நடுச்சாமமாகிவிட்டதென்பதை உலகுக்குப் பறைசாற்ற சாமக்கோழிகள் பல தடவை கூவி ஓய்ந்தது. இந்த அகால நேரம். முருகேசு உடையாரின் உள்ளம் அமைதியின்றி சார்மனைக் கட்டிலில் கிடந்த வண்ணம் அங்குமிங்கும் புரண்ட வண்ணம் அமைதி இழந்த நிலையில் தவித்துக்கொண்டிருந்தது. அவரின் உள்ளக் குமுறலை யாரும் பகிர்ந்துகொள்ளவோ.... ஆறுதல் கூறவோ இல்லாத நிலைமை தான் அங்கு இருந்தது. "நான் தவறு செய்திட்டன்" "என்னால்வந்த வினைதான் எல்லாம்" அவரது வாய் மீண்டும்மீண்டும் முணுமுணுத்து ஓய்கிறது. அருகே இருந்த சுங்கானை எடுத்தார். கொட்டப் பெட்டியில் இருந்த புகையிலையை எடுத்துச் சுங்கானில் அடைக்கிறார். தீப்பெட்டியைத் தட்டிப் பற்ற வைத்து புகையை இழுத்து இழுத்து வெளியே தள்ளுகிறார். இன்று ஆறாவது நாள் இதுவரையும் ஐந்துநாள் களாக உறவினர்கள்... அயலவர்கள் என்று தங்கிருந்தவர்கள் மெல்ல.. மெல்ல உடையார் வீட்டில் இருந்து பயணம் சொல்லித் தங்கள் இருப்பிடம் நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். உடையார் வீட்டில் நீண்ட நாட்களாகப் பணிவிடை செய்துவரும் சங்கரனும் பண்ணை மாடுகளை மேய்த்துப் பட்டியில் அடைக்கும் வேலனும்தான் தஞ்சம். அடிக்கடி வரும் உடையாரின் தங்கை முறையான சரசுதான் துணை. அடிக்கடி வந்துபோவாள். ஆசைப் பண்டங்கள் செய்யும்போது அப்பண்டங்கள் உடையார் வாயிலும் சுவை ஊட்டும்.

"அவளாவது எனது பாசத்திலை அதை... இதைச் செய்துதாறாள் வேறை ஆர் என்னைக் கவனிக்கப் போகினம். எல்லாம் நான் தேடின வினை" இப்படியே சொல்லிச் சொல்லி மனம் வெதும்பிக் கண்ணீர் சிந்திய நிலையில் அவர் கண்ணில் இருந்து வழிந்தோடும் கண்ணீர் அவரது கதையைக்கூறி ஆறாய்ப் பாய்ந்து கொண்டிருக்கிறது.

வளமிக்க அக்கிராமத்தில் நான்காவது தலைமுறையாக உடையார் வேலையைச் செய்துவரச் சேவையில் இருந்து இளைப்பாறி ஒய்வூதியம் பெற்றுச் சிறப்புடன் பெரும் செல்வந்தராக, உடையார் பரம்பரை. முதிசங்களாகப் பெருந்தென்னந்தோப்புகள், நெற்காணிகள், மாட்டுப்பட்டி, எருமைப்பட்டி என்பனவும் இவற்றைக் கவனிக்க, பராமரிக்க எடுபிடி ஆட்கள் எல்லாம் ஒருங்கே கொண்ட உடையாருக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் இருந்தனர். தனது தந்தை தமக்கு எப்படி கல்வி போதித்து உயர வைத்தது போல்தான் மூன்று பிள்ளைகளையும் கிராமத்தில் பெற்ற ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து யாழ் நகரில் பிரபலமான கல்லூரியில் தமது உயர் வகுப்புக் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த காலகட்டம் அது.

பாடசாலை விடுமுறைக் காலம் என்றால் யாழ்.நகரப் பாடசாலை ஒன்றில் பள்ளி நண்பர்கள், ஒத்தார் குழுக்கள் முருகேசு உடையாரின் வீட்டிற்கு வருவதும், அவ்வூரின் எழில் கொஞ்சும் அழகை கண்டுகளிப்பதும், விருந்தோம்பும் பண்பில் உயர்ந்து நிற்கும் உடையார் மனைவி செல்லம்மாவின் அறுசுவை உணவுகளையும் அவ்வூரின் பனம் பண்டங்களை உண்பதுக்குமெனப் போட்டி போடுவதும் அவர்களுக்குப் பெரும் மகிழ்வாக உபசரணை செய்வதும் தங்கள் பிள்ளைகளைப் போலவே வரவேற்பதும் உபசரிப்பதும் அம் மாணவர்களுக்கு உடையார் குடும்பத்தின்மீது மிகுந்த பற்றையும் இறுக்கமான பிணைப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

அன்று ஒரு நாள் பல இடங்களில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களால் நகர்ப்புறம் அதிர்ந்த பல இடங்களில் பாதைத் தடைகள், பஸ்களில் சோதனை, வீதிகளில் ரயர்கள் போட்டு எரிப்பு இப்படியே பல சம்பவங்கள் இன விடுதலைக்கென முனைப்புப் பெற்று வளர்ந்துவந்த இரு குழுக்களிடையே பெரும் மோதல் பல இடங்களில் தமிழ் இளைஞர்கள் போட்டிக் குழுக்களால் வேட்டையாடப்பட்ட நிலை பல கொள்ளைகள்... மக்கள் செய்வதறியாது போராளிக் குழுக்களை வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தனர். அன்று நகர் வெறிச்சோடியது.

யாழ்.நகரின் பதற்ற நிலை அறிந்த உடையாரும் மனைவியும் கடலுக்கப்பால் துறையை நோக்கியபடி, தம் பிள்ளைகள் நிலை தெரியாத திகைப்பில் ஆழ்ந்தார்கள். நேராத கோயில் எல்லாம் நேர்த்தி வைத்தார்கள். செல்லித்தீவு அம்மனுக்கு திகிரி விநாயகருக்கு, சோபாலபிட்டி சித்தி விநாயகருக்கென வெள்ளைச் சீலைத் துணி எடுத்து மஞ்சள் தண்ணிபூசி சில்லறை முடிந்து வேப்பம் பத்தினியோடு தலை வாசகம் நிலையில் கட்டி மண்டாடிக் கொண்டிருந்தனர். யாழ். நிலையை அடுத்து சங்குப்பிட்டி கேரதீவுப் படகுச்சேவையும் நிறுத்தப்பட்டு படையினரின் காவல் முடுக்கி விடப்பட்டதை அறிந்து ஒரு நிலையில்லாமல் தவித்தார்கள் உடையாரும் மனைவியும்.

"ஐயா நீங்கள் காலாகாலம் தெய்வங் களுக்கு ஒரு குறையும் விடேல்லை. பங்குனி விழாவும் சிறப்பாகத்தானே செய்தனீங்கள். செல்லி அம்மன் உங்கடை பிள்ளைகளுக்கு ஒரு கஸ்டமும் வரவிடா... கவலைப்படாதேயுங்கோ" சங்கரனும், வேலனும் ஆறுதல்கூறிக் கொண்டேயிருந் தார்கள். அன்று அவர்கள் வீட்டில் அடுப்புக் கூட பற்ற வைக்காத நிலையில்....

அன்றைய நாள் யாழ். நகரமே அதிர்ந்து கொண்டிருந்தது. பல இடங்களின் சந்திகளில் தீ மூட்டப்பட்டு எரிந்துகொண்டிருப்பதாகவும் சில இடங்களில் மோதல்களில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களின், உடல்கள் தமிழ் இளைஞர்களினால் எரிக்கப்படுவதாகவும் பாடசாலைக்கு வந்த பாடசாலைக்காவலர்கள் மூலம் செய்தி அறிந்த மூன்று சகோதரர்களும் எப்படியும் வீட்டிற்குப் போய்ச்சேரவேண்டும். அம்மா எந்த நிலையில் இருப்பாயோ தெரியாது" பெரும் பீதியுடன் நள்ளிரவு நேரத்தில் பாடசாலை விடுதியின் பின்புற மதிலால் குதித்துக் கண்டிவீதி வழியே நாவற்குழியை நோக்கி நடக்கத் தொடங்கினர். சந்தியை அண்மிக்கும்போது சந்தியில் பெருஞ் சுவாலை விட்டு எரிந்த தீமெல்ல மெல்ல அணைந்து கொண்டிருந்தது. அந்த வெந்தணலில் இரு உடல்கள் எரிந்து கருகிய நிலையில் கண்ட சின்னவன் செந்தில் அண்ணன் சரவணனைக் கட்டிப் பிடித்தபடி அழத் தொடங்கினான். அவனுக்குத் துணிவையூட்டிக் கண்டி வீதியில் இருந்து பிரியும் கேரதீவுக் கரையை அடைந்துவிட்டால் வள்ள ஓட்டம் இல்லாவிடினும் மீன்பிடி வள்ளங்களிலாவது சங்குப்பிடித் துறைக்குப் போய்விட்டால் வீடு போய்ச் சேர்ந்ததுக்குச் சரி என்று சொல்லிக்கொண்டு வேகமாக நடந்து கொண்டிருந்தான். பசிக்களை... நீண்டதூரம் நடந்த அலுப்பு.. பெரும் சிரமத்துடன் தனங்கிளப்பு, மறவன்புலோ, அறுகுவெளி என அச்சிற்றூர்களின் பரந்து விரிந்து பச்சை பசேலெனக் காட்சியளித்த அவ்வயல் வெளியினூடாக நீண்டுசெல்லும் அவ்வீதியில் நடந்துகொண்டிருந்தனர். மாரிகால மழைக்கும் கடற்காற்றும் அவர்கள் உடலில் மோதித் துன்பத்தை ஏற்படுத்தும் நிலையில் நம் ஊரைச் சென்று அடைந்துவிட வேண்டுமென்ற ஒரே நோக்கில் வயல்வெளிகளைத்தாண்டி கடல் நடுவே ஊடறுத்துச் செல்லும் பாதையிலே நடந்துகொண்டிருக்கும் அவர்களுக்குக் கேரதீவுத்துறை நன்கு தெரிந்தது. வேகமாகப் பொங்கி மேலெழுந்து அடிக்கும் அலைகள் அவர்கள்மீது உப்பு நீரை வாரி இறைக்கிறது. அலையோடு துள்ளி வீதியில் விழும் மீன் வகைகள் துடிதுடித்து மீண்டும் கடலுக்குள் போய் விழும் காட்சியை நின்று ரசிக்க முடியாதவாறு விரைந்துசென்று அடிவானில் கிழக்கு வெளிக்கும் நேரம் கேரதீவு துறையை அடைந்தனர்.



கலகலப்புடன் எந்நேரமும் விளங்கும் கேரதீவுத்துறை வெறிச்சோடிக் கிடந்தது. துறையின் அலுவலகமும் பூட்டப்பட்டு "வள்ள ஓட்டம் நிறுத்தப்பட்டுள்ளது" என்று விளம்பரப்பலகை காணப்பட்டது. சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த சரவணன் தன் தம்பியருடன் அங்கே கட்டப்பட்டிருந்த ஒரு தோணியின் கட்டுக்களை விலக்கித் தன் தம்பியர் இருவருடன் சங்குப்பிட்டித் துறைக்கு இடையில் உள்ள கடல் வெளியைத்தாண்டிக் கரையை வந்தடைந்தான்.

அங்கு அவர்கள் முற்றிலும் எதிர்பார்க்காத நிலைமை மரண பயத்தை ஏற்படுத்த அல்லோலப்பட்டனர். தோணியைக் கரையை அணைக்க முற்பட்டவேளை வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. "கான்ஸ் அப்" கட்டளையோடு பல படைவீரர்கள் அருகே ஓடி வந்தனர். மூவரையும் இறக்கி விசாரணைசெய்து துருவித்துருவி கேள்விகள் கேட்டனர். ஆங்கில மொழியிற் பேசக்கூடிய சரவணன் அவர்களுக்குத் தங்கள் நிலையை விளக்கினான். பொறுப்பதிகாரி ஏற்கனவே முருகேசு உடையாரின் நெருக்கமானவன்.

அவரது பிள்ளைகள் என்று அறிந்தவுடன் அவர்களுக்கு சூடான கோப்பி கொடுத்து உபசரித்துத் தனது ஜீப் வாகனத்தில் அவர்களுடைய கிராமத்துக்கு அனுப்பி வைக்கும்படி பணித்தான்.

மூன்றாவது நாளாக பெருங்குழப்பத்தில் இருந்த உடையார் வீட்டில் பிள்ளைகளின் வருகை பெருமகிழ்ச்சியைத் தந்தது. உடையாரின் பிள்ளைகள் வந்து சேர்ந்து விட்டார்கள் என்ற செய்தி கிராமமெங்கும் பரவியது. மக்கள் நகரப் புதினமறிய நிறைய வந்து போய்க்கொண்டிருந்தனர். பிள்ளைகள்பட்ட அவலங்கள், நகரில் போராளிக்குழுக்களின் போட்டி நிலையால் பெரும் கலக்கமடைந்தார் உடையார். விடுதலைப் போராட்டமெனக் கிராமங்கள் தோறும் கருத்தரங்குகள்... ஆட்சேர்ப்புகள் கட்டாயப்படுத்தல்கள், இராணுவ ரோந்துகள்... சிந்தித்த உடையாரும் மனைவியும் ஒரு முடிவுக்கு வந்தனர். தம் பிள்ளைகளை இங்கு வைத்திருப்பது பாதுகாப்பில்லை என்ற முடிவுக்கு வந்தனர். தங்களுக்குத் துணையாக இளையவன் செந்திலை வைத்துக்கொண்டு சரவணனை யும், தம்பியையும் மேற்குலக நாட்டுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டனர்.

தாய், தந்தையை பிரிய மனம் இடம் கொடாத நிலையில் அவர்கள் வற்புறுத்தலால் பயணத்தை மேற்கொண்டு கனடா நகரில் அகதிகளாகத் தஞ்ச மடைந்தனர். தமது அறிவாற்றலால் சிலமாதங் களில் அந்த நாட்டின் குடி யுரிமையும் பெற்றுக் கொண்டனர்.

புலம்பெயர்ந்த நிலையில் அந்நாட்டுக்கு குடியுரிமையோடு வாழ்ந்த சரவணனுக்கு தன் பிறந்த நாட்டு நிலைமைகள் பெரும் வேதனையைக் கொடுத்தது.

போராட்டம் பெரு வளர்ச்சி அடைந்து ஆங்காங்கே சுற்றி வளைப்புக்களும் மோதல்களும் நடைபெற்ற காலகட்டம் அது. பல மேலைத்தேய நாடுகளின் ஆதரவுடன் மோதல் நிறுத்தம் ஏற்பட்டு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

உடையாரின் மூத்தவன் சரவணன் தன் தாய், தந்தையரைப் பார்க்கப் பிறந்த ஊருக்கு வந்தான். உடையார் வீட்டில் குதூகலம். சரசுவின் மகள் அவனது உறவுமுறை மச்சாளுக்கும், சரவணனுக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. சிலநாட்கள் கழிந்து சரவணன் மனைவியுடன் புறப்பட ஆயத்தமானான்.

தம்பி சின்னவனை இஞ்சை வைச்சிருக் கிறது நல்லதாய் தெரியேல்ல.. அவனை யும் கூட்டிக்கொண்டு போ" உடையார் கூறிய வார்த்தைக்குப் பதில் சொல்லாமல் ஊமையாய் நின்றான் சரவணன்" தம்பி யோசிக்காதை நான் முடிவெடுத்திட்டன்" உடையாரின் ஒரே குரல். தான் செய்யும் பெருந்தவறை உணராமல் பேசினார். தன் தம்பி மற்றும் மனைவியுடன் சரவணன் சென்று வருடங்கள் பல கடந்தன.

நாட்டின் நிலைமைகள் மாறின. சமாதானப் பேச்சுக்கள் முறிந்து மீண்டும் போர் துவங்கியது. பாதைகள் அடைக்கப்பட்டன. மக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டது.

"அப்பாவுக்கு ஏதும் பிரச்சினை எண்டால் நாங்கள் வரமுடியாமல் இருக்கும். இரண்டு இலட்சம் மாமியின் பெயருக்கு அனுப்பியிருக்கு... இது சரவணனின் செய்தி" தாய்க்கு வராத பிள்ளைகள் தகப்பனுக்கு வரப் போகினமோ" கூடி இருந்தவர் கதை உடையார் காதிலும்... அருகே இருந்தவர் தேவாரம் பாடுகிறார். அழுகுரல் ஒலிக்கிறது.

(யாவும் கற்பனையே)

கலாபூஷணம்
பொன். தில்லைநாதன்




# அவசர முடிவ கொலையில் முடிந்தது

"பிரதீபிகா வேறொரு வருடன் கள்ளத்தொடர்பினை பேணிவருகிறாள் என்று கிடைத்த தகவலை அடிப்படையாகக் கொண்டே கணவன் தினந்தோறும் பிரதீபிக்காவுடன் சண்டையிட்டு வந்துள்ளார். இதனால் கணவனுடன் வாழப்பிடிக்காத பிரதீபிகா கணவனிடமிருந்து விலகி தனது தாயாரின் வீட்டிற்குச் சென்றாள்."

**பொ**லிஸ் அவசர அழைப்புப் பிரிவான 119 க்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான தொலைபேசி அழைப்புக்கள் வருவதுண்டு. அதனடிப்படையில் பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவு குறித்த பொலிஸ் நிலையத்துக்கு அதுபற்றி உடனடியாக தெரிவிப்பதும் அந்த பொலிஸ் நிலையத்தார் சம்பவம் தொடர்பாக துரிதமாக ஆராய்ந்து விசாரணைகளை ஆரம்பிப்பதும் வழமையே.

"ஐயா மீட்டியாகொட கிரிமெட்டியாவ, பட்ட பொல என்ற இடத்தில் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்" என்ற தகவல் அவசர அழைப்புப் பிரிவான 119க்கு கிடைக்கப்பெற்றது. அதனடிப்படையில் மீட்டியாகொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜித்த ஜயந்த தலைமையிலான குழுவொன்று சம்பவ இடத்துக்கு விரைந்தது.

இவ்வாறு சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாரால், கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்ட பெண்ணொருவரின் சடலத்தை காணமுடிந்தது. எனவே அக்கொலைச் சம்பவத்தின் சூத்திரதாரி யார்?, எதற்காக அப்பெண் கொலை செய்யப்பட்டார் போன்ற தகவல்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பமாகின.

இக்கொலைச் சம்பவத்தினால் நான்கு பிள்ளைகளின் தயாரான 34 வயதுடைய பிரதீபிகா ஜயரத்ன என்ற பெண்மணியே கொலை செய்யப்பட்டிருந்தார். மிகவும் கொடூரமான முறையில் அந்தப் பெண்மணி குத்திக்கொலை செய்யப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகொலை செய்யப்பட்ட பிரதீபிகாவின் சடலம் மரண விசாரணைகளின் பின்னர் பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு சொல்லப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் பிரதீபிகாவின் உடலில் 14 வெட்டுக்காயங்கள் காணப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நான்கு பிள்ளைகளின் தாயான பிரதீபிகா தனது கணவனுடன் சண்டை காரணமாக விலகி பெற்றோரின் வீட்டில் இருந்தபோதே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலை தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸாருக்கு பிரதீபிகாவின் கணவரே அதனைச் செய்ததாக தகவல்கள் கிடைத்துள்ளது. எனவே பொலிஸார் பிரதீபிகாவின் கணவரை தேடிச் சென்றபோது அவர் தலைமறைவாகி யிருந்துள்ளார். எனவே பொலிஸார் பிரதீபிகாவின் குடும்பப் பின்னணி மற்றும் கணவர் பற்றிய தகவல்களையும் தேடத் தொடங்கினர்.

பிரதீபிகா தனது கணவரிடம் வாழ முடியாமல் அவரிடமிருந்து விலகிச் சென்று தாயார் வீட்டில் இருந்தபோதே படுகொலை செய்யப்பட்டுள்ளார். கணவனிடம் நிம்மதியில்லையென்று தனது நான்கு குழந்தைகளுடன் பல்வேறு எதிர்பார்ப்புக்களை மூட்டை கட்டிக்கொண்டு தனது தாயின் வீட்டில் தஞ்சம் புகுந்த பிரதீபிகா தனது கணவனே இயமனாக வருவான் என்று சிறிதேனும் எண்ணிப் பார்த்திருக்கமாட்டாள்.

பிரதீபிகாவின் கணவர் கூலி வேலை செய்துவந்தமையினால் அவரின் வருமானத்தைக்கொண்டு குடும்பம் நடத்தமுடியாத இக்கட்டான நிலைக்கு பிரதீபிகா தள்ளப்பட்டாள். ஆகையால் வெளிநாடு சென்று உழைத்து குடும்பத்தை காப்பாற்றவேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்



அவள். அதேபோன்று மத்திய கிழக்கு நாடொன்றுக்குப் பணிப் பெண்ணாகச் சென்றாள். இது சில வருடங்களுக்கு முன்னர் நடந்தது.

தனது இரண்டு மகன்மார்களையும் கணவனிடமும் மகள்மார்களை தாயிடமும் விட்டுவிட்டு வெளிநாட்டுக்குச் சென்ற பிரதீபிகாவுக்கு நீண்டகாலம் அங்கு தொழில்புரிய முடியவில்லை. எனவே, குறுகிய காலத்துக்குள் அவள் மீண்டும் நாடு திரும்பியுள்ளாள். என்ன காரணத்துக்காக அவ்வாறு குறுகிய காலத்துக்குள் நாடு திரும்ப நேர்ந்தது என்ற காரணம் தெரியவில்லை.

இவ்வாறு நாடு திரும்பிய பிரதீபிகாவுக்கும் கணவருக்கும் இடையில் சிறிது காலம் சென்றதும் சண்டை சச்சரவுகள் ஏற்படத் தொடங்கின. இந்த சச்சரவானது படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. மது அருந்திவிட்டுவரும் கணவர் தினந்தோறும் தீபிகாவை அடிக்கத் தொடங்கினார். இதனால் நிம்மதியிழந்த தீபிகாவுக்கு வாழ்க்கை வெறுத்தது.

பிரதீபிகா வேறொருவருடன் கள்ளத்தொடர்பினை பேணி வருகிறாள் என்று கிடைத்த தகவலை அடிப்படையாகக் கொண்டே கணவன் தினந்தோறும் பிரதீபிகாவுடன் சண்டையிட்டு வந்துள்ளார். இதனால் கணவனுடன் வாழப் பிடிக்காத பிரதீபிகா கணவனிடமிருந்து விலகி தனது தாயாரின் வீட்டிற்குச் சென்றாள்.

பிரதீபிகாவுக்கு வாழ்க்கை வெறுத்துப்போனது. இருந்தும் தனது பிள்ளைகளுக்காக வாழவேண்டும். அவர்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தாள். அதனாலேயே தனது தாயின் வீட்டிலிருந்து பிள்ளைகளை வளர்க்கத் தொடங்கினாள். பிரதீபிகாவின் தாயின் வீட்டிலும் அவளை நிம்மதியாக வாழவிடவில்லை அவளின் கணவன். அங்குசென்றும் அடிக்கடி சண்டையிட்டான்.

பிரதீபிகா பற்றி பல்வேறு கதைகள் கிராமம் முழுவதும் சிறகு முளைத்து பறக்கத் தொடங்கியது. இதனால் மிகுந்த வேதனைக்கும் கோபத்துக்கும் உள்ளான பிரதீபிகாவின் கணவர் அதற்கு எப்படியாவது முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று எண்ணியுள்ளார். அதன் பின்னரே மனைவியை தீர்த்துக்கட்ட அவர் முடிவெடுத்துள்ளார்.

இவ்வாறு முடிவெடுத்த அந்த நபர் கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி பிரதீபிகாவின் தாயார் வீட்டுக்கு கத்தியுடன் சென்றுள்ளார். வழமைபோல சண்டையிட்ட அவர் மனைவியை சரமாரியாகக் கத்தியால் குத்தியுள்ளார். கத்திக்குத்துக்குள்ளான மனைவி துடிதுடித்து இறந்து போனதும் அங்கிருந்து தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ளார் அந்த நபர்.

பிரதீபிகாவை கொலை செய்துவிட்டுத் தப்பிச்சென்று தலைமறைவாகியிருந்த அந்த நபர் சம்பவம் இடம்பெற்று சில தினங்களின் பின்னர் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டார். சந்தேக நபரின் கைதினைத் தொடர்ந்து மற்றுமொரு தகவலும் தெரியவந்துள்ளது. அதாவது குறித்த சந்தேக நபர் இதற்கு முன்னர் படுகொலை சம்பவமொன்றுக்காக சுமார் எட்டு வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையானவர் என்பதே அந்த தகவல்.

சந்தேச நபரைச் கைது செய்தபோது அவருக்கு வயது 42. இவர் இதற்குமுன்னர் தனது தந்தையை படுகொலை செய்த குற்றத்துக்காக சிறைத்தண்டனை அனுபவித்ததாகச் சொல்லப் பட்டிருக்கின்றது.

எது எப்படியோ இன்று சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பிரதீபிகா வழி தவறி செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டுக்களும் இறுதிவரை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படாமலே இருக்கின்றது. ஆக, பெற்றோரின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டிருப்பது, எந்தப் பாவமும் அறியாத அவர்களின் பிள்ளைகள்தான். அவர்கள் இன்று எந்த பாவமும் அறியாத அவர்களின் பிள்ளைகள் தாயின் அரவணைப்பையும் இழந்து, தந்தையின் ஆறுதலுமின்றி தவிக்கவிடப்பட்டுள்ளனர். இந்த சமூகத்தில் வாழ்கின்ற எல்லோருக்கும் எச்சரிக்கையாக அமையவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். ✸

## வடக்கு - கிழக்கு வீரர்களும் கிரிக்கெட்டில்

# பிரகாசிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை!

**உலகப் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர், தற்போதைய இலங்கை தெரிவுக் குழுத் தலைவர் ஆகிய நீங்கள் வட மாகாணத்தில் கிரிக்கெட்டை மேம்படுத்த பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கிறீர்கள் என்பதை அறிய முடிகின்றது. தற்போதைய உங்களின் விஜயம் பற்றிக் கூறமுடியுமா?**

**பதில்:** ஆம். யுத்த சூழலினால் வடக்கு, கிழக்குப் பிரதேங்களில் கிரிக்கெட் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. எனினும், இப்பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கிரிக்கெட் மீது காட்டுகின்ற ஆர்வம், அவர்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்ற வளப் பற்றாக்குறை என்பன பற்றி நான் நீண்ட காலமாகவே கவனம் செலுத்திவருகின்றேன். படிப்படியாக தேவைகளைப் பூர்த்திசெய்து சர்வதேச தரம் வாய்ந்த வீரர்களை உருவாக்குவதற்கு திட்டமிட்ட முறையில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அந்தவகையில் பல முயற்சிகள், பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போதைய விஜயம் 23 வயதிற்குட்பட்ட வடக்கு-கிழக்கு அணி ஒன்றை தெரிவுசெய்வதுடன் அதி திறமையை வெளிப்படுத்துகின்ற குறைந்தது ஐந்து வீரர்களையாவது தெரிவுசெய்து இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி இதன்மூலம் வடக்கு, கிழக்கு இளைஞர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு வந்துள்ளேன்.




**கேள்வி : வடக்கு - கிழக்கு வீரர்களுக்கு பெரும் புற்றரை ஆடுகளங்கள் இல்லாமல் இருக்கின்றதே!**

**பதில்:** நிச்சயமாக. அது குறைபாடு தான். சர்வதேச தரத்திற்கு வளர்த்துக் கொள்வதற்கு இங்கு பயன் படுத்தப்படுகின்ற 'மற்றீங் ஆடுகளங்கள்' உதவமாட்டாது. இதனையும் கருத்தில் கொண்டு முதற்கட்டமாக யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் ஒவ்வொரு தலா ஒவ்வொரு புற்றரை ஆடுகளங்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு மாதங்களில் வடக்கு - கிழக்கு கிரிக்கெட் வீரர்கள் அந்த வாய்ப்பைப் பெற்றுவிடுவார்கள்.

**கேள்வி : அண்மையில் நடைபெற்ற சம்பியன் லீக் முன்னோடிப் போட்டிகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட வடக்கு-கிழக்கு வீரர்களுக்கு 11 பேர் அணியில் வாய்ப்பு அளிக்கப்படவில்லையே என்று சிலரால் குறை கூறப்படுகின்றதே!.**

**பதில்:** (சிரிக்கிறார்) நாம் எதற்கும் பொறுமையாக இருக்கவேண்டும். நான்கூட ஐந்து வருடங்கள் மேலதிக வீரராகத்தான் இருந்தேன். இவை மக்களைத் தவறாக வழிநடத்தும் விமர்சனங்களே. வடக்கு - கிழக்கு வீரர்களைப் பொறுத்தவரையில் சர்வதேச கிரிக்கெட் தரத்திற்கு தம்மை இசைவாக்கம் செய்துகொள்ள வேண்டும். நீங்கள் குறிப்பிட்ட வீரர்கள்கூட 11 பேர் அணியில் இடம்பெறாதபோதும் சிறந்த அனுபவங்களைப் பெற்று தம்மை மேம்படுத்திக் கொண்டுள்ளனர். அவர்கள் பொறுமையாக இருந்து தமது ஆட்ட நுணுக்கங்களை மெருகேற்றிக்கொள்ளும் பட்சத்தில் நிச்சயம் அவர்களால் உச்ச இடத்தை அடையமுடியும். மாத்தறையைச் சேர்ந்த என்னால் இலங்கை அணியில் ஆட முடியும் என்றால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் நிச்சயம் சாதிக்கமுடியும். அதற்கான சூழலை உருவாக்குவதற்காகவே நாம் இங்குவந்துள்ளோம். அடுத்த வருடம் அளவில் எஸ்.எல்.பி.எல். போட்டிகள் சிலதை இங்கு நடத்த முயற்சிக்கின்றேன்.

**கேள்வி : எஸ்.எல்.பி.எல். தொடரில் வட மாகாண, கிழக்கு மாகாண அணிகள் இருக்கின்றபோதும், குறித்த பிரதேச வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை என்ற பெரும் குறை இருக்கின்றதே...**

**பதில்:** ஆம். அந்தக் குறை என்னிடமும் இருக்கின்றது. எதிர்காலத்தில் எஸ்.எல்.பி.எல். அணிகளில் அந்தந்தப் பிரதேச வீரர்கள் குறைந்த பட்சம் ஒருவர் இருவரேனும் இடம் பெறுவதை உறுதிப்படுத்தும்படி அணி உரிமையாளரிடம் கேட்டுக்கொள்ள உள்ளேன்.

**கேள்வி: வடக்கு - கிழக்கு மக்களுக்கும், கிரிக்கெட் ரசிகர்களுக்கும் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

**பதில்:** முதலில் கிரிக்கெட் வீரர்கள் தாழ்வு மனப்பான்மையை அறவே கைவிடவேண்டும். இலங்கை அணியில் தமக்கு இடம் வழங்கப்படமாட்டாது. கிரிக்கெட் மூலம் முன்னேற முடியாது என்ற அவநம்பிக்கைகளை களைய வேண்டும். அதேபோன்று பெற்றோர்களுக்கும் ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். உங்களது பிள்ளைகளுக்கு கல்வி முக்கியம். அதை நான் மறுக்க வில்லை. உங்கள் பிள்ளைகள் கிரிக் கெட் திறமையுள்ளவர்களாகவும், ஆர்வமுள்ளவர்களாகவும் இருப்பார்களாயின் அவர்களை அதில் ஊக்குவித்து அவர்களுக்குப் பின்பலமாக இருங்கள். விடாமுயற்சியால் அவர்கள் தங்கள் உச்சநிலையை அடைவார்களாயின் அவர்களுடைய எதிர்காலம் கற்பனைசெய்து பார்க்க முடியாதளவிற்கு பிரகாசமானதாக இருக்கும். அதற்கான பாதை விசாலமாகத் திறந்தே இருக்கின்றது. அதனை மேலும் செப்பனிடுவதற்கான செயற்பாடுகளையே நாம் இப்போது மேற்கொண்டுவருகின்றோம். அது தொடரும். எனவே, நம்பிக்கையோடு காத்திருங்கள், வடக்கு, கிழக்கிலும் வீரர்களும் கிரிக்கெட் உலகில் பிரகாசிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.



# பாசம் நியாயம்

**பிரீத்தி ஜிந்தா** கிங்ஸ் லெவன் பஞ்சாப், ஐ.பி.எல் அணியின் இணை உரிமையாளர்களில் ஒருவர். அதோடு பொலிவூட் நட்சத்திரம். ஊழல் நிறைந்து போய்விட்ட ஐ.பி.எல் போட்டிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று எல்லோரும் கூக்குரல் இடுகையில் இவர் அதற்கு எதிராகக் குரல் கொடுக்கிறார். லஞ்சம், ஊழல் என்பன எம்மிடம் ஊறிவிட்டதொன்று. உண்மையில் அரசியலில் நிறைந்து காணப்படும் ஊழல்களின் கனதியைக் கருத்தில் எடுத்தால் அரசியலையே இந்தியாவில் தடை செய்யவேண்டுமோ என்று மறைமுகமாகக் கிண்டலடிக்கிறார் ஜிந்தா.

இந்தியாவில் ஏன் இத்தனை ஊழல்கள், இதற்காக அரசியலைத் தடைசெய்யவேண்டுமா? ஒன்றின்பின் ஒன்றாக அரசியல் ஊழல்கள் வெளிவருகின்றனவே. ஒருவகையில் ஊழல்களை நாம் விரும்புகிறோம் என்றுதானே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்கிறார் அவர்.

இவருடைய கேள்விகளில் நியாயம் உண்டு என்று கொண்டாலும் இவர் கூறியுள்ள கருத்துக்கள் ஐ.பி.எல் ஊழலுக்குத் தான் சம்மதம் தெரிவிப்பதல்ல என்று கூறுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். இவருடைய ஆத்திரம் எல்லாம் தான் நேசிக்கும் ஐ.பி.எல் போட்டி அமைப்பை மட்டும் குறிவைத்துத் தாக்க முற்படுகின்றனரே என்ற ஆதங்கமாகவும் இருக்கலாம்.

இதேவேளை பொலிவூட் நடிகர் வின்டூ தாராவின்மீது பொலிசார் கண் வைத்துள்ளமை, பொலிவூட் எனும் பிரமாண்டமான இந்திய சினிமாத் துறையைக் ஊடுருவும் முதல் நடவடிக்கையாக இருக்குமோ என்று இன்னொரு தரப்பார் சந்தேகப்படுகிறார்கள். இப்பொழுது ஐ.பி.எல். கிரிக்கெட்டும், மும்பாய் சினிமாத்துறையும் இணைக்கப்பட முயற்சிகள் நடைபெறும்வேளையில் வேறெந்த பிரமாண்டமான துறைகள் கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ என்று தெரியவில்லை.

இது ஒருபுறம் இருக்க, மத்திய அமைச்சரவையின் சிலருக்கும் இதில் தொடர்பு இருக்கும் என்று சுப்ரமணிய சுவாமி ஒரு குண்டைத்தூக்கிப் போட்டிருக்கிறார். இவரும் தன்பங்கிற்கு ஏதாவது சொன்னதாக இருக்கவேண்டாமா? அவர் சொல்லிவிட்டார். ஊடகங்களும் பிரசுரித்துவிட்டன. அதோடு இந்த விடயம் முடிந்தது என்று கொள்ளலாம்.

எது எவ்வாறாயினும் ஐ.பி.எல் சர்ச்சை மிகப் பெரிய அதிர்ச்சியை எல்லோருக்கும் ஏற்படுத்திவிட்டது. புதிய புதிய விடயங்களைப் போகப்போக அறியலாம். 2009 இல் மட்டும் ஐ.பி.எல் சூதாட்டத்தில் புழங்கிய பணம் 247 மில்லியன் அமெரிக்க டொலர்கள். (ஏறத்தாழ 2470 கோடி ரூபாய்கள்) என்று ஊகிக்கப்படுகிறது.



ஜோசெப் கிருஷ்ணா

# விளையாட்டு

**ஆட்ட நிர்ணயச்** சதியில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சிறிசாந் பற்றிய புதுப்புது தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

குறிப்பிட்ட ஓவர் ஒன்றில் அதிகளவு ஓட்டங்களை விட்டுக்கொடுக்க இவர் பணம் மட்டும் பெறவில்லை,

## இனி என்ன மிச்சம்?



விலையுயர்ந்த கார், விலையுயர்ந்த கைக்கடிகாரங்கள், மற்றும் விருந்துகளின்போது பெண்கள் என்று எல்லாவற்றையும் தான் பெற்றுக் கொண்டிருக்கிறார்.

இவற்றை சிறிசாந்தே ஒப்புக்கொண்டுள்ளதாக பொலிஸார் கூறுகிறார்கள். அதற்கும் மேலாக, இவரைக் கைது செய்ய முயன்ற வேளை மஹாராஷ்டிரா, மற்றும் கேரள முதலமைச்சர்களைத் தனக்குத் தெரியும் என்றும் தன் பின்புலப் பலத்தை நிரூபிக்க முயன்றிருக்கிறார். இவரது இலத்திரனியல் கருவிகள் மற்றும் நாட்குறிப்பேடு போன்றவற்றை ஆராய்ந்த அதிகாரிகள், இவர் உட்பட மூவரும் அறுபது இலட்சம் ரூபாய்களுக்கு மேல் பந்தயப் பணம் பெற்றுக்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளதாகக் கூறியிருக்கிறார்கள்.

தனது நாட்குறிப்பேட்டில் இரண்டு இடங்களில் சிறிசாந் "இறைவா என்னைக் காப்பாற்று" என்று எழுதியிருக்கிறார் என்றும் குறிப்பிடுகிறார்கள். இந்தத் தப்பைச் செய்வதால் ஏற்படும் பாதிப்பில் இருந்து என்னைக் காப்பாற்று என்ற பொருள்பட இதனை எழுதினாரா என்று ஆராய்ந்து வருகிறோம் என்கிறார்கள் பொலிஸார்.

மேலும் இவர் அறையில் இருந்து கைப்பற்றப்பட்ட செல் போன்ற பொருட்களுடன் எழுபத்தியிரண்டாயிரம் இந்திய ரூபாய்கள் இருந்ததாகவும், ஐ.போனில் ஆயிரத்து ஐந்நூறு இலக்கங்கள் இருந்ததாகவும் அதில் இருபத்தைந்து வீதம் விமானப் பணிப்பெண்களுடையதாக இருந்ததாகவும் குறிப்பிடுகிறார்கள்.

ஆனால் இவரோ தான் ஒரு அப்பாவி என்று கூறிக் கண்ணீர் வடிக்கிறார். பொலிஸார் இவர் பற்றிய தரவுகளையெல்லாம் ஆதாரங்கள் இன்றி வெளியிடமாட்டார்கள் என்பதை ஏனோ இவர் மறந்துவிட்டார். தனக்கு நீதிமன்றில் நம்பிக்கை உண்டென்றும் தனக்கு நீதி கிடைக்குமென்றும் வேறு கூறியுள்ளார். ஆம். உண்மையில் கிரிக்கெட்டுக்கும், மணிக்கணக்காக கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்க்கும் கிரிக்கெட் ரசிகர்களுக்கும் நீதி கிடைக்கும், கடவுள் சிறிசாந்தைக் காப்பாற்றுவாரா? தெரியவில்லை.

# சாதனை முறியும்



**இங்கிலாந்து** டெஸ்ட் வரலாற்றில் இதுவரை அதிக விக்கெட்டுக்களை 383 விக்கெட்டுக்கள் பெற்று இன்றுவரை முதலிடத்தில் இருப்பவர் சகலதுறை ஆட்டக்காரரும், பெருமைக்குரிய கிரிக்கெட் வீரருமாகக் கருதப்படும் இயன்பொத்தம். நியூசிலாந்து அணிக்கெதிராக நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் தனது 300ஆவது விக்கெட்டை வீழ்த்திய ஜேம்ஸ் அன்டர்சன் பற்றிப் பேசும் பொத்தம், எனது சாதனையையும் முறியடித்து அதற்கப்பாலும் செல்லும் ஆற்றல் உள்ளவர் ஜேம்ஸ் அன்டர்சன் என்று புகழ்ந்துள்ளார்.

இங்கிலாந்து வேகப் பந்துவீச்சாளர்களிலேயே இப்போது முதலிடத்தில் அன்டர்சன்தான் இருக்கிறார். இவரை நான் நீண்ட காலம் அவதானித்துவருகின்றேன். இவர் எனது சாதனையை முறியடிக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன். அன்றைய தினம் இருவரும் இணைந்து கொண்டாட வேண்டும் என்று ஆசைப்படுகிறார் பொத்தம். இன்னொரு கருத்தையும் பொத்தம் கூறுகிறார்.

இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸருவட் புரோட் உயரமானவர். அன்டர்சன் சராசரி உயரம் உடையவர். இப்படி அமைவது வேகப் பந்துவீச்சாளர்கள் விக்கெட் எடுப்பதைச் சாதகமாக்கும் என்பவர் சில உதாரணங்களையும் தருகிறார்.

அவுஸ்திரேலிய வேகங்கள் டெனிஸ்லிலி - ஜெப் தொம்ப்ஸன், இங்கிலாந்தின் பொப்விலியஸ் - நான் இப்பொழுதும் இங்கிலாந்தின் புரோட் - அன்டர்சன், முதல் இரண்டு ஜோடிகளும் இன்றும் புகழ்ந்து பேசப்படுவது போல், புரோட், அன்டர்சன் ஜோடியும் பெரிதாகப் பேசப்படுவார்கள் என்று முடிக்கிறார் பொத்தம்.



# பணமும் பாய்ச்சலும்



**ஸ்பானிய** கிங்ஸ் கப் போட்டியொன்றில் முறை தவறி நடந்துகொண்டமைக்காக றியல் மெட்றிட் அணி வீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோ இரண்டு ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக ஒரு தவறுக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்ட இவர் பின்னர் அட்லெடிகோ மட்றிட் அணியின் தலைவரை உதைத்ததால் உடனடியாகவே சிறப்பு அட்டை காண்பிக்கப் பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால்தான் இரட்டைத் தடை. மேலும் இந்த ஆட்டத்தில் றியல் மெட்றிட் அணியை 2-1 என்று அட்லெடிகோ மெட்றிட் கவிழ்த்தும் கிறிஸ்ரியானோ றொனால்டோவின் கோபத்துக்குக் காரணமாக இருக்கலாம்.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், இவர் இந்தத் தண்டனையை அனுபவிப்பதற்கு றியல் மெட்றிட் அணியில் இருக்கப்போவதில்லை என்பதுதான்.

ஏனெனில் அடுத்த பருவ காலத்தில் இங்கிலாந்தின் செல்சீ அணியில் விளையாடுவது அநேகமாக உறுதியாகிவிட்டது என்று கூறுகின்றார்.

இங்கிலாந்தின் மென்செஸ்ரர் யுனெட்டட் பின்னர் ஸ்பானியாவின் றியல் மெட்றிட், அடுத்து இங்கிலாந்தின் செல்சீ என்று விரிந்து பரந்து செல்கிறது கிறிஸ்ரியானோ றொனால்டோவின் பணவேட்டை. என்றாலும், அவரின் திறமையை எப்படியும் மறக்கவோ, மறைக்கவோ முடியாது.

# காதிலை பூ

கந்தசாமி




**வணக்கமுங்கோ. நாம தொடர்ந்து தேசிய முசுபாத்திகளைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கும்போது நம்முடைய உள்ளூராட்சிப் பிரதிநிதிகளும் சைக்கிள் கெப்பில தங்கட லொறியை ஓட்டிக் கொண்டிருக்கினமுங்கோ.**

வவுனியா உள்ளூராட்சி சபையில அடிக்கடி பிரச்சனைகள் வந்து கொண்டே இருக்குதுங்கோ. தமிழ் கூட்டமைப்பின்ர ஆட்சிதான் எண்டாலும் தலைவருக்கு எதிராக உறுப்பினர்கள் அடிக்கடி குற்றச்சாட்டுக்களை முன் வைக்கினமுங்கோ.

போனவாரமும் கணக்கு வழக்குகளில் ஒழுங்கில்லை எண்டும், களஞ்சிய சாலையின்ர விபரங்கள் தொடர்பாக சரியான தகவல்கள் எங்கும் இல்லை எண்டும், அதில ஏதோ மோசடிகள் இடம்பெற்றுள்ளது எண்டும் தொழிலாளிகள் சொல்லியிருக்கினமுங்கோ.

உள்ளூராட்சி சபைகளில நடப்பதாக கூறப்படும் இது மாதிரியான முறை கேடுகளையும், துஷ்பிரயோகங்களையும் உடனடியாக விசாரிக்கவும், சம்மந்தப் பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் சரியான பொறிமுறை இல்லையோ எண்டும் யோசிக்கத் தோணுதுங்கோ.

வவுனியா சமாச்சாரங்கள் ஒரு பக்கமென்றால் கல்முனையிலையும் போனவாரம் நடைபெற்ற நிகழ்ச்சி பெரும் நகைச்சுவையாக இருந்திச்சுதுங்கோ. மாநகர சபையின்ர பணத்தில கட்டப்பட்ட வாசிக சாலைக்கு தலைவர் தன்ர தகப்பனின்ர பெயரைச் சூட்டி திறப்பு விழாவுக்கு நீதித்துறை அமைச்சரையே அழைச்சும் இருந்தாருங்கோ.

அந்தச் செய்தியை முதலில வாசிக்கேக்க நான்கூட, மேயர்தான் கொள்ளுப் பிட்டியில நடத்தின கல்விக்கூடத்தில பெடியலை வெளிநாட்டுக்கு அனுப்பின பணத்திலதான் அதாவது தன்னுடைய சொந்தப்பணத்திலதான் வாசிகசாலை கட்டி அதுக்கு தன்ர தகப்பனின்ர பெயரை சூட்டி திறக்கப்போறாராக்கும் எண்டுதானுங்கோ நினைச்சனான். பின்னர்தானுங்கோ கிழக்கு மாகாண முதலமைச்சர் வெளியிட்ட செய்தியை பார்த்ததும் வடிவேல் பாணியில அப்பிடியே சொக்காகிட்டேனுங்கோ. அந்தச் செய்தியில முதலமைச்சர் என்ன சொல்லியிருந்தார் தெரியுமோ, கல்முனையில மாநகர சபையின்ர பணத்தில கட்டப்பட்டிருக்கும் வாசிக சலைக்கு மேயர் தன்னுடைய தகப்பனின் பெயரை சூட்டித்திறக்க முற்படுவது தவறானது என்றும் அது தொடர்பில் மாகாண சபை மற்றும் மாநகர சபையைச் சார்ந்த பல உறுப்பினர்கள் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளதாகவும் அது தொடர்பில் சரியான நடைமுறையை பின்பற்றுமாறும் குறிப்பிட்டிருந்தாருங்கோ.

பாத்தியளோ மக்களின்ர பணத்தில பதவிகளில இருக்கின்றவர்கள் எப்பிடி தங்களுடைய படத்தை ஓட்டினமெண்டு.

இப்பிடித்தானுங்கோ பல பெரிய பதவிகளிலை இருக்கிறவர்கள். ஊர்ப்பணத்தை எடுத்து தங்களுடைய உலையில போட்டுக் கொண்டு இருக்கினமுங்கோ. சில விசயங்கள் இப்படி வெளியில வருகுதுங்கோ. பல விசயங்கள் வெளியால வருகுதில்லையுங்கோ.

அரசியலுக்கு வாறதே பணம் சம்பாதிக்கத்தான் எண்டு பலபேர் பலபேரின்ர காலைப்புடிச்சு, கையைப்பிடிச்சு உள்ளே நுழையினமுங்கோ. கிழக்கில பல முகங்கள் அப்படித்தானுங்கோ.

அரசியல் அதிகாரங்களாலை மக்களுக்கு நன்மை இருக்குதோ தெரியாதுங்கோ. ஆனால் அரசியலில பதவிக்கு வந்திருக்கிற சாதா முதலாளிகளெல்லாம் இப்போ பெரும் பிஸினஸ் மெக்னேட்டுக்களாக மாறிட்டினமுங்கோ.

அரசியலின்ர மெஜிக் அதுதானுங்கோ. இது மாதிரியான துஷ்பிரயோகங்கள் தொடர்பாகவும், மோசடிகள் தொடர்பாகவும் சட்டம் தன்வேலையை கொஞ்சம் விரைவாக செய்யவேணுமுங்கோ. ஏன் உதைச் சொல்லுறேன் எண்டால் பாருங்கோ சட்டம் தங்களைத் தண்டிக்கும் எண்ட பயமே அரசியலில இருக்கிறவைக்கு இல்லைபோல் தெரிகிறதுங்கோ.

இதைச் சொல்லும்போது இன்னொன்றையும் சொல்லவேணுமுங்கோ. தங்களுக்கு வாக்கு விழாத பகுதி மக்களும், வேறு மாவட்ட மக்களும் உதவிகேட்டு அரசியல்வாதிகளிடம் போகும்போது நீ அந்த மாவட்டம் எண்டும், உங்கள் பகுதிகளிலிருந்து வாக்கு போடப்படவில்லை எண்டும், நான் அங்கு செய்யமுடியாது எண்டும் கூறி மக்களை அவமானப்படுத்தி கோரிக்கையை நிராகரிக்கிற அரசியல் கலாசாரமும் வளர்ந்து நிக்குதுங்கோ.

இது மாதிரியான அரசியல் கொள்ளையர்களையும் தண்டிக்க ஒரு சட்டம் வேணுமுங்கோ. இந்த விளையாட்டை அநேகமாக அமைச்சர் பெருமக்கள் தானுங்கோ ரொம்ப இலாவகமாக விளையாடினமாமுங்கோவ். இவர்களைப் பற்றி ஜனாதிபதியிடம் முறையிடலாம் எண்டு வாத்தி சொல்லுறாருங்கோ. வாத்தி சொல்லுறது சரிதானோ எண்டு ஒருக்கால் செக் பண்ணுங்கோ.

யாவும் கலப்படமற்ற பொய்

1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000 1000

# உலகை வியக்க வைத்தவர்கள்

## சூரிய ஒளியில் ஒரு ரகசிய ஆயுதம்



### அவர் கண்டுபிடித்தது என்ன?

ஆரம்ப உற்சாகம் தணிந்ததும் ஆர்கிமிடீஸ் வீட்டுக்குப் போனார். அரசரிடமிருந்து அந்தக் கிரீடத்தை வரவழைத்தார். அதை நிறுத்தார். அதே நிறைக்கு. சுத்தமான தங்கத்தையும் வெள்ளியையும் வரவழைத்தார். பிறகு ஒரு பாத்திரத்தில் நீரை நிரப்பி அதை ஒரு தட்டில் வைத்து. கிரீடத்தின் நிறையுள்ள சுத்தத் தங்கத்தை அதில் போட்டு அது வெளியேற்றும் நீரை அளந்துகொண்டார். பிறகு அதே போல் சுத்தமான வெள்ளி வெளியேற்றும் நீரையும் அளந்துகொண்டார். கடைசியாக கிரீடத்தை நீர் நிறைந்த பாத்திரத்தில் போட்டார். அது சுத்தத்தங்கத்தினால் செய்யப்பட்டிருக்குமானால், சுத்தத் தங்கக் கட்டி வெளியேற்றிய அதேயளவு நீரைத்தானே அதுவும் வெளியேற்ற வேண்டும்?

ஆனால் கிரீடம் வெளியேற்றிய நீரோ அதிகமாக இருந்தது! அதாவது சுத்தத் தங்கமும் சுத்த வெள்ளியும் வெளியேற்றிய நீரின் அளவுக்கு இடைப்பட்டதாக இருந்தது. ஆகவே கிரீடத்தில் பொற்கொல்லர் கலப்படம் செய்திருக்கிறார் என்பதை நிரூபித்தார். மிதக்கும் பொருள்களைப் பற்றி (On Floating Bodies) என்ற புதிய புத்தகத்தை எழுதினார். இந்தப் புதிய சித்தாந்தம் இன்றைய நவீன பௌதிகத்திலும் செயற்படுகிறது. பல முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு. ஸைரகியூஸின் மன்னர் தம் அவையை ஆர்கிமிடீஸ் அலங்கரிப்பதைப் பெருமையாகக் கருதினார்.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(30.05.2013 தொடக்கம் 05.06.2013 வரை)

### மேடம்

உடம்பில் எலும்பு நரம்பு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். இது நாள் வரையில் இருந்துவந்துள்ள பண நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றம் காண்பதன்மூலம் மனநிம்மதியை அடைவீர்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களிடம் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லதாகும். கணவன் – மனைவிக்கிடையில் ஒற்றுமை மேலோங்கும். வீடு வாகனங்களை வாங்குவதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வருவீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். பொதுவாக இது ஒரு ஆறுதல் தரும் வாரமாகும். உடம்பில் சளி மற்றும் காய்ச்சல் சம்பந்தமான உபாதைகள் வந்துபோகலாம்.

### இடபம்

மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். உடம்பில் வாயு வாத சம்பந்தமான தொல்லைகள் வந்து போகலாம். உடல்நிலையில் இதுநாள்வரை இருந்துவந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்றுக் குறையும். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார் உறவினர்களின் திடீர் வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் எச்சரிக்கையுடன் இருக்கவும். தேவையற்ற புதிய நட்புக்களால் மனநிம்மதி இழக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்த கவனமுடன் இருக்கவும்.

### மிதுனம்

நண்பர்களின் சுபகாரிய விசயங்களுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து ஒற்றுமையுடன் இருப்பார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத ஆதாயங்கள் உண்டாகும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் சற்றுக் குறையும். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும். வெகு நாட்களாகத் தடைப்பட்டுவந்த திருமண காரியங்கள் நிறைவேற வாய்ப்பு உள்ள காலமாகும். நாட்பட்ட வராத கடன் கொடுத்து இருந்த பணம் திரும்ப கைக்கு வந்துசேரும்.

### கடகம்

அண்டை அயலார்களுடன் காரண மற்ற சிறிய விசயங்களுக்காக வீண் பிரச்சினைகள் உருவாக இருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லது. தென்திசையில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெற வாய்ப்பு உள்ள காலமாகும். நீண்ட காலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். மீன் முட்டை மாமிசம் எண்ணெய், அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### சிங்கம்

புதிய நண்பர்களின் சேர்க்கையால் பொருட்செலவுகளும், மனநிம்மதி இன்மையும் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கவனம் தேவை. புதிய கடன் வாங்கிப் பழைய கடனை அடைக்க முயற்சிப்பீர்கள். பிரிந்துபோன உறவுகளுடன் மீண்டும் சேர்ந்து வாழ வாய்ப்பு உள்ள காலமாகும். வரவேண்டிய பூர்வீகச் சொத்துக்களில் இதுநாள் வரையில் இருந்துவந்துள்ள பிரச்சினைகளில் பெரிய மனிதர்களின் தலையீட்டால் நல்ல முடிவுகள் கிடைக்கும். விசா போன்ற வழக்கு விசயங்களில் சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு எச்சரிக்கை நிறைந்த வாரமாகும்.

### கன்னி

வெளிநாட்டில் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய கடன்கள் வாங்குவதைத் தவிர்த்தல் நல்லது. சகோதர சகோதரிகளின் தடைப்பட்டுவந்த திருமண காரியங்கள் சம்பந்தமாகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். வடக்குத் திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத ஆதாயம் உண்டாகும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாதீர்கள். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காக வேறு மருத்துவர்களின் உதவிகளை நாடுவீர்கள். பொதுவாக இது ஒரு எச்சரிக்கை நிறைந்த வாரமாகும்.

### துலாம்

வெகுகாலமாக வழிபடாமல் விட்டுப் போன குலதெய்வ ஆலயங்களைத் தரிசனம் செய்வதற்கான காலமாகும். குடும்பத்தில் தேவையற்ற மனக்குழப்பங்கள் வரஇருப்பதால் மிகுந்த கவனமுடன் இருத்தல் உகந்ததாகும். குல தெய்வ ஆலய வழிபாடு செய்து வர முயற்சிப்பீர்கள். காதல் விசயங்களில் மற்றவர்களின் ஆதரவுகள் கிடைக்கும். உத்தியோகத்துறையினருக்குப் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றமும் மேலதிகாரிகளின் ஆதரவும் உண்டாகும். பொதுச்சேவைகளான ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு நற்பெயர் எடுப்பீர்கள். தொலைதூரப் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் எதிர்பார்த்த காரியங்களில் மனநிறைவடைவீர்கள்.

### விருச்சிகம்

உத்தியோகம் பாரப்பவர்களுக்கு எதிர்பார்த்த இடங்களுக்கு இடமாற்றம் ஏற்படலாம். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். உடல்நிலையில் இதுநாள்வரை இருந்துவந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்றுக்குறையும். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார் உறவினர்களின் திடீர் வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். தேவையற்ற புதிய நட்புக்களால் மனநிம்மதி இழக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்த கவனமுடன் இருக்கவும். காதல் விசயங்களில் பெண்களிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது.

### தனுசு

வெளிநாட்டில் இருந்து செய்திகள் கிடைப்பதற்கு இன்னும் சற்றுக்கால தாமதம் ஆகலாம். நீண்டகாலமாக வரவேண்டிய பணம் மற்றும் பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி மனநிம்மதி அடைவீர்கள். உறவினர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகலாம். மஹான்களின் எதிர்பாராத ஆசிகளால் மனநிம்மதி அடைவீர்கள். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் மனக்குழப்பங்கள் உண்டாகலாம். சொத்து விசயமாகக் கோர்ட் வழக்கு போன்றவற்றில் நல்ல சாதகமான முடிவுகளை எதிர்பார்க்க காலதாமதம் ஆகலாம்.

### மகரம்

குடும்பத்தில் தந்தையின் மருத்துவச் செலவுகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவா எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். நீண்டகாலமாக இருந்துவந்துள்ள காதல் விசயங்களில் நல்ல முடிவுகள் கிடைக்கும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ளது. கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். அரசியல்வாதிகளால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைப்பதற்கு இன்னும் சற்றுப் பெருமையுடன் இருத்தல் நல்லது. ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகளைப் பழுது பார்ப்பதன்மூலம் பொருட்செலவுகள் ஏற்படலாம். பாருப்புக்களும் உண்டாகலாம்.

### கும்பம்

உடல்நிலையில் கண், காது போன்ற இடங்களில் கவனம் தேவை. குடும்பச் சொத்து சம்பந்தமாகிய விசயங்களில் பெரிய மனிதர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளில் பணம் ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய வீடு வாகனங்களை வாங்குவதற்காக வங்கிகள்மூலம் எதிர்பார்த்து இருந்த கடன் தொகைகள் கைவந்து சேரும். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள் வர இருப்பதால் எதிலும் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. குழந்தைகளின் மன மகிழ்ச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்கள் சென்று வருவதன்மூலம் மன மகிழ்ச்சியை அடைவீர்கள். காதல் விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும்.

### மீனம்

நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுவதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளில் நண்பர்களின் ஆதரவுகள் கிடைக்கும். அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பாராட்டுகளும் பொருள்வரவும் உண்டாகும். வேலையில்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும். தந்தையின் உடல்நிலை பாதிப்பால் குடும்பத்தில் மருத்துவச்செலவுகள் ஏற்படும். தாயின் உடல்நிலையில் ஏற்பட்டு இருந்த பாதிப்புகள் நீங்கி மருத்துவச் செலவுகள் குறையும்.



மரவேலைப்பாடுகளில் மன்னராக விளங்கும் உக்ரைனைச் சேர்ந்த Valerii Danevych எனும் நபர் மரத்தினால் தொழிற்படக்கூடிய கைக்கடிகாரம் ஒன்றினை உருவாக்கி அசத்தியுள்ளார்.

எனினும் இக்கடிகாரமானது நாள் ஒன்றிற்கு ஏனைய கடிகாரங்களுடன் ஒப்பிடுகையில் 5 நிமிட நேர வித்தியாசத்தை கொண்டிருப்பதுடன், 20 மணித்தியாலங்கள் வரை வலுவை சேமிக்கக்கூடிய மரத்தினாலான சில்லுகளையும் உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அசத்தலான உருவாக்கம்



## முயற்சியின் பலன்...



தனது உடலிலுள்ள கொழுப்பை பயன்படுத்தி சவர்க்காரம் உற்பத்தி செய்த கலைஞன் மியாமியை சேர்ந்த Orestes de la Paz எனும் கலைஞர் ஒருவர் தனது உடலிலிருந்து பெறப்பட்ட கொழுப்பினைப் பயன்படுத்தி 20 சவர்க்காரக் கட்டிகளை உற்பத்தி செய்துள்ளார். இதில் மேலும் வியப்பினை ஏற்படுத்தும் விடயம் என்னவென்றால் ஒரு சவர்க்காரத்தின் விலையானது 1000 டொலர்கள் என்பதுதான்.

ஷாஜகான் அவரது மனைவி மும்தாஜ் நினைவாக கட்டிய தாஜ்மஹாலை போலவே ஒரு சிறிய தாஜ்மஹாலை முதியவர் ஒருவர் அவரது மனைவி நினைவாக கட்டிவருகிறார். உத்தர பிரதேசத்தை சேர்ந்த பைசுல் ஹசன் காதிரி (77). இவரது மனைவி பேகம் டாஜ்முல்லி. இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு காலமானார். மனைவியின் மறைவிற்கு பின்பு அவரது நினைவாக ஒரு சிறிய தாஜ்மஹாலை கட்ட தொடங்கியுள்ள பைசுல், அவருக்கு சொந்தமான 5000 சதுர அடி நிலத்தில், ஆக்ராவில் உள்ள நிஜ தாஜ்மஹாலை போலவே சிறிய தாஜ்மஹாலை கட்டிவருகிறார். இதுவரை இந்த குட்டி தாஜ்மகாலுக்கு ரூ.20 இலட்சம் வரை செலவு செய்துள்ள இவர், அவரது மனைவியின் நினைவகம் இந்த குட்டி தாஜ்மகாலின் மையப்பகுதியில் அமையுமாறு வடிவமைத்துள்ளார். மனைவி மீதுகொண்ட அதீத அன்பால், குட்டி தாஜ்மகாலை கட்டிவரும் பைசுல், தான் இறந்தபின்பு தன்னையும் மனைவியின் அருகில் அடக்கம் செய்ய வேண்டுமென உயில் எழுதிவைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டுமொரு ஷாஜகான்




அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பெண்ணொருவர் 106ஆவது வயதில் திருமண பந்தத்தில் இணைந்துள்ளார். மர்ஜோரி ஹெம்மேர்ட் எனும் இப்பெண்ணை 73 வயதான கெவின் கிரவ்போர்ட் என்பவர் திருமணம் செய்துள்ளார். இவர்கள் இருவரும் மெல்பேர்ன் நகரிலுள்ள முதியோர் இல்லமொன்றில் வசிக்கின்றனர். மூன்று வருடங்களுக்கு முன்னர் இவர்கள் முதல் தடவையாக சந்தித்தனராம். 106 வயதான மாஜோரிக்கு இதுவே முதலாவது திருமணமாகும். நாம் இருவரும் ஒருவருக்காக ஒருவர் அன்பினால் உருகுகிறோம். பழைய நண்பர்களைப் போல் நாம் பழகினோம் வயது வித்தியாசம் ஒரு பொருட்டாக இருக்கவில்லை என்கிறார் மர்ஜோரி ஹெம்மேர்ட். மர்ஜோரி மிக இனிமையாக பழகுபவர். உற்சாகமானவர் என்கிறார் அவரின் கணவரான கெவின் கிரவ்போர்ட். மர்ஜோரி முன்னர் நூலக ஊழியராக பணியாற்றியவர். அவர் தனது 96ஆவது வயதில் முதல் தடவையாக வெளிநாட்டுப் பயணமாக ஐரோப்பாவுக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது.



## முதல் சந்திப்பில் முடிந்தது திருமணம்

## சாதனை






அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்த 63 வயதான Philip Patterson எனும் நபர் புனித நூலான பைபிளை தனது கையினால் நான்கு வருடங்களை செலவழித்து எழுதி முடித்து அசத்தியுள்ளார். இதற்காக 2,400 வெற்றுத்தாள்களைப் பயன்படுத்திய அவர் பைபிளில் காணப்பட்ட 7,88,000 சொற்களையும் எழுதுவதற்கு நாள்தோறும் 14 மணித்தியாலங்களை செலவு செய்துள்ளார்.

பார்ப்பதற்கு கடலின் நடுவில் படகு மரங்களுடன் நகர்ந்து செல்கின்றதுபோல காட்சியளிக்கின்றதா? அதுதான் இல்லை. அந்த சுவாரசியத்தை வாசித்துத்தான் பாருங்களேன்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள ஒலிம்பிக் கிராமத்திற்கு அண்மையிலுள்ள வாவி ஒன்றில் கைவிடப்பட்ட படகில் மரங்கள் வளர்ந்து குட்டிக்காடு போன்று தோற்றமளிக்கின்றது. இது அச்சூழலின் பின்னணியுடன் பார்க்கும்போது மிகவும் வனப்புடையதாகத் தோன்றுவதுடன் சுற்றுலாப் பயணிகளையும் வெகுவாகக் கவர்ந்து வருகின்றது.





## கைவிடப்பட்டாலும் கவர்ச்சிதான்...